# நறுமுகை

## புதுவசந்தம் – சிறப்பிதழ்

'நறு மொழியூறும்
நறையுறு முகை'

இதழ் 04



தமிழ்ச் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுமுகை

புதுவசந்தம் - சிறப்பிதழ்

## இதழ்-04

98ஆவது செயற்குழு

தமிழ்ச் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ச் சங்க கீதம்

புகழ் திகழ் தமிழ்மகள் புவிமீ தாளும்
பொன்னாள் வருக! வருக!
மகிழ்வுறு தமிழ்நில மாந்தர்கள் பண்பு
மலை விளக்காகவே ஒளிர்க
சகலரும் ஒருதாய் தன் பிள்ளை கள்போல்
சமத்துவமாகவே வாழ்க
தனித்துவம் காத்திட எழுக! எங்கள்
தமிழ்க் குல நெறி தளைக்க
தாயக மணிக்கொடி துலங்க
பனித்திடு மலைசூழ் பழநகர் பேரா
தனையுயர் தமிழ்க் கலை மன்றம்
வளர்க! வளர்க! வளர்க!
மானிடம் போற்றிட வளர்க!

வளம்தரு மாவலி நதிமருங் கமைந்தபே
ராதனைப் பல்கலை மன்றில்
விளைந்திடு பயிராய் விளங்கிடு சங்கம்
வீறு கொண்டிலங்கி மிளிர்க
இளம்தமிழ் மாணவர் இன்கலைக்கோட்டம்
இவ்வுலக குளவரை துலங்க
ஈழமணி நாடு வுயர்க! எங்கள்
நாளைய வாழ்வும் உயர்க
நமதிறை அருண்வழி பொலிக
பாளையின் குளிர்தரு மலைசூழ் பேரா
தனைத் தமிழ்ப் பணியகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!
பல்லாண் டுயர்வுடன் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சாங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகம்

## 98 ஆவது செயற்குழு - 2024

❖ தலைவர்
செல்வி. கஜனி சிவராஜா

❖ செயலாளர்
திரு. சுகுமாரன் துவாரகன்

❖ பொருளாளர்
திரு. பர்னாந்து டக்சன்

❖ உப தலைவர்
செல்வி. சவீன் ஆர்த்தி சந்திரசேகரம்பிள்ளை

❖ உப செயலாளர்
செல்வி. விருட்சிகா கதிர்காமத்தம்பி

❖ இதழாசிரியர்கள்
செல்வி. சிவநேசன் சிவசந்தியா
செல்வி. சந்திரகுமார் ஹேஷ்ருதி

❖ ஊடக செயலாளர்
திரு. குகனேந்திரன் சஞ்சயன்

❖ கல்விசார் ஒருங்கிணைப்பாளர்கள்
திரு. மயில்வாகனம் ஜேனுஷன்
செல்வி. ஆரணி குகதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- வாழ்த்துச் செய்தி
  - பெருந் தலைவரிடம் இருந்து...
  - பெரும் பொருளாளரிடம் இருந்து...
  - கணக்காய்வாளரிடம் இருந்து...

- நறுமுகை வரலாறு

- எழுத்துரு
  - தலைப்பிட மாட்டேன்
  - யாமிருக்க பயமேன்
  - சவால்களை சாதனைகளாக்க இளையோரை வலுப்படுத்துவோம்
  - மரகத லிங்கம்
  - வறுமையின் விடியல்
  - இடைச்சுரண்டல்
  - மெய்ப்பொருள் காண்பதறிவு
  - சூழல் பாதுகாப்பு
  - பாலின சமத்துவம் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்.
  - புதிய அர்த்தம்
  - தமிழினி மெல்லச்சாகும்
  - கமலி... (களம் கண்ட காதலின் கதை)
  - நயத்தக்க நாகரிகமும், மனித விழுமியங்களும்.
  - மழை ஒரு இயற்கையின் கொடை
  - போதையற்ற எதிர்காலத்தை உருவாக்குவோம்..
  - சக்தியும் சடமும்...
  - ஈரநிலங்கள் இயற்கை அன்னை தந்த கொடைகள்
  - கதையின் தலைவன் காதலன்...
  - தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான விளம்பல்

- கவிதைகள்
  - எனக்குள் ஒருத்தி
  - பேய்
  - தேசபக்தியுள்ள மாந்தர்கள்
  - வார்ப்புகளில் வனையப்பட்டவள்
  - சிறிதாய் ஓர் வரம் வேண்டும்
  - உயிர் நீர்
  - மாய நாட்காட்டி...
  - பேராவின் மாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ மீண்டெழுந்தவள்
➢ விவசாயம்
➢ எழுத்து
➢ ஜன்னலோரம்
➢ வாழ்க்கை
➢ பொறுமை
➢ தஞ்சைப் பெருங்கோயில்
➢ மாதர் பெருமை
➢ நெடியோன்
➢ ஒரு ஆன்மாவின் அலறல்
➢ சின்னஞ்சிறு அதிசயமே
➢ வண்ணம்
➢ தரணி மேல் என்றும் தமிழ்
➢ வரட்சியில் வாடிய மனித உள்ளங்கள்
➢ நிம்மதி எங்கே ?

✓ ஓவியங்கள்

அட்டை படம் வடிவமைப்பு

❖ திரு.பே.நீராஞ்சனன்



ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்றேனையது
தன்னேரிலாத தமிழ்

—சுவாமி விபுலானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



உன்னதமான மாபெரும் உயர்கல்விச் சாலை எமது பேராதனைப் பல்கலைக்கழகம். அற்புதமான இந்த கல்வி நிறுவனத்தின் நீண்ட பாரம்பரியமிக்க வரலாற்றில் தமிழ்ச் சங்கத்து மிகுந்த முக்கியமான இடம் உள்ளது. இங்கு பயின்று வரும் தமிழ்மொழி மூல மாணவர்கள் தமது கலாசாரத்தை அறிந்து கொள்ளவும் தங்கள் கலைத் திறன்களை வெளிக்கொணரவும் இம்மன்றம் தொடர்ச்சியாகப் பாடுபட்டு வருவது பாராட்டுக்குரியது.

கல்வி நிறுவனங்கள் புத்தகங்களில் காணப்படுகின்ற பாடங்களை மட்டும் போதிப்பதோடு அமைந்துவிடுவதில்லை. அவை மாணவர்களது ஆளுமை விருத்திக்கும் மாணவர்களது தலைமைத்துவ பண்பு வளர்ச்சிக்கும் மிகுந்த பங்களிக்க வேண்டும். உண்மையில் இந்த நோக்கங்களை நிறைவேற்றி பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் தொடர்ச்சியாக உன்னதமான பணிகளை மேற்கொண்டு வருவது மகிழ்ச்சி தருகிறது.

இப் பணிகளுள் ஒன்றே புதுவசந்தம் எனும் புதுமுக மாணவர்க்கான கலை விழாவாகும். இவ்விழாவைச் சிறப்புற நடாத்தி மாணவர்களுடைய ஆற்றல்களை மேடையேற்றி, அவர்களுக்குத் தன்னம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிக்கும் சங்கம், கடந்த சில வருடங்கள் போலவே இவ்வருடமும் மாணவர்களுடைய எழுத்தாக்கங்களை ஒருங்கு திரட்டி நறுமுகை என்கின்ற பெயரில் மலராக வெளியிடுகின்றது.

புதுவசந்தம் கவின்பெறவும், அதில் வெளியிடப்பட இருக்கின்ற மலர் மணம் கமழவும் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பாடுபட்டுழைக்கும் மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும், பங்களிக்கும் மாணவச் செல்வங்களுக்கும் மனமார்ந்த நன்றி உரியது.

**பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்**

**பெருந்தலைவர்**

**தமிழ்ச் சங்கம்**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் புதுவசந்தத்தை முன்னிட்டு வெளியிட இருக்கும் "நறுமுகை" என்னும் நூல், பல்கலைக்கழக இளங்கலைப் பருவத்தில் கால் பதிக்கும் புதிய மாணவர்களின் திறமைகள், ஆக்கங்களை திறனாய்வு செய்து வெளிக்கொணரும் முக்கிய கலைநூலாகும். இந்நூல்,மாணவர்களின் எழுத்துத் திறன்களையும், ஆழமான சிந்தனைகளையும் பல்கலைக்கழகத் தமிழ்ச் சமூகத்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்தும் ஒரு ஊடகமாகவும், அவர்களின் படைப்பாற்றலைப் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியிலும் மற்றும் அதற்கு அப்பாலும் எடுத்துச்செல்ல ஒரு அரிய வாய்ப்பாகவும் அமைகிறது.

பல்வேறு துறைகளில் தங்கள் எழுத்து மூலமான திறமைகளை வெளிப்படுத்தும் இளம் எழுத்தாளர்களுக்கு, "நறுமுகை" ஒரு சிறந்த வாய்ப்பாக விளங்கும். இது அவர்கள் எதிர்காலத்தில் பத்திரிகைகள், வெளியீடுகள் போன்ற பல்வேறு தளங்களில் தங்கள் ஆற்றலை மேம்படுத்தும் வாய்ப்பாக அமையும். தமிழ் இலக்கியம் மற்றும் நவீன வாசிப்பு உலகில் இளைஞர்கள் அடுத்த தலைமுறையாக மிளிர வேண்டும் என்பதற்கான ஒரு ஆரம்பத் தளமாக "நறுமுகை" அமையப்போகிறது.

2024 ஆம் ஆண்டிற்கான தமிழச் சங்க நிர்வாகக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்படும் புதுமுக மாணவர்களின் "புதுவசந்தம்" நிகழ்ச்சிக்கும், அதில் வெளியிடப்படும் "நறுமுகை" நூலுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முயற்சி, புது எழுத்தாளர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் ஆரம்ப வெற்றிக்கான முதல் படியாகத் திகழ்வதில் எமக்கு பெருமிதம்.

நன்றி!

**கலாநிதி S.K. நவரட்ணராஜா**

**பெரும்பொருளாளர்**

**தமிழ்ச் சங்கம்**

**பேராதனைப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினரால் நடத்தப்படுகின்ற புதுவசந்த நிகழ்வில் வெளியிடப்படுகின்ற நறுமுகை என்ற இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஒவ்வொரு வருடமும் புதுமுக மாணவர்களை வரவேற்று அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து தமிழ்ச் சங்கம் மேற்கொள்கின்ற பணி அளப்பரியதாகும். இந்த புதுவசந்த நிகழ்வில் தமிழ் கலாச்சார நெறிநின்று தமிழர்களின் உயர்ந்த பண்பாட்டினை உலகெல்லாம் பரப்பும் வகையில் புதுமுக மாணவர்கள் செயற்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். உங்கள் புதிய யாத்திரை தமிழின் மலர்ச்சியை மேலும் கூட்டும் என நம்புகிறோம். அறிவு, ஆன்மிகம் மற்றும் சமூக சேவையில் இணைந்து செயற்பட்டு தமிழ்ச் சங்கத்தை உயர்நிலைக்கு கொண்டு செல்ல உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் எமக்கு அவசியமானது. எங்களோடு சேர்ந்து தமிழின் ஒளியை உலகம் முழுவதும் பரப்பும் பயணத்தில் வெற்றி பெற வாழ்த்துகிறோம். புதுமுக மாணவர்களின் புதிய ஆரம்பத்திற்கு நல்வாழ்த்துகள்!

**கலாநிதி ச.பாஸ்கரன்**
**கணக்காய்வாளர்**
**தமிழ்ச் சங்கம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுமுகை வரலாறு

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கமானது, தமிழெனும் ஒற்றைக்குடையின் கீழ் மொழியையும், பண்பாட்டையும் வளர்ப்பதோடு, ஏனைய பண்பாடுகளை நன்கறிந்து கொண்டு செயற்படுவதையுமே தன் நோக்காகக் கொண்டுள்ளது.

அவ்வகையில், பல்கலையில் தமது நூதன வருடமதில் அடியெடுத்து வைத்திடும் மாணவர்களின் மொழிசார், ஆளுமைசார், ஆற்றல் சார், திறன்சார் விடயப் பரப்புக்களுக்கு களத்தினை அமைத்துக் கொடுப்பதற்கான பெருவிருட்சமாய் நிழல் தனைத் தரும் வகையில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் வழங்கும் முதற் களமே "புதுவசந்தம்" எனும் வரவேற்பு நிகழ்வு.

இந்நிலையில், புதுமுக மாணவர்கள் சமகால நிகழ்வுகளைக் கருத்திற் கொண்டு தமிழுணர்வு மேலோங்க தமது எழுத்தாற்றலை வெளிப்படுத்திட வேண்டி ஒரு களம் தேவைப்பட்டது. அதற்கான அடித்தளமே "நறுமுகை" இதழாகும்.

நறுமுகையென்பதை (நறு+முகை) எனப் பதம் பிரித்து நோக்கின், நறு என்றால் வாசம் என்றும், முகை என்றால் மொட்டு என்றும் பொருள் கொள்ளப்படும். பூவானது மலர்ந்ததும் வாசம் வீசும் ஆனால் அது மொட்டு என்ற நிலையிலேயே வாசம் வீச வேண்டுமென்ற சிறப்புக் கருதி, மலரத்துடிக்கின்ற மொட்டுக்களின் எழுத்திற்கு அடையாளம் வழங்கிட நறுமுகை என இவ்விதழ் நாமம் கொண்டது.

மொட்டவிழ் மலரில் வாசனை மல்கும். மொட்டுக்களே இங்கு வாசனை பேசும் போது நாளை விடியல் பூக்கும் தருணங்களில் எத்தனை மணம் பேசும். மொட்டின் இணையான மாணவர்களின் இன்றைய எழுத்து வாசனையெல்லாம் அவர்கள் மலரும் வேளையில் இன்னும் பரந்து படர்ந்து தமிழ் பேச வேண்டும்.

அவ்வகையில், இதழியல் வரலாற்றில், முதலாவது இதழானது, புதுமுக மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கிய வண்ணம் 27.06.2021 அன்று 95ஆவது செயற்குழுவினரால் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாவது இதழானது 15.09.2022 அன்று 96ஆவது செயற்குழுவினராலும், மூன்றாவது இதழானது 25.07.2023 அன்று 97ஆவது செயற்குழுவினராலும் வெளியிடப்பட்டது.

அம்மரபின் தொடர்ச்சியை இறுகப்பற்றிக் கொண்டு, புதுமுக மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கிய வண்ணம், 98ஆவது வருடச் செயற்குழுவினரின் நான்காவது இதழானது உங்களது கைகளில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துரு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுமிதன்

மருத்துவப்பீடம்,

பேராதனை

2024.06.01

வாசகன்

வாசிக்காதவர் சங்கம்,

சமூகவலைத்தளம்.

கனம் பயமுறுபண்டிதரே,

தலைப்பிட மாட்டேன்

எதையெழுதுவதென்ற எண்ணமே அற்றவனாய் ஏதோ எழுதுகிறேன். வாசிக்கப்படாமல் தாள்களை தடவிக்கிடக்கவிருக்கும் என் வரிகளுக்கு இதைத்தான் எழுதவேண்டும் என்ற இறுமாப்பு அவசியம்தானா? எழுத்தாளனென்று நானே எழுதிக்கொண்ட என் முகவரியில் எத்தனை பிரச்சினைகள் வருகின்றன. எழுதிமட்டுமே தீர்த்த என்விழிகள் எந்தப்புத்தகங்களையும் படித்ததில்லை ஆக எப்படி நான் சம்பாதித்துக்கொள்ளாத எனது வாசகன் எனது எழுத்துக்களை வாசிப்பான் என்று நம்புவது. அப்படியே நான் வாசித்து முடித்து ஓரளவு நல்ல எழுத்தாளனாய் வந்தாலும் இந்தச்சமுதாயம் எத்தனை வரிகளைப் பிறப்பித்து எனது முகவரிகளின் கதவுகளையே மூடச்செய்துவிடுன்றன தெரியுமா?

ஏதாவது அனுபவத்தைக் கொட்டித்தீர்த்திடலாம் என்று முத்திரைகளை ஒட்டுவதற்கு முன்பாகவே சமுதாயம் முந்தியடித்துக்கொண்டு அஞ்சல் கட்டளைகளை அனுப்பிவிடுகின்றது. அதுவும் தொழின்முறைக்கடிதங்களின் தலைப்பிடலில் "இனம், மதம், அரசியல் சார்ந்த எழுத்துக்களைத் தவிர்க்கவும்" என்ற வரிகள் படிக்கவில்லை என்று சொல்லிவிட்டு திருட்டுத்தனமாக படித்துவிட்டு வந்த நண்பனைப்போல் நாளைகள் மீதான பயங்களை விதைத்துக்கொண்டிருக்கின்றன. சின்னஞ்சிறு வயதுமுதலாய் இதே இனத்துக்குள்ளேயே வளர்ந்து இதே மதத்தில் மகிழ்ந்து இதே அரசியலில் உழன்று கொண்டிருக்கும் நான் அதைச்சார்ந்து எழுதாது எதைச்சார்ந்து தான் எழுதுவது. அப்படிக் கட்டளைகளோடுதான் எழுதவேண்டுமென்றால் ஒளி பூக்கும் மின்கம்பங்களுக்கு நீர்ப்பாய்ச்சிக்கொண்டிருக்கும் நாய்க்குட்டிகளிடம் கட்டளையிடுங்கள், அவை காலையில் எழுந்தவுடன் முக்கிமுனங்கியாவது நீங்கள் எதிர்ப்பார்த்திருக்கும் கட்டுரைகளைச் சுடச்சுட தந்திவிட்டு ஓடிவிடும்.

கையாலாகாத நானோ எனது அடுத்த கையால் கவிதை எழுதுவதற்கு எழுந்து போகின்றேன். காலடியில் வந்து விழுகிறது ஒரு ஏ.ஃபோ தாள், நான் என்ன கச்சான் சுத்துவதற்காகவா வருகிறேன், கவிதையெழுதப் போகிறேனடா எண்டு சொன்னதும் வாய்க்குள் அந்தத்தாளை திணித்து மூடி இது கவிதை எழுதுவதற்கான காணி நிலப்பரப்பு என்று சொல்லுகிறது மேலிடத்து உரிமங்கள். காசிருந்தும் பக்கத்துக்காணிகளை வாங்கிப் பயிர்ச்செய்வதற்கும் அனுமதியில்லையாம். கோபம் பெருக்கெடுக்க கவிதைக் கத்தரிக்காய்க் கொட்டைகளை குளத்தில் வாழும் மீன்களிடம் குப்பையாக அள்ளிக்கொட்டிவிட்டு பாகற்காய் தின்னும் பாலகனாய் கலங்கிய கண்களுடன் வாய்க்குள் திணிக்கப்பட்ட தாளை முழுங்கி விழுங்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போங்கடா போக்கத்தவனுகளே என்று போக்கற்ற புலமைகளை புதுமொழியில் திட்டிக்கொண்டு, என்றோ படித்த பள்ளிக்கூடப் புத்தகத்தை வாசித்து காலத்தைக் கடத்துகிறேன். "குப்பைகளை வீதியில் போடவேண்டாம்" என்ற வாக்கியம் கண்களை தட்டிக்கொள்கிறது. சாரளக் கம்பிகளின் இடையே வெளியே எட்டிப்பார்க்கிறேன். தரங்கெட்ட தரம் பத்து பெடியன் சோடாப் போத்தல் ஒன்றைப் போடுகிறான், எழுந்து சென்று கேட்டபோது "நானொண்டும் வீதியில போடேல்ல வாய்க்கால்ல தான் போடுறன்" என்றபடி தன்போக்கில் போய்க்கொண்டிருக்கின்றான்.

இலங்கை கல்வியமைப்பின் வெற்றியைக்கண்டு பெருமைப்பட்டவனாய், குறித்த விடயம் பற்றி முகநூலில் பதிவிடுகிறேன். ஐந்தே ஐந்து விருப்புக்கள் மாத்திரம் வந்திருந்தன. மறுவுருவாக்கம் செய்து ஒரு படத்தையும் செருகிக்கொள்கிறேன், ஐம்பது விருப்புக்கள் என்றாகியது, அப்படியே ஒரு காணொளியையும் இணைத்துக்கொண்டதில் ஐம்பது ஐந்நூறாகியது. எல்லாவற்றையும் அழித்துவிட்டு மீம்ஸ் போடுகிறேன் போறவன் வாறவனிடமிருந்தெல்லாம் விருப்புக்கள் வந்து குமிகின்றன ஆக இங்கேயும் நான் எழுத்தாளனாக தோற்றுப்போகிறேன்.

சரி ஒண்டுமே சரிவராது நானாக ஒரு புத்தகம் வெளியிடலாம் என்று ஒவ்வொரு அச்சகமாய் ஏறியிறங்கும் போது, பேசாமல் வீதியோரம் எறிகின்ற குப்பைகளை நானாகவே கூட்டிப் பெருக்கிவிடலாம் போலிருந்தது அவர்களது மரியாதையும் வரவேற்பும்.

எழுதச்சொல்லி அஞ்சல்போடும் அன்பான உறவுகளே தயவுசெய்து எல்லைகளை திணிக்காதீர்கள் நான் அபகரித்த காணிகளில் பயிர்செய்பவன் அல்ல, என் விதைகளுக்கு நிலம் கேட்பவன். விதையும் உண்டு விலையுமுண்டு, நீங்கள் நீள நிலம் தரும் வரை தலைப்பிட்டு தபால் தர விருப்பமில்லை.

இங்ஙனம்

விதைகளுடன்,

மதுமிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "யாமிருக்க பயமேன்"

உடல் வேறு நான் வேறாகிவிட்டேன். விபத்தில் சிக்கிய என்னுடல் வீதியில் மல்லாந்து கிடக்கிறது. பார்த்துப் பார்த்து வாங்கிய பொருட்களைப் பக்குவமாய் வறுத்தும் பொரித்தும் அரைத்தும் ஆக்கி ரசித்து சுவைத்து உண்டு கொழுத்த என்னுடலில், ஒழுங்காக ஓடிக்கொண்டிருந்த இரத்தம், ஓட்டைச் சிரட்டையில் விட்ட தண்ணீராய் வீணே ஓடிக் கொண்டு இருக்கிறது. பழுத்துப் போன மாம்பழம் காம்பினை விட்டுக் கழன்று வீழ்வது போல என்னுடலிலிருந்து நான் கழன்று விட்டதை உணர்கிறேன். எப்படியாவது என்னுடலிற்குள் புகுந்து உடம்போடு எழுந்துவிட ஆனவரை முயற்சிக்கின்றேன். இம்மிகூட முடியவில்லை. யாராவது என்னுடலை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால் நான் பிழைத்துவிட வாய்ப்பிருக்கிறது. எவருமே அந்த முயற்சியில் துளிகூட செயற்பட்டதாகத் தெரியவில்லை.

விபத்து நிகழ்ந்து இரண்டு நிமிடங்கள் கடந்துவிட்டது. அதற்குள் வீதித் திருவிழா கூட்டமாக மாறிவிட்டது. போக்குவரத்து நெருக்கடியில் வாகனங்கள் ஆமையாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. பேரூந்து வாகனத்தின் சாளரத்திற்கு வெளியே தலைகளை நீட்டி என்னுடலைப் பார்ப்பவர்கள் எல்லோருமே "ஆள் முடிஞ்சுதா" என்று வீதியில் நின்றவர்களிடம் விசாரிப்பது தெரிகிறது. பஸ் நகர்வதற்குள் செய்தியைத் தெளிவாக அறிவதில் அத்தனை ஆர்வம். அதைவிட அவர்கள் கைத்தொலைபேசியில் என்னை படம் பிடிப்பதுதான் முக்கியமான விடயமாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். வாகனங்களில் சென்றவர்கள் மட்டுமா? வீதியில் நின்றவர்களும் என்னைச் சூழ்ந்து நின்று படம் எடுப்பதும் எனக்கு ஒருவித வலியைத் தருகிறது. இந்த வலி என்னை எப்படித் தாக்குகிறது? எனக்குத்தான் இப்ப உடல் இல்லையே! ஆனாலும் எனக்கு வலிக்கிறது என்பது மட்டும் உண்மை. இதைத்தான் ஆத்மாவின் துடிப்பு என்று சொல்கிறோமா? ஆத்மாவிற்கும் வலி, மகிழ்ச்சி என்று எல்லாமே இருப்பதால்தானே "ஆண்டுதிதி" கொடுத்து ஆற்றுப்படுத்துகின்றோம். இப்போது நான்கு நிமிடங்கள் கடந்து விட்டன. இதுவரை என்னுடலை யாரும் தொட்டுக்கூட பார்க்கவில்லை. எங்கிருந்தோ வந்த ஊடகவியலாளர்கள் சிலர் என்னுடலை விதம் விதமாக வெவ்வேறு கோணத்தில் படமெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தொலைக்காட்சி செய்திக்குத் தீனி கிடைத்திருக்கிற திருப்தி அவர்களுக்கு. நாளைய பத்திரிகையிலும் இது செய்தியாக பிரசுரிக்கப்படும். அதே பத்திரிகையில் எனது மரண அறிவித்தலும் வெளிவரலாம். யார் கண்டது? அவர்களை கோபித்து பயனில்லை. அவர்களுடைய தொழிலே அவ்வாறு இருக்கும் போது எப்படி குறை காண்பது?

டயானா இளவரசியையும் விபத்து நடந்தவுடன் படம் பிடித்தவர்கள் இருக்கும் போது என்னுடலைப் படம் பிடிப்பதில் மட்டும் தவறு சொல்ல முடியுமா? இங்கிலாந்து எங்கே? இலங்கை எங்கே? இங்கிலாந்தே அப்படியாகும் போது..... இலங்கை? சவப்பெட்டி விற்பவர் கூட காலையில் கடை திறக்கும் போது இன்றைக்கு நான்கு பெட்டி விலைப்பட வேண்டும் என்றுதானே நினைப்பார். அதெல்லாம் அவர்களுடைய தொழில் தர்மம். அதைப் பிழையென்று கூற முடியுமா? கோபிப்பதுதான் நியாயமாகுமா? இதோ இருவர் என்னுடலை மிகவும் நெருங்கி வந்து உற்றுப் பார்க்கிறார்கள். இருவரில் ஒருவர் பதவியிலுள்ள அரசியல் பிரமுகர். மற்றவர் அவரது உதவியாளர். எங்கேயோ சென்று கொண்டிருந்தவர்கள் வாகனத்தை நிறுத்தி இறங்கி வந்து இருவரும் தமக்குள் ஏதோ பேசிக் கொள்கிறார்கள். முடிவில் என்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றிவிட்டுத் திரும்புகிறார்கள். ஆம் "ஆள் முடிஞ்சுது" அதுதான் அந்த பிரேரணை.

விபத்து நிகழ்ந்த இடத்தில் இன்னொரு விபத்து என்று சொல்லக் கூடிய வகையில் வேறு ஒரு அரசியல் பிரமுகர், இவர்களுக்கு எதிரானவர் அவர், இவர்கள் வாகனத்தைவிட்டு இறங்கி வந்து என்னுடலைப் பார்த்துவிட்டுத் திரும்பியதை அவர் கண்டும் காணாதது போலச் சென்றால் மக்கள் மத்தியில் அவருக்கு நல்ல அபிப்பிராயம் கிடைக்காது போய்விடும். அதனால் அவரும் வாகனத்தை விட்டு இறங்கி என்னுடலை நெருங்கிச் செல்கிறார். எனக்கு ஒரு நப்பாசை. அவராவது என்னுடலை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால் நான் பிழைத்திடுவேன். முன்னையவர்களின் நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவர் தோற்கடிப்பார் என்று நம்பிக்கொள்கிறேன். என்னுடலின் அருகே சென்றவர் உதட்டை பிதுக்கிக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்புகிறார். முன்னையவர்களுடன் அருகே சென்று கைகுலுக்குகிறார். இப்போது அவர்களும் இருவரும் கூடி நிற்பதை ஒரு சிலர் படம் பிடிக்கிறார்கள். அபூர்வமான காட்சிதானே! பிடிக்கட்டும். அதனால் எனக்கென்ன நஷ்டம். அவர்கள் இருவரும் அங்கிருந்து நழுவுகின்றனர். அவ்வாறே வீதியில் கூடி நிற்பவர்களும் மெல்ல மெல்ல கழன்று கொண்டிருக்கின்றனர். அந்த இடத்தை புதிதாக வருபவர்கள் நிரப்பிக் கொள்கிறார்கள். புதியவர்களுக்கு இடம் கொடுத்து பழையவர்கள் விலகுகின்ற உயர்ந்த பண்பைக் காண்கிறேன். புதிதாக வருபவர்கள் என்னுடலை நெருங்கி நின்று பார்த்து திரும்பி வீதியோரமாக நின்று உரையாடுகின்றனர். யாரோ ஒருவர் என் உடல் அருகே நின்று கொண்டு "தம்பி யாராவது ஒரு ஆட்டோவைக் கொண்டுவாங்கோ" ஆளைக் கொண்டு போவோம் என்று ஆதரவு குரல் எழுப்புகிறார்.

அதுவரை ஆங்காங்கே சற்று தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோக்கள் அவ்விடத்தை விட்டு நகரத் தொடங்கி விட்டன. ஏற்கனவே இப்படியான ஒருவரைத் தூக்கிச் சென்று மருத்துவமனையில் சேர்த்துவிட்ட புண்ணியத்துக்கு பொலிஸ் விசாரணை அது, இது என்று ஐந்தாறு தடவை அலைந்திருப்பார்கள். அதனால் இந்த வம்பு வேண்டாம் என்று ஒதுங்கிக் கொள்கிறார்கள். அவர்களையும் குறை சொல்ல முடியாது. விபத்தில் சிக்கிய ஒருவரை மருத்துவமனைக்கு கொண்டு சேர்ப்பவருக்கு "அரசாங்க வெகுமானம் கொடுக்கப்படும்" என்ற ஒரு சட்டம் கொண்டு வந்தால் மட்டுமே உயிர்கள் பாதுகாக்கப்படும். உடலை விட்டு நான் வெளியேறி விட்டேனே தவிர, எனது அடுத்த நிலை என்னவென்று எதுவுமே விளங்கவில்லை. உடலை விட்டு உயிர் வெளியேறுவது மரணமென்றால் பல சத்திர சிகிச்சைகளில் மனித உயிர் வெளியேறி மீண்டும் உட்புகுந்து வாழ்வது எங்ஙனம் சாத்தியம்? இந்த வாதத்தை வைத்துக் கொண்டுதான் மீண்டும் என் உடலிற்குள் நான் புகுந்துவிட முடியும் என நம்புகிறேன். நம்பிக்கைதானே வாழ்க்கை. வைத்தியரும் வைத்தியத்தை தொடங்குமுன் "வெரி சிம்பில்" என்று தைரியமூட்டுவது நாம் வாழவேண்டும் என்பதற்காகத் தானே!

இப்பொழுது ஒருவர் என்னுடலை தொட்டு தூக்கித் தன் தோளில் கிடந்த துவாயால் என் தலைக்கு கட்டுப்போடுகின்றார். அதுயார்? அட கடவுளே! ஆண்டவா........ திருநீற்றுப்பிச்சை. ஆம் அவரேதான். வெள்ளிக்கிழமைகளில் என் வீட்டு வாசலில் வந்து நான் கொடுக்கும் இரண்டு ரூபாயை வாங்கிச் செல்லும் எத்தனையோ யாசகர்களில் இவரும் ஒருவர். வரும்போது குளித்து சுத்தமாக நெற்றி நிறைய திருநீறு பூசிக் கொண்டு இரண்டு ரூபாய் அளவில் சந்தனப் பொட்டு வைத்து அதற்குள்ளே புதிய ஒரு ரூபாய் அளவில் குங்குமம் வைத்துக் கொண்டு சிறந்த சிவபக்தராகவே அவர் பிச்சை எடுக்க வருவதுண்டு. **"இரக்கப்போனாலும் சிறக்கப்போ"** என்ற முதுமொழி புரிந்த மனிதர். இப்போதுங்கூட அதே திருநீற்றுப் பூச்சு, அதே சந்தனம், அதே குங்குமம். இன்றைக்கும் அதே வெள்ளிக்கிழமை. எல்லாம் அப்படியே இருக்க ஒரு சிறிய மாற்றம். இன்று அவர் என்னுடைய உதவியை எதிர்ப்பார்க்கவில்லை மாறாக எனக்கு உதவிக் கொண்டிருக்கின்றார். அங்கே இருந்தவர்களின் ஒருவரின் கைத்தொலைபேசியை வாங்கி யாருக்கோ அழைப்பையெடுக்கிறார். அடுத்த சில நிமிடங்களில் என்னை நோக்கி அம்புலன்ஸ் வண்டி விரைந்து வருகிறது. அதிலிருந்து இறங்கிய ஊழியர்கள் உடன் சேர்ந்து வண்டியில் எனது உடலை ஏற்றிவிட்டார் திருநீற்றுப்பிச்சை.

இப்போது வண்டி மருத்துவமனையை நோக்கி விரையத் தொடங்குகிறது. என்னுடலுக்கு கையசைத்து விடை தந்துவிட்டு எதிர்த் திசையில் நடந்து செல்கிறார் திருநீற்றுப்பிச்சை. வைத்தியர்களின் பலமணி நேர போராட்டத்தின் பின் என்னுடலிற்குள் நான் ஒருவாறு புகுந்துவிட்டேன். உடலை மெல்ல மெல்ல அசைத்துப் பார்க்கிறேன். கண்விழித்து பார்த்தபோது என்னை காப்பாற்றிய திருநீற்றுப் பிச்சையைத் தேடியது என் கண்கள். அச்சமயத்தில் என் கண்களில் அங்கிருந்த நாட்காட்டி ஒன்று தென்பட்டது. அதில் அழகிய படம். அப் படத்தின் கீழ் ஒரு வாசகம் **"யாமிருக்க பயமேன்".**

**-யோ. விஸ்வவிநோதினி**
**விஞ்ஞானபீடம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவால்களை சாதனைகளாக்க இளையோரை வலுப்படுத்துவோம்

நாளைய உலகின் தலைவர்கள், நவீன உலகின் தூண்கள், உலகின் மூலை முடுக்கெல்லாம் நுணுகி ஆராய்ந்து மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவர்கள். கணத்துக்கு கணம் மாறும் இவ்வுலகினைத் தம் கைகளுக்குள் அடக்கி, தம் ஆட்சியை நிலைநாட்டக் கூடிய வருங்கால விஞ்ஞானிகள் இவர்கள் என்று இந்த உலகமே வழிமேல் விழி வைத்து காத்துக் கிடக்கின்றது. அந்தளவு எதிர்ப்பார்ப்பிற்குரியவர்களாக இன்றைய இளையோர் காணப்படுகின்றார்களா? எதிர்காலம் மட்டுமே அவர்களுக்குரியதா? அவ்வாறெனில் இளையோரின் நிகழ்காலம் முக்கியத்துவமற்றதா? என்பவை தொடர்பாக சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னதான் இன்றைய இளைய தலைமுறையினர் தடம் புரண்டு வழிதவறிச் செல்கின்றனர் எனக் குறைகள் கூறினாலும் உரிய முறையில் அவர்களை வழி நடாத்துகின்ற போது சிறந்ததொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவார்கள் என்பதில் ஐயமில்லை.

மனித வாழ்க்கையில் குழந்தைகளாகி பின் சிறுவர்களாகி கட்டிளமைப்பருவத்தினராக வளர்ச்சியடைந்து பின் எண்ணிலடங்காத ஆசைகளையும் கொண்டு தம்மை அடக்குமுறை சமூகமாக உணர்ந்து சுதந்திரத்தை பெறத்துடிக்கின்ற ஒரு வயதுக் கூட்டத்தினரையே இளையோர் என அடையாளப்படுத்தலாம். சமூகம் அவர்களை நாளைய உலகின் உள்ளீட்டு சக்தியாகவும் வருங்காலத் தலைவர்களாகவுமே நோக்குகின்றது. இளையோரின் வெற்றிகளிலும் தோல்விகளிலும் குடும்பம், பாடசாலை, சமூகம் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது பிறந்த குழந்தை குடும்பத்திலுள்ளவர்களை பார்த்தே வளர ஆரம்பிக்கின்றது. அது போல பாடசாலைச் செல்கின்ற சிறுவர்கள் சூழவுள்ள நண்பர்கள், ஆசிரியர்களைப் பார்த்தே கற்றுக்கொள்கின்றனர்.

அந்த வகையில் குழந்தை பிறந்தது முதல் கட்டிளமைப் பருவத்தை அடையும் வரை ஏற்படும் பெரும்பாலான சவால்களையும், பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்வதற்கு பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் துணை நிற்கின்றனர். ஆனால் இது போன்ற நிலைமைகள் பிற்காலத்தில் ஏற்படும் போது அவ்வாறிருப்பதில்லை என்பதே உண்மை ஆகும். இளமைப் பருவத்திலே ஏற்படும் பிரச்சினைகளை அவர்களே முகங்கொடுத்து தீர்த்துக்கொள்ள வேண்டி ஏற்படுவதனை சுமையாகக் கருதுகின்றனர். இங்குதான் குடும்பத்திற்கும் இளையோருக்குமிடையே இடைவெளி ஏற்படுகின்றது. இதுவே அவர்களுக்கான முதலாவது சவாலாக நோக்கப்படுகின்றது.

பெரும்பாலான சமூகங்களிலே பிள்ளைகளின் கல்வி, அவர்களின் வருங்காலம் என்பவற்றை குடும்பமே தீர்மானிக்கின்றது. இதற்கு பிள்ளைகள் உடன்படாத நிலையில் காணப்படும் போது அவர்களின் இடைவெளி இன்னும் அதிகரித்து குடும்ப முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அத்தோடு இளையோரின் நெறிப்பிறழ்வு, மனமுறிவு என்பவற்றில் தொடங்கி இன்று சமூகத்தில் காணப்படும் தற்கொலைக் கலாச்சாரம் வரை செல்வதனை அவதானிக்கலாம். எனவே பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களைப் புரிந்து கொள்வதில் குடும்பத்திற்கு முக்கியமான பொறுப்பு உண்டு. ஒவ்வொரு குடும்பத்தாலும் இது நிறைவேற்றப்படாது போனால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியானதாகவே அமையும்.

மேலும் இன்றைய இளைய சமுதாயத்தின் மீது சவால்களை அள்ளிவீசும் ஒரு இடமாகப் பாடசாலை அமைந்துள்ளது. அதாவது மாணவர்களின் பரீட்சையையும் மதிப்பெண்ணையும் மட்டுமே எதிர்பார்ப்பாகக் கொண்டு இயங்குகின்ற பாடசாலைகள் அவர்களிடத்தில் பல்வேறு திறன்கள் இருப்பதனை அடையாளம் காண மறந்து விடுகின்றன. இதனால் பல இடங்களிலே கற்ற கல்விக்கும் செய்கின்ற வேலைகளிற்கும் தொடர்பில்லாத தன்மையும் காணப்படுகின்றது. அத்தோடு வேலையில்லாத பிரச்சினைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள், மாணவர்களின் ஒழுக்கம் சார் பிரச்சினைகள் என்பனவும் ஏற்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மேலும் இளையோருக்கு ஆதரவாக இலங்கையில் காணப்படும் பதின்மூன்று வருடகால கல்வித்திட்டம், தொழிற்பயிற்சி கல்வித்திட்டம் என்பவை கூட அவர்களைச் சவால்களுக்கே உள்ளாக்கியுள்ளது என்பதே உண்மை ஆகும். போதிய விளக்கமின்மை, உரிய நடைமுறைப்படுத்தலின்மை, கௌரவம் போன்றவற்றால் கட்டுண்டு இளைய சமூகம் தோற்றுக் கொண்டிருக்கிறது. ஏனெனில் சமூகம் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு கொடுக்கும் அந்தஸ்தினை தொழிற்பயிற்சி மூலம் பெறுகின்ற பட்டத்திற்கு கொடுப்பதற்கு தயாரில்லை என்றே சொல்லலாம்.

மேலும் பாடசாலைக் கல்வியில் இருந்து வெளித்தள்ளப்படுகின்ற மாணவர்கள் சமூகத்தில் தமக்கென ஒரு நிலையைப் பெற்றுக்கொள்வதற்கு போராட வேண்டி உள்ளது. அவர்களுக்கு பல்வேறு திறன்கள் இருந்தாலும் அதற்குரிய அங்கீகாரம் சமூகத்தால் மறுக்கப்படுகின்றது. இதனால் அவர்கள் மனவிரக்தியடைந்து ஒழுக்கமற்றவர்களாக குறிப்பாக போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களாக மாற்றமடைந்து சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்படுகின்ற நிலையில் காணப்படுகின்றனர். இவ்வாறானவர்களை இளையோர் அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள் போன்றவற்றில் இணைத்து வழி நடாத்தும் போது அவர்களின் எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.

எனவே தான் இளையோர் தீண்டத்தகாதவர்கள் அல்லர், அவர்கள் பட்டைத் தீட்டி செதுக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறைவுபட வேண்டும். அவர்கள் அவற்றை சுலபமாக வெற்றி கொள்ளக்கூடிய வகையில் வழிப்படுத்தப்பட வேண்டும். எதிர்காலம் பற்றிய தெளிவுபடுத்தல் அவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும். எதிர்காலத்திற்கு ஏற்ற கல்வி முறை போதிக்கப்பட வேண்டும். அத்தோடு இளையோரிடம் இருந்து சமூகத்திற்கும் சமூகத்தில் இருந்து இளையோருக்கும் வலுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆகவே இன்றைய நிலையிலே குடும்பம், பாடசாலை, சமூகம் என்பன சமாந்தரமாக இயங்கி இளையோரை நெறிப்படுத்துவதில் இணைந்து செயற்பட வேண்டும். அதாவது இளையோரின் கருத்துக்கள், திறன்களுக்கு மதிப்பளித்து அவர்களை உரிய முறையில் வழி நடாத்தினால் அவர்கள் சிறந்ததொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவார்கள் என்பதில் ஐயமில்லை. இன்றைய இளையோர் எதிர்கொள்ளக்கூடிய அனைத்து சவால்களையும் சாதனைகளாக மாற்றக்கூடிய அனைத்து திறன்களும் உடையவர்களாக அவர்கள் மாற்றப்பட வேண்டும். இவை குடும்பம், பாடசாலை, சமூகம் என்பவற்றலேயே தங்கியுள்ளது. கூட்டுப் பொறுப்புடன் இணைந்து செயற்பட்டால் நாளைய உலகின் தலைவர்களாக இன்றைய இளையோர் திகழ்வதனை தடுக்க முடியாது என்பது நிதர்சனமான உண்மை ஆகும்.

**-அ. கார்த்திகா**
**கலைப்பீடம்**



**"நம் குழந்தைகளின் நாளை வளமாக இருக்க, நாம் நம்முடைய இன்றைய நாளை தியாகம் செய்ய வேண்டும்"**

-ஆ.பெ.ஜெ. அப்துல்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரகத லிங்கம்

சபரி தனது B.A History படிப்பினை நிறைவு செய்து இன்றோடு ஆண்டு எட்டு ஆகிவிட்டது. வறுமையில் வாடும் அவன் குடும்பம், உடல்நலம் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் அவன் தாய், நல்மதிப்பெண் எடுத்தும் தன் கனவு நோக்கி பயணிக்க பல தடைகளைக் காணும் அவள் சகோதரி என மூவர் அடங்கிய குடும்பமே அது. ஒருநாள் திடீரென சபரிக்கு அவனது professor இடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது "என் அன்பான மாணவனே உனக்கு ஏற்ற ஒரு work க்கான appointment அனுப்பி இருக்கன் நீ அங்க போ" என எழுதப்பட்டிருப்பதைக் கண்ட சபரி ஒரு வாரம் கழித்து தன் தாயிடமும் தங்கையிடமும் விடைபெற்றுக்கொண்டு திருச்சிராப்பள்ளியில் உள்ள பள்ளிப்படை எனும் ஊரினை நோக்கிப் புறப்பட்டான்.

சரியாக அதிகாலை நான்கு மணியளவில் கோமானூரில் இருந்து புறப்பட்டு பள்ளிப்படையை அடைய மறுநாள் அதிகாலை ஒரு மணியாகி விட்டது. பயண அசதியில் வந்து கொண்டு இருந்த சபரி தொலைவில் ஒரு வெண்ணிறப் புகை வருவதையும் ஏதோ ஒரு நெருப்புப்பிழம்பு இருப்பதையும் பார்த்து தனது பெட்டியை அங்கேயே போட்டு விட்டு கொள்ளிவாய்ப் பேயென ஓலமிட்டு தலைத் தெறிக்க ஓடியவனை சாமிக்கண்ணு எனும் விவசாயி தடுத்து "என்ன நடந்தது" எனக் கேட்க அவன் கூற அவர் கூறினார்.

"அடேய் தம்பி அறுவடைக்குப் பின் வயல்களில் தீ வைப்பது எங்கட பழக்கம் அப்பு இளந்தாரி பொடியன் இத பாத்து பயப்படலாமா என்னோட வா! ஆமா நீ எங்க போறாய் என்டு என்கிட்ட சொல்லலியே, ஆமா நீ எங்க போற அப்பு?"

"ஐயா! நான் இந்த ரகுபதி பாண்டியன் ராஜா அரண்மனைக்குப் போறன் என்று சொல்ல."

"என்ன வேலை விடயமா போற என்று அவன் கேட்க இவன் பதில் கூறியும்" இவ்வாறாக இருவரும் கதைத்துப் பேசி அரண்மனையை அடைவதற்குள் காலை நான்கு மணியாகிவிட்டது. "அண்ணன் இந்தாங்க இந்த ஐநூறு ரூபாவ வைச்சுக்கோங்க" என்று காசை நீட்ட சாமிக்கண்ணு மறுக்க அவன் பேசி சமாளித்துக் கொடுத்து நன்றி கூறி அனுப்பினான்.

என்னடா இது கேட்டு பூட்டி இருக்கு தனக்குள்ளே கூறிக்கொண்டு கேட்டினை தட்டுவதைப் பார்த்த அரண்மனை வேலைக்காரி சென்று ராஜாவிடம் கூற கேட் திறக்கப்பட்டது. ராஜாவின் பணிப்பெண் ஆனந்தி சபரியை வரவேற்று அரண்மனையின் தங்குமிடத்தில் விட்டு விட்டு "ராஜா உங்களை காலை 7:30 மணியளவில் பார்ப்பதாகக் கூறினார்" என்று கூறிச் சென்றாள்.

சபரி தனது உடைமைகளை ஒழுங்காக்கம் செய்து விட்டு குளித்து விட்டுவர மணி 6:30ஆகி விட்டது. சரியாக ஏழுமணிக்கு உணவானது அறையில் இருந்தது. அப்பணிப்பெண் சரியாக நேரத்துக்கு வந்து ராஜாவிடம் கொண்டு போய்ச் சேர்த்தாள். ராஜா சபரியை வரவேற்று "என்ன சபரி எப்படி பயணம் என விசாரித்தார்." ராஜாவின் கேள்விக்குப் பதில் கூறி தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொயின்மெண்ட் கடிதத்தைக் கொடுத்தான். ராஜாவும் வாங்கிக் கொண்டு மாளிகையின் கிழக்குத் திசைக்கு வெளிப்புறத்தே உள்ள ஒரு கட்டிடத்திற்கு அழைத்துச்சென்றான். அந்த கட்டிடத்திற்கு சென்று பார்த்த போது சபரிக்கு பெரும் அதிர்ச்சி அவன் ராஜாவிடம் கேட்டான்.

"ராஜா இது என்ன உங்க அரண்மனையை விட பெரிதாக இருக்குதே இங்கேயா நான் வேலை செய்யப்போறன்."

"ஆம் சபரி இந்தக் கட்டிடம் தான் என்ட முன்னோர்கள் வாழ்ந்த இடம் இப்ப இது ஒரு அருங்காட்சியகமாக நாங்க வைச்சிருக்கம் இத பராமரிக்கிர பொறுப்பு இன்டையில இருந்து உன்ட வேலை பேசின படி உனக்கான சம்பளம் உன்ட வீட்ட போய் சேரும் உனக்கான சாப்பாடு, தங்குமிட வசதி இங்கேயே செஞ்சு வைச்சிருக்கம் உன்ட நிலைப்பாடு என்ன" "ராஜா எனக்கு இப்படி ஒரு வாழ்க்க அமையும் என நான் எதிர்பாக்கல நன்றி ராஜா"

"காலையில் நீ 8:00மணிக்கு மியூசியத்த திறக்கனும் 4:00 மணிக்கு பூட்டனும் மற்றும் உள்ள இருக்க கலைப்பொருட்கள பாதுகாக்கிறது உன்ட கடமை காலையில என்கிட்ட வந்து சாவிய வாங்கி மாலை நேரத்தில கொண்டு வந்து தரனும்." "ஓகே! ஓகே ராஜா."

இவ்வாறாக அங்கே வேலைக்குச் சேர்ந்து ஒரு சில ஆண்டுகள் கழித்து சபரி, ராஜாவின் நம்பிக்கைக்குரிய நபராக மாறினான். இருவரும் நண்பர்களாகினார்கள். ஒருநாள் ராஜாவின் அம்மா திடீரென மயங்கி கீழே விழுந்தாள். ராஜாவும் ராஜாவின் மனைவி சுருதியும் ராஜாவின் அம்மா திலகவதியை காரில் ஏற்றி ஹொஸ்பிட்டலுக்கு அழைத்துச் சென்றார்கள். ராஜாவின் அஸிஸ்டன் கமலாவிடம் விடயத்தைப் பற்றி தெரிந்து கொண்ட சபரி தனது motor bike ல் சென்று ஹொஸ்பிட்டலில் ராணி அம்மாவை போய்ப் பார்த்தான். ரகுபதியிடம் போய்க் கேட்டான். "ராஜா ராணி அம்மாவுக்கு என்ன ஆச்சு? திடீரென உடல் சுகயீனமா போயிற்றே!" என்றான் சபரி. ரகுபதி பேசும் நிலையில் இல்லாததைக் கண்டு அரண்மனைக்குத் திரும்பினான் சபரி. இரண்டு நாட்கள் கழித்து ரகுபதி சபரியை அழைத்து பேசத் தொடங்கினான்.

"சபரி என்ட அம்மாவுக்கு இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்து எனக்கு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்துது. நண்பா சபரி நேற்று ஒரு உருவத்தை என்ட அம்மா அறைக்கு பக்கத்துல பார்த்தன் அது எனக்கு தெரிஞ்ச உருவம் போல தோன்றிற்று."

"அப்படியா ராஜா நானும் இத சொல்லத்தான் காலைல ஓடி வந்தன் அதற்கு இடையில நீங்க என்னய பாக்கனும் என்று சொல்லிற்றிங்க. நீங்க சொல்ற மாதிரி உருவத்த உங்கட அறை முன்னாடியும் பார்த்தன் ராஜா." "என்னப்பா சொல்ற!!! ஒரு வேல பேய்,பிசாசாக இருக்குமோ?" "ராஜா இந்த 21st century பேயாவது பிசாசாவது அந்த உருவத்த பத்தி தெரிஞ்சுக்க என்கிட்ட சூப்பர் ஐடியா இருக்கு சொல்லட்டுமா"

"சொல்லு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என் நண்பன் ஒருத்தன் CBI ஆபிசராக இருக்கான் அவன வேணுமென்டா கூப்பிடவா?” “சரி கூப்பிடு.” ராஜாவிடம் சபரி விடைபெற்றுச் சென்று உடனே தனது நண்பனுக்கு போன் பண்ணி கதைத்தான்.”

“டேய் மச்சி உதயா உனக்கு ஒருவேல இருக்கு மச்சி” “விடயத்த சொல்லு மச்சி” சபரி பிரச்சினையை தெளிவாகவும் விளக்கமாகவும் கூறினான். “சரி மச்சி நான் வாரன்.”

இரண்டு நாட்கள் கழித்து “என்டா இது உதயன் வாரன் என்டான் இப்ப பொறையன் வாரானே இவன் வந்தா சும்மா இருக்க மாட்டானே எப்ப பாத்தாலும் கிரின்சு பண்ணி இருப்பானே!” என்று சபரி தனக்குள்ளே பேசிக் கொண்டான்.

“டேய் மச்சான் சபரி” என கத்திக்கொண்டே பொறையன் வர உடனே அவனை நிப்பாட்டி ரூமுக்குள் இழுத்துச்சென்று தனது உபதேசத்தை ஆரம்பித்தான்.

“டேய் மச்சான் நீ இங்க ஒரு வேலையா வந்திருக்க வந்த வேலைய மட்டும் பார்த்துற்று போ UNI ல படிக்கும் போது இருந்த மாதிரி இருக்காத மச்சான் என்ட வேலைக்கும் ஆப்படிச்சிடாத டா!”

“சரி சரி போதும் நீ நினைக்கற மாதிரி இல்லடா நான் இப்ப ஒரு CBI ஆபிசர் எனக்குத் தெரியும் எப்படி இருக்கனும் என்று சரி அந்த ரகுபதி கிட்ட அழைச்சுத்து போடா.”

“டேய் அவரு ராஜா டா” “இல்ல அவர் இப்ப என்ட கிலைன்டு”

“சரி சரி வா”

“ராஜா இது தான் என்ட நண்பன் பொறையன் நான் சொன்ன ஆள் இவந்தான்.”

“எல்லா விடயத்தையும் சொல்லிற்றிங்க தானே நீங்களும் இவரோட சேர்ந்து work பண்ணுங்க ஓகே”

சரி ராஜா” டேய் வாடா போவம் என்று பொறையனை அழைத்துக் கொண்டு சபரி போனான் . டேய் என்டா அந்த மனிசன் ஒழுங்கா பேசுறான் இல்ல” “டேய் அவங்கட அம்மாவுக்கு இப்படி நடந்ததுல இருந்து அவரு அப்படிதான் இருக்காரு.

“ஓகே ஓகே ”

“டேய் சபரி உனக்கு இந்த ராஜா குடும்பக் கதை தெரியுமாடா?” “தெரியாடா” “சரி சரி எல்லாத்தையும் கண்டுபிடிப்பம்.”

இவ்வாறாக மாதங்கள் பல ஓடின. கேஸில் எந்த வித முன்னேற்றமும் இல்லாததைப் பார்த்து ரகுபதி கோபித்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ராஜா உங்கட கேஸ் சோல்வாகிற்று இன்றைக்கு நான் குற்றவாளிய உங்கட கண் முன்னாடி கொண்டுவந்து நிப்பாட்டுரன் என கூறி பொறையன் ஆவேசமாகச் சென்றான்.”

இரவு வேலை நெருங்கி எல்லோரும் உணவு உண்ணச் சென்ற போது பொறையன் ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்ணை சபை நடுவே நிறுத்தினான். எல்லாரும் அதிசயத்து போனார்கள்.

“ரகுபதி , அத்தை நீங்களா என்றான்.” பொறையன் கூறினான் “மிஸ்டர் ரகுபதி நான் சொல்றத கேளுங்க உங்கட அத்தை தான் இதற்கு காரணம். எப்படி என்று தெரியுமா? முதல இவங்க யார் என்று தெரியுமா? இதன் அரண்மனை வாரிசு பட்டியல்ல இவங்கட பெயர் இருக்கு உங்கட மனைவி சுருதி உங்கட முறைப்பெண். இவங்க அவங்கட மகளை திருமணம் செய்து வைத்தது எதற்கு தெரியுமா உங்ககிட்ட இருக்கற மரகத லிங்கத்தை எடுக்கத்தான். அதன் தற்போதைய விலை நூறு கோடிக்கும் செல்லும் இது எப்படி தெரியுமென பார்கிங்கலா நீங்க எதற்கு சபரிய கூப்பிடிங்க என்றும் தெரியும் உங்கட மாமியாரின் பரிந்துரையின் பேரில் தானே?”

“ஆம் பொறையன்.” “அவங்க ஏன் குறிப்பிட்டு சபரிய கூப்பிட்டாங்க தெரியுமா இந்த மரகத லிங்கத்திட பாதுகாவலன் சோழசேகரன் வம்சாவழில வந்தவந்தான் இந்த சபரி உங்கட அரண்மனை மியூசியத்தில் இருக்கே ஓவியங்கள் அதுல சோழசேகரன்ட ஓவியம் இருக்கு அதை பார்த்து தான் இவங்க அவங்கட செல்வாக்க பயன்படுத்தி சபரிய இங்க வர வைச்சாங்க.”

“சரி நீங்க சொல்ற மாதிரி இருந்தாலும் என்ட அம்மாவுக்கு எப்படி இது தெரிய வந்தது இவர்தான் இன்னார்ர பேரன் என்று.” “சரியான கேள்வி கமலா மேடம் உங்கட அம்மா வீட்ட செர்ஜ் பண்ணுனப்ப இந்த புத்தகம் கிடைச்சது அது பத்தி ரிசர்ஜ் பண்ணுனப்போ அதுல பயன்படுத்தப்பட்ட எழுதுமையானது இருநூறு வருடம் பழமையானது என்பது தெரியவந்து.”

“சரி இதுக்கும் சபரிக்கும் என்ன சம்பந்தம்?”

“சம்பந்தம் இருக்கு ராஜா நான் முன்பே கூறியது போல சோழசேகரன்ட ஓவியம் மியூசியத்தில இருப்பது போல் இந்த புத்தகத்திலும் இருக்கின்றது இங்க பாருங்க

பார்த்திங்கலா கமலாட அம்மா விமலா இருக்காங்களே அவங்கட மூதாதையர்கள் வழிவழியாக பெண்களிடம் கூறிவந்துள்ளனர். இந்த பட்டியலில் விமலா 05 வது தலை முறை இதன் முதலாவது தலைமுறையில் உள்ள பெண் அமலவல்லி சோழசேகரனின் எஜமான் முத்தரையரின் மனைவிதான் இந்த அமலவல்லி. முத்தரையர் தனது சொத்துக்களில் பாதியை தனக்கு கீழ் வேலை செய்த ஏழைகளுக்கு எழுதி வைத்தார் இதற்கு சாட்சியாக சோழசேகரன் இருந்தார்.

இவ்வாறு சொத்துக்கள் போவதைக் கண்டு கோபங்கொண்ட அமலவல்லி தனது கணவனை விட்டு பிரிந்து சென்றார்.ஆனால் தன்னிடம் இருந்த மீதி பாதியை முத்தரையர் அமலவல்லியின் மீது எழுதி வைத்து அந்த மரகத லிங்கத்தை பாதுகாக்கும் பொறுப்பை சோழசேகரனிடம் கொடுத்து விட்டு இறந்து போனார்.இவ்வாறு நடந்ததை அறிந்த அமலவல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழசேகரனை சிறையில் அடைக்க ஆணையிட்டால் அதற்கிடையில் சோழசேகரன் அந்த மரகத லிங்கத்தை பாதுகாப்பான இடத்தில் வைத்து (அதாவது ரகுபதி பாண்டியன் ராஜா உங்கட மாளிகையில் வைத்து விட்டு) ஊரைவிட்டு நெடுதேசம் நோக்கி பயணம் செய்தார். இதனால் தன்னிலை மறந்த அமலவல்லி தனது சந்ததியினருக்கு காலங்காலமாக இந்த தேடல் பற்றிய உணர்வை கடத்திக் கொண்டு வந்தாள். ஆனால் இதில் இருந்து 06 வது தலைமுறையான சுருதி மட்டும் விதி விலக்காக தப்பித்துக் கொண்டாள். சுருதி தன் இளம் பிராயத்தை விமலாவோடு கழிக்கவில்லை. அவளுடைய அப்பா வேலனுடன் கழித்ததால் அவளுக்கு இதை பற்றி எதும் தெரியாது. ஆனால் அவளுக்கு உங்களுடன் திருமணம் நடக்க இருக்கும் போது விமலா கூறி இருக்கிறார் இவளிடம்.

ஆனால் சுருதிக்கு தன் குடும்பத்தின் கலை பொக்கிசமாக இருப்பதை விட அதனை விற்று பணம் சம்பாதிக்க எண்ணினால் அதற்கு மிஸ்டர் உங்களையும் அவள் சேர்த்துக்கொண்டாள். ஆனால் ராணி அம்மா இடம் கொடுக்காததால் அவர்களை தனது அம்மா விமலாவின் உதவியுடன் கொல்ல திட்டம் போட்டாள் அதற்கு உடந்தையாக உங்கள் வீட்டு பணிப்பெண்ணும் சேர்ந்து கொண்டாள்." "சரி அந்த மரகத லிங்கம் இப்ப எங்க என்று ரகுபதி கேட்டான்." அதற்கு பொறையன் கூறினான். "அது பாதுகாப்பான இடத்தில இருக்கு.காசுக்காக விற்க துடிக்கும் உன்கிட்டையும் உன் மனைவிக்கிட்டையும் , கொலை செய்ய முற்பட்டு அதை அடைய முற்பட்ட உன்ட மாமியாரிடம் அத கெடுக்க முடியாது

அந்த லிங்கத்த சோழசேகரனின் வம்சாவழியில் வந்த இந்த சபரிசேகரன் தமிழ்நாடு தொல்லியல் துறைக்கு கொடுத்துட்டான்.

ரகுபதி நீங்க நினைச்சிங்க இவ்வளவு காலம் உங்கட வீட்ட இருந்து என்று ஆனா இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிஞ்ச உங்கட அம்மா சபரிட அப்பா ஞானசேகரனை சந்திச்சு அவருக்கிட்டேயே இருபது வருடத்துக்கு முன்னாடி கொடுத்துட்டாங்க. இப்ப அந்த லிங்கத்த சபரி தமிழ்நாடு தொல்லியல் துறைக்கு கொடுத்து விட்டான்.":"ஓகே ஸ்டோரி ஓவர் மைடியர் பொலிஸ் ஆபிசர்ஸ் இந்த கமலா , விமலா, ரகுபதி ,ஆனந்தி(பணிப்பெண்), அடியாட்கள், அரசியல்வாதி எல்லாரையும் அரஸ்ட் பண்ணுங்க." "ஓகே சபரி கேஸ் close நான் புறப்படுறன். நீ இங்க இருந்து ராணி அம்மாவ பத்திரமா பாத்துக்கோ சரியா"

சபரியும் அவன்ட அம்மாவும் தங்கையும் ராணி அம்மா கூடவே இருந்து வந்தார்கள்.சபரிக்கு நல்ல வேலையும் சபரிட அம்மாவுக்கு நல்ல மருத்துவ உதவியும் சபரியும் தங்கைக்கு அவள் ஆசைப்பட்ட மருத்துவ படிப்பும் படிக்க கிடைத்து. இந்த கேஸினை திறன்பட கையாண்ட CBI ஆபிசர் பொறையனுக்கு பதவி உயர்வும் கிடைத்தது.

-செல்வகுமார் தியானுஜன்

விவசாய பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையின் விடியல்

குளிரான தென்றல் காற்று உடலை உரசிச் செல்ல ஒரு விதமான குளிரலைகள் நுனிக்காலைத் தொட்டுச்செல்லும் போது காலைப் போர்வைக்குள் இழுத்த போது ஒரு விதமான வெப்பம் சொர்க்கத்திற்கு வழிகாட்டியது. காலை ஐந்துமணி என்பதை அறியத்தர காட்டாவிநாயகர் ஆலயமணி "டாங்... டாங்..." என இனிய ஒலியை எழுப்பியது. அப்போது செல்வியின் தம்பி சிந்து செல்வியை இறுக அணைத்தபடி தூங்கிக்கொண்டிருந்தான்.

அத்தோடு ஆலய பஜனைகள் மனதிற்கு புத்துணர்ச்சியை அளித்துக்கொண்டிருந்தன. இவ் இனிமையான நேரத்தில் செல்வியின் தாய் "பிள்ளையேளே எழும்புங்கோ எழும்பி கொஞ்சநேரம் படிச்சிட்டு வீட்டுவேலைகளைச் செய்துட்டு பள்ளிக்கூடம் போங்கோ..." என்றாள். எல்லோரும் முணுமுணுத்தபடி எழுந்து தத்தமது வேலைகளைச் செய்தனர்.

இக்குடும்பத்தில் மூத்தபிள்ளை தான் செல்வி. இவளுக்கு இரண்டு தங்கையரும் ஒரு தம்பியும் உள்ளனர். செல்வியின் தாய் ஒரு ஆண்மகன் இல்லையென தெய்வங்களிடம் அலைந்து திரிந்து வேண்டி ஒரு ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். அவன் தான் சிந்து. ஆனால் அவனால் எதையும் தன் காதுகளால் கேட்கவும் முடியாது, அவனுக்கென்று இறைவன் சொந்தமான குரலையும் கொடுக்கவில்லை. சிந்துவிற்கு நான்கு வயது ஆனால் ஆறு வயதிற்கான புத்திசாதுரியம்.

செல்வியின் தந்தை பொன்னையா மிகவும் அமைதியானவர். இவர் சிறுகடற்றொழிலாளி. கடலில் பிடிக்கும் மீன், நண்டு, இறால்களை விற்றுக்கிடைக்கும் பணமே அவரின் குடும்பச் செலவு. செல்வியின் தாய் கோமதி வீட்டுவேலையே செய்கின்றாள். செல்வி இந்த வருடம் உயர்தரப்பரீட்சையில் விஞ்ஞானத்துறையில் தோற்றவிருக்கின்றாள். அவள் தனியார் வகுப்பிற்கு செல்வதில்லை. பாடசாலையில் கற்றவற்றையே வீட்டில் படிப்பாள். தனியார் வகுப்புக்களிற்கு செல்ல அவளிடம் போதிய பணமில்லை.

இவள் பாடசாலையில் மிகவும் கெட்டிக்காரி. போட்டிகளில் பங்குபற்றிப் பல விருதுகளைப் பெற்றவள். இவளது புத்திசாதுரியத்திற்காக பாடசாலையில் கல்வி கற்பிக்கும் முகுந்தன் சேர் இவளுக்குத் தேவையான பயிற்சிப் புத்தகங்களையும். கடந்தகால வினாத்தாள் புத்தகங்களையும் வாங்கிக் கொடுப்பார். அவருக்கு இவளது குடும்பநிலை பற்றித் தெரியும். செல்வியின் இரு தங்கைகளும் க.பொ.த சாதாரணதரம் படிக்கிறார்கள்.

செல்வி தனது வேலைகளை முடித்துவிட்டு பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாகி விட்டாள். "அம்மா இன்டைக்கு என்ன சாப்பாடு?" என்று கேட்டாள் செல்வி. தாயார் இண்டைக்கு பழஞ்சோற்றுக் குழையல் தான் என்று செல்விக்கும் அவளது தங்கைகளுக்கும் உருட்டி ஒவ்வொரு உருண்டைக்குழையல் கொடுத்தார். "இண்டைக்கு தம்பிக்கு கிளினிக் எல்லோ வேளைக்குக் கூட்டிக்கொண்டு போங்கோ..."என்று தாயாரிடம் கூறிவிட்டு தனது தங்கைகளையும் கூட்டிக்கொண்டு பாடசாலைக்குச் சென்றாள்.

செல்வி பாடசாலை முடித்துவிட்டு வீடு வந்த போது அவளது தாயார் திண்ணையில் இருந்தபடி பலமாக ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள். செல்வி, ஏனம்மா, கவலையா இருக்கிறீங்க ஏதும் பிரச்சனையா? என்றாள். இல்லையம்மா இண்டைக்கு கிளினிக்கில் அவனுக்கு அவசரமாக ஒப்பிரேசன் செய்யனுமாம் அதுக்கு யாழ்ப்பாண பெரிய ஆஸ்பத்தரிக்குப் போய் நான்கு மாதம் அங்கேயே நிக்கனுமாம் அப்பத்தான் அவனுக்கு சரி வருமாம். அதுதான் என்ன செய்யிறதுண்டு யோசிக்கிறேன். ஏன் யோசிக்கிறீங்கள் நீங்கள் போங்கோவன். இல்லையம்மா, நான் போனா யார் சமைக்கிறது? உனக்கும் இரண்டு மாதத்தில எக்ஸாம், தங்கச்சியளுக்கும் எக்ஸாம். அதுதான் யோசிக்கிறன்.

பரவாயில்லை அம்மா. நீங்கள் அப்பா வேலையால வந்தவுடன் பணத்தை வேண்டிக்கொண்டு போங்கோ நான் எல்லாத்தையும் பாக்கிறன். நான் இந்த வருசம் எக்ஸாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதாட்டிக்கும் பரவாயில்லை. அடுத்த வருசம் எழுதுவன். தம்பிக்கு ஒப்பிரேசனைச் செய்யுங்கோ என்றாள் செல்வி. அன்றிரவு நானும் தங்கச்சிகளும் மண்ணெண்ணெய் விளக்கைச் சுற்றியிருந்து படிச்சுக்கொண்டிருந்தோம். அப்பா வேலையால வந்து குளிச்சிட்டு திண்ணைல இருக்கும் போது அம்மா ஒப்பிரேசன் விசயத்தைச் சொன்னார். அப்பா தன்னிடமிருந்த கொஞ்சப்பணத்தையும் ரமேஸ் மாமாட்டயும் கடன் வாங்கித் தருவதாக அம்மாவிடம் சொன்னார். அன்றிரவு முழுக்க எனக்கு நித்திரையில்லை. ஏனெனில் எனது செல்லத்தம்பியைப் பிரிந்து ஒருநாள் கூட இருந்ததில்லை. 4 மாதங்கள் இருப்பதென்றால் கவலைதான் என்ன செய்வது?

இவ்வாறு தூக்கமின்றி யோசித்துக் கொண்டிருந்தபோது விநாயகனின் மணி ஒலித்தது. அம்மா வேளைக்கு எழும்பி யாழ்ப்பாணம் போற அடுக்குகளைச் செய்தார். அப்பா அதிகாலை மூன்று மணிக்கு எழும்பி கடலுக்குச் சென்று விட்டார். அம்மா தம்பியையும் வெளிக்கிடுத்தி ஆறுமணி பஸ்சுக்கு வெளிக்கிட்டார். தம்பி சிந்து தனது பாசைகளால் ஏதோ சொன்னான். அம்மா தம்பியையும் கூட்டிக்கொண்டு போய்விட்டார். அவன் சென்றவுடன் என் கண்களில் குளமாகக் கண்ணீர் நிறைந்தது. ஆறாப் பாய்ந்தோடியது. தங்கைகள் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர்.

நான் திண்ணையில் அமர்ந்த வண்ணம் இந்தமுறை எக்ஸாம் எப்படியாவது எழுதோனும் நான் மரிட்டில பாஸ் பண்ணி கொழும்பு பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற கனவுகளோடு இருந்தேன். எனது கனவுகள் நீரில் எழுதிய எழுத்துக்களைப் போன்று பயனற்று விடப்போகின்றதே என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது திண்ணைக்கருகே இருந்த பல்லி ச்ச்.....ச்ச்.. என்றது. நான் திடுக்கிட்டு யோசனைகளிலிருந்து மீண்டேன்.

ஒருவேளை எனது கனவுகள் நியமாகப் போகிறதா? என்று யோசித்துவிட்டு சட்டிபானைகளை கழுவிவிட்டு உலையில் அரிசி போட்டு வைத்துவிட்டு அப்பாவுக்காக காத்திருந்தேன்....

அப்பா மீன், இறால்களை விற்று மீதியிருந்த சூடை மீன்களைக் கொண்டுவந்தார். அதனையும் ஒரு குழம்பு வச்சிட்டு கொஞ்சநேரம் பௌதிகவியல் பாடத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். இவ்வாறு பல நாட்கள் கழிந்தன. முகுந்தன் சேர் என்னைப் பாடசாலைக்கு வருமாறு தங்கைகளிடம் சொல்லிவிட்டார்.

அதிகாலை எழுந்து சமைத்து வைத்துவிட்டு பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமானேன். அப்போது அப்பா என்னிடம் இண்டைக்கு அம்மாக்கு காசு அனுப்போனும் அவள் போய் ஒரு மாதம் ஆகிவிட்டது. ஆனால் என்னிடம் காசில்லை அம்மாட்ட விசயத்தை சொல்லுறத்துக்கு போனுமில்லை என்று என்னிடம் கூறினார். நானும் என்ன செய்வதறியாது கவலையோடு பாடசாலைச் சென்றேன். முகுந்தன் சேர் என்னை அழைத்து ஏன் இவ்வளவு நாளும் பள்ளிக்கூடம் வரல்ல என்று கேட்டார். நான் சற்றுத்தயங்கி நடந்தவற்றைக் கூறினேன். சேர் எனக்கு சில ஆறுதல் வார்த்தைகள் கூறினார்.

நான் வகுப்பறைக்குச் சென்றேன். அங்கு எல்லோரும் படித்துக்கொண்டும் பாஸ்பேப்பர்கள் செய்துகொண்டும் இருந்தனர். எனது நண்பி என்னோடு கதைக்கும்போது இப்ப ஒரு நெசவுத் தொழிற்சாலை திறக்கப்போயினமாம் அங்கு ஒருமாதம் ஐயாயிரம் சம்பளம் என்ற செய்தியையும் கூறினாள். அவ்விடயம் எனது மூளையில் ஆழமாகப் பதிந்து டிஸ்ரப் செய்து கொண்டிருந்தது. பாடசாலை முடிந்து வீடு சென்று சற்று நேரமாக யோசித்துக் கொண்டிருந்தேன்.

அப்பா ஆறு மணிக்கு வேலையால வந்துவிட்டார். நான் அப்பாவிடம், அப்பா நான் வேலைக்குப் போகப்போகின்றேன்.. என்றேன். அப்பா என்னை முறைத்துப் பார்த்தார். நான் நெசவுத்தொழில் பற்றியும் சம்பளம் பற்றியும் கூறினேன். ஆனால் அப்பா சம்மதிக்கவில்லை. இருப்பினும் காலை எழுந்து காட்டாவிநாயகரிடம் சென்றுவிட்டு நெசவுத் தொழிற்சாலைக்குச் சென்றேன். முதல்நாள் சற்றுக்கடினமாக இருந்தது. பின் சில நாட்கள் செல்லச் செல்ல பழகிக் கொண்டேன்.

ஒரு மாதத்தில் எனது சம்பளத்தையும் அப்பாவின் காசையும் அம்மாக்கு அனுப்பினோம். எனக்கும் இன்னும் இரண்டு மாதத்தில எக்ஸாம் என்ற கவலையிருந்தது. ஒருநாள் நெசவுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருந்தபோது ரமேஸ் மாமா முதலாளியிடம் கதைத்துவிட்டு என்னை வீட்டுக்கு வரச்சொன்னார். நான் பலவாறு யோசித்தவாறு சென்றேன். தம்பிக்கு ஏதும் நடந்துவிட்டதோ? என எண்ணியவாறு சென்றேன். அங்கு வீட்டு விறாந்தையில் அப்பாவின் காலில் கட்டுப்போட்டிருந்தவாறு அப்பா படுத்திருந்தார். உடலெங்கும் காயங்கள் நான் ஓடிச்சென்று அப்பாவைக் கட்டியழுதேன்.அப்பா என்னிடம் அழாதையம்மா என்றார். என்ன நடந்தது அப்பா என்றேன். அப்பா என்னிடம், நான் மீன் விற்றுக் கொண்டு போகும் போது ஒரு லொறி என்னை மோதியதால் விபத்துக்குள்ளானேன் என்றார்.

எங்கள் குடும்பத்தின் வறுமைக்கு ஒரு விடியல் கிடைக்காதா? என்று விநாயகனை வேண்டினேன். நான் பகல்வேலை மட்டுமன்றி இரவு வேலைக்கும் சென்று பணம் உழைத்து அப்பாவுக்கும் மருத்துவ செலவுகளை செய்தேன். எனது இந்த சிறுவயதிலேயே இவ்வளவு துன்பங்கள் வேறு யாருக்கும் கிடைக்கக்கூடாது என்று விநாயகனை வேண்டினேன். எனக்கு இன்னும் ஒரு மாதத்தில் எக்ஸாம் ஆனால் இரவு வேலைக்குச் செல்வதால் நன்கு படிப்பதுமில்லை. எனது வாழ்வு விடியாத இரவுப்பொழுதுகளாக நகர்கின்றன.

அன்று ஒருநாள் வேலை முடித்து வீடு திரும்பும்போது வீட்டில் முகுந்தன் சேர் உட்பட பல ஆசிரியர்களும் அதிபரும் வீட்டிற்கு வந்திருந்தனர். அவர்கள் என்னை அழைத்து ஒரு தொகைப் பணத்தை என்னிடம் தந்தார்கள். நான் ஏன் என்று கேட்டபோது அதிபர் செல்வி நீ க.பொ.த சாதாரணப் பரீட்சையில் 9ஏ எடுத்தமைக்கு எமது பாடசாலை சார்பாக இந்தப் பணத்தொகை தருகின்றோம் என்றார். அப்போது நான் விநாயகனின் வடிவில் இவ் ஆசிரியர்களை நினைத்து கைகூப்பினேன்.அந்தப்பணத்தை வைத்து அப்பாவிற்கு வைத்தியம் செய்தேன். அம்மாவுக்கும் அனுப்பினேன். பின் பாடசாலைக்குச் சென்று படித்தேன். எக்ஸாம் தொடங்கியது சகல பாடங்களுக்கும் தோற்றினேன். இவ்வாறு இறுதியாக உயிரியல் எக்ஸாமுக்காக படித்துக் கொண்டிருக்கும்போது வீட்டின் வெளியே அக்கா...அக்கா... என்று ஒரு மெல்லிய குரல் கேட்டது. நான் வெளியே சென்று பார்த்த போது என் கண்களையும் நம்ப முடியவில்லை காதுகளையும் நம்பமுடியவில்லை ஏனெனில் என் செல்லக்குட்டி சிந்து என்னை அழைத்தானா? என்று என் கண்களிலிருந்து நீர் ஆனந்தத்தில் பெருக்கெடுத்து ஓடியது.

பின் எக்ஸாம் எழுதி விட்டு ரிசல்ற்றுக்காக காத்திருந்தேன். மாதங்கள் கடந்தோடின. அன்று வியாழக்கிழமை ரிசல் வந்துட்டு என்று எல்லோரும் பாடசாலை சென்றனர்.நானும் சென்றேன். செல்லும்போது எல்லோரும் ஓடிவந்து எனக்குக் கைதத்து பாராட்டினர். அப்போதுதான் எனக்குத் தெரியும் நான் மரிட்டில பாஸ் பண்ணாம சூப்பர் மெரிட்டில மெடிசின் கிடைச்சிருக்கு என்று. எனது வறுமைக்கு ஒரு விடியல் கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சியடைந்தேன்.

எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள் வீடு தேடி வராத சொந்தங்கள் எல்லோரும் வீடு தேடி வந்தனர். எனக்கு மட்டில்லாத மகிழ்ச்சி. பல வருடங்கள் சென்றன. என் கனவுகள் பல்லி சொன்னதைப்போன்று பலித்தன. நான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நான்கு வருடம் படித்து முடித்து பட்டமளிப்பு விழாவன்று என் குடும்பமும் அங்கு வந்திருந்தது. எனக்குப் பட்டமளிக்கும்போது நான் அப்பாவைப் பார்த்தேன். அப்பா என்னைப் பார்த்தார். எங்கள் இருவரின் கண்களிலிருந்தும் நீர் பெருகி ஓடியது. எனது விடியாத இரவுகள் விடிந்து ஒரு புதிய வசந்த வாழ்க்கை ஆரம்பமானது. எனது வறுமை விடிந்தது.

**விஜயசேகர் ஜனோஜினி**
**கலைப்பீடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைச்சுரண்டல்

நகரில் இருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள ஒரு விவசாயக் கிராமம் அது. அன்று ஒரு பௌர்ணமிக்கு மறுநாள் கலைந்தோடும் மேகங்கள் இடைவிடாது மறைத்தாலும் அவ்வப்போது தெளிவாயும் தெரிந்து கொண்டிருந்தது நிலவு. கோழிகள் எல்லாம் கூட்டில் தங்கியபின் கூட்டுக்கதவை அடைத்துவிட்டு கிணற்றடிக்குச் சென்ற தந்தையை வழிபார்த்துக் கொண்டிருந்தான் மாதையன். பாலத்தடிப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிக்கும் கருகருத்த தோற்றமும் சுருள் முடித்தலையும் கொண்ட தாயில்லாப் பையன் மாதையன். வீட்டுல தகப்பன் துரையானும் தமக்கை ஜீவாவும் தான். கிணற்றடிக்குப் போன தந்தை வந்து கொண்டிருந்தார். கடப்பு உழலையை போட்டுவிட்டு வரும் அப்பாவைப் பார்த்து "ஜீவாக்கா எப்பப்பா வீட்டுக்கு வரும்" என்றான் மாதையன். துரையான் துவைத்துக்கொணர்ந்த சட்டையை உதறிக் கொடியில் போட்டபடி "சோதின முடியத்தான் மனே இல்லத்தால வரக்காட்டுவாங்க." நிலவை மேகம் முழுவதுமாய் மறைத்துவிட்டது. "அரிக்கன எடுத்து வாசல்ல வை மனே" என்று தகப்பன் சொன்னதும் வீட்டுக்குள் எரியும் அரிக்கன் விளக்கை எடுக்க உள்ளே சென்றான் மாதையன்.

வேகமாய்ச் செல்லும் வாகனத்திலிருந்து இரும்புக் கம்பியை தார்ப்பாதையில் இழுப்பது போன்றதொரு சத்தத்துடன் செத்தையில் இரையத் தொடங்கியது சில்லூறு. பயத்தோடு விளக்கை எடுத்து வெளியே கொண்டு வைத்துவிட்டு மீண்டும் சிறாம்பியில் அமர்ந்துகொண்டான். மாதையனின் மனதுக்குள் பதில் தெரியாக் கேள்விகள் எப்போதும் ஏராளமாய் ஓடிக்கொண்டே இருக்கும். "வா மனே சாப்பிடுவம், நானும் காவலுக்குப் போகவேணும்". "இண்டக்கி மட்டுமெண்டாலும் நில்லனப்பா போகாம" சினிங்கிக் கொண்டே கேட்டான் மாதையன். "நிலவரம் தெரிஞ்சும் நிக்கச்சொல்றயே மனே". மௌனத்தோடு சாப்பிட ஆரம்பித்தான். தகப்பனும் மகனும் வழமை போல் இரவு உணவை உண்டு முடித்தனர். துரையான் டோர்ச் லைட்டை கையில் எடுத்துட்டு காவலுக்குப் புறப்பட்டான்."கவனமாக் கிட மனே நான் வாறன் போயுத்து". பதில் இல்லை. பிள்ளையின் ஏக்கம் துரையானுக்கும் புரிந்திருந்தது ஆனாலும் அவன் சென்றுதான் ஆகவேண்டும். பாத்திரத்தையெல்லாம் கழுவி அட்டுகத்தில் வைத்துவிட்டு அரிக்கனை எடுத்துக்கொண்டு மாமி வீட்டுக்கு இராத் தூக்கத்துக்காக சென்றுவிட்டான் மாதையன்.

மறுநாள் சனிக்கிழமை, மாதையன் கோயில் மணிச்சத்தத்திற்கே எழுந்து, தகப்பன் வரும் முன்பே தன்னாலியன்ற வேலைகளை முடித்துவைப்பது வழமை. விடிவதற்கு முன்பே வீடு வரும் துரையான் அன்று பொழுது கிளம்பியும் வராததால் என்ன ஏது என்று பார்ப்பதற்கு பாதி வழிக்குச் செல்ல நினைத்து வீட்டில் இருந்த தனது தகப்பனின் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். மரத்தடிப் பிள்ளையாரை தாண்டியதும் தூரத்தில் தகப்பன் வருவதைக் கண்டு சற்று உந்தி மிதிக்கத் தொடங்கினான். தகப்பன் அருகில் சென்றதும் "என்னப்பா சுணங்கித்து" என்று கேட்டான் மாதையன். "ராவு துப்பரவா நித்திர இல்ல மனே, அதுதான் ஒள்ளம் கண்ணயந்துத்தன்". சைக்கிளை துரையான் மிதிக்க மாதையன் கேரியலில் இருந்தபடி வீடு நோக்கி நகர்ந்தது சைக்கிள். வரும் வழியில் குளக்கரை நாரைகளையே பார்த்தபடி வந்துகெண்டிருந்த மாதையன் திடீரென்று தகப்பனிடம் தனக்கே உரிய பாணியில் "ஏனுப்பா...." என்று இழுத்தான். "நம்மட வயலுக்கு மிசினால உழவடிக்க வாரவன் பணக்காரனா இரிக்கிறான், அந்த மிசின விக்கிரவன் பணக்காரனா இரிக்கிறான், மிசினுக்கு ஊத்துற டீசல் விக்கிறவனும் பணக்காரனாதான் இரிப்பான் எனப்பா" என்று முடித்தான். துரையானோ வாயிலிருந்த வெற்றிலையை துப்பி விட்டு, சிரித்தபடியே "அவன் பின்ன காசுக்காரனாதானே இருப்பான்" ஹ்ம்ம்ம்.. சிறிது நேரத்திற்கு சத்தமில்லை. அப்போ!" "என்ன ராசா?" "நம்மள்ட்ட நெல்லெடுத்துப்போற முதலாளியும் காசிக்காராள், அத குத்தி அரிசாக்குறவரும் காசிக்காராள், அப்ப அந்த அரிச கடையில விக்கிராளும் காசிக்காராள் தானே எனப்பா" துரையான் திரும்பிப் பார்த்து "இல்லயா பின்ன... அவன் சந்திக்கடப் பரமனப்பாரு அவனிட்ட இல்லாத காசா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான். "அப்ப ஏனப்பா இவங்கட தொழிலுக்கெலாம் ஆரம்பமா, அடிப்படையா இருக்குற தொழிலச் செய்ற நாம இன்னும் கடன்காரனாவே இரிக்கிறம்". துரையானுக்கு பிடரியில் சம்மட்டியடி விழுந்தாற்போல் இருந்தது மகனின் கேள்வி. துரையானிடம் தருணத்திற்குச் சொல்ல பதிலும் இல்லை, வீடும் வந்துவிட்டது. "இறங்கி அந்த உழலைய துற மனே" என்று சொல்லி கதையை திசைத்திருப்பி விட்டான். இருந்தாலும் பொடியன் கேட்டது சரிதானே என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான் துரையான். இப்படியே, பகலில் வீட்டையண்டிய தோட்டத்தில் வேலை, இரவில் வயலில் காவல் என்று துரையானின் வாழ்க்கையும்., பள்ளியும் வீடும், தகப்பனுக்கு தோட்ட வேலையில் உதவி செய்வதும் என்று மகனின் வாழ்க்கையும் நகர்ந்தன, நாட்களும் புரண்டோடின.

அன்றொரு நாள் உச்சி வெயில் தலையைப்பிளக்கும் நேரம் மாதையன் பள்ளிமுடிந்து நண்பனுடன் வந்துகொண்டிருந்தான். தன்வீடு வந்ததும் "சரிடா குமாரு நான் உடுப்ப கழுவிப் போட்டுத்து வாரன், உங்கட வீட்டடிக்கு" என்று சொல்லிவிட்டு பூட்டியிருந்த உழலையைத் திறந்து உள்ளே வருகிறான். வீட்டுக்கதவு பூட்டியிருந்தது. "அப்போ .. அப்பா....." என்று பெரிய சத்தம் ஒன்றும் வைத்தான் பதில் இல்லை. வழமையா திறப்பை மறைத்துவைக்கும் பூச்சட்டிக்கு அடியில் தேடிப்பார்த்தான் திறப்பு அங்கேயும் இல்லை. கிணற்றடியிலும் ஆள் நடமாட்டம் இல்லை. புத்தகப்பையைக் கழற்றி திண்ணைச் சிறாம்பியில் வைத்துவிட்டு மாமியின் வீடு வரை சென்று விசாரித்து வருவதற்காக, சட்டைப்பொத்தானை ஒவ்வொன்றாக கழற்றியபடியே சென்றான். அங்குதான் வியளம் கிடைத்தது, வீட்டுத்திறப்பையும் துரையான் தங்கையிடமே கொடுத்துவிட்டுச் சென்றிருந்தான். மீண்டும் வீட்டுக்கு வந்த மாதையன், சீருடையை துவைப்பதற்காக கிணற்றடிக்குச் சென்றான். கிணற்றடி வேலையை முடித்துவிட்டு வந்தபோதும் தகப்பன் வீட்டுக்கு வந்திருக்கவில்லை. தகப்பனோடுதான் மாதையனும் சாப்பிடுவது வழமை. அதனால் இன்றும் தந்தை வரும்வரை காத்திருந்தான் மாதையன்.

சற்று நேரத்தில் உழலை திறக்கும் சத்தம் கேட்டது , நிமிர்ந்து பார்த்தான். வெயிலின் கோரத்தால் நெற்றி வியர்வை சொட்டச் சொட்ட சோர்ந்த முகத்தோடு நின்று உழலையைத் திறந்து கொண்டிருந்தான் தகப்பன், சைக்கிளின் பின்னால் சாக்குப்பைக்கட்டு. தகப்பனைக் கண்டதும் உழலையை திறக்க ஓடினான் மாதையன், அதற்குள் திறந்து துரையான் உள்ளே வந்துவிட்டான். சைக்கிளைக் கொண்டு வீட்டுக்கு முன் இருந்த பலாமரத்தில் சாத்திவிட்டு கேரியலில் இருந்த சாக்குப்பைக்கட்டை துரையான் அவிழ்க்கத் தொடங்கினான், மாதையன் வீட்டினுள் சென்று தண்ணீர் எடுத்து வந்தான். அவிழ்த்த சாக்குப்பையை ஓரமாய் வைத்துவிட்டு தண்ணீர்ச்செம்பை வாங்கிக்கொண்டு, சிறாம்பியில் அமர்ந்தான் துரையான். தண்ணீர் குடித்து சற்று இளைப்பாறிய பின்னும் தகப்பனின் முகத்தில் இருந்த சோர்வு மாறவில்லை. நீண்ட நேரமாய் நிசப்தமே நிலவியது அவ்விடத்தில்.

தந்தையின் முகத்தையே பார்த்தபடி இருந்த மாதையன் "என்னப்பா ஒண்டும் பேசாம இருக்குறா" என்றான், நீண்ட பெருமூச்சு ஒன்றுடன் "ஒண்டுமில்ல மன....". "மாமி சொல்லிச்சு நாளைக்கு வயல் வெட்டுறதாம் எண்டு". ஆம் என்பதற்கு மெதுவாகத் தலையாட்டிவிட்டு, மாதையனைப் பார்த்து "அதுதான் மன யோசினையாக்கிடக்கு, ஏக்கருக்கு எவளவு போகுதோ தெரியா வெட்டுக்கூலி. கையில ஒருசதக்காசும் இல்ல, முதலாளிட்ட போனன் கடனா காசு கேட்டுப் பாப்பம் எண்டு., வெட்டின பிறகு வியளம் அனுப்பட்டாம் வந்து நெல்ல எடுத்துத்து கையோட காசு தருவாராம்., கையில இருந்த காசுக்கு இந்த சாக்குப்பைக்கட்ட மட்டும் வாங்கித்து வந்தன்"என்றான். "அவரு நெல்ல வாங்கித்து கட்டாயமா காசு தருவாரு தானேப்பா பிறகு ஏன் யோசிக்குறா". "வயலுக்க வச்சு நெல்ல எடுத்து உடனே கைக்கு காசு தரணும் எண்டா அவன் தவுட்டுக்குப் பாதியா விலபேசுவான் மனே நம்மட நெல்லு மணிக்கு". பசிக்களைப்பில் இருந்த மாதையனுக்கு தகப்பன் கூறிய விடயத்தின் ஆழம் நீளம் எதுவுமே விளங்கவில்லை. வாடிய முகத்தோடு "பசிக்குதுப்பா சாப்பிடுவமா" என்று தந்தையைப் பார்த்துக் கேட்டான். "ஓம் மனே எனக்கும் பசியாத்தான் இருக்கு எடு சாப்பிடுவம்". இருவருமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணையில் இருந்து சாப்பிடத்தொடங்கினார்கள். சாப்பிட்டு முடித்ததும் திண்ணைச்சிறாம்பியில் சற்று தலைசாய்த்தான் துரையான். சினேகிதனின் வீட்டுக்குச் செல்லவேண்டிய தேவை இருந்ததால் தந்தையிடம் சொல்லிவிட்டு மாதையனும் புறப்பட்டான். துரையானும் கண்ணயர்ந்து தூங்கத்தொடங்கினான்.

சிறிது நேரம் கழித்து, சென்ற வேலை முடிந்ததும் வீடுநோக்கி வந்து கொண்டிருந்தான் மாதையன். அடுத்தநாள் அறுவடைக்காக முதல் நாளே அறுவடை இயந்திரங்கள் எல்லாம் வீதியில் வந்து கொண்டிருந்தன. வழமைபோல் இன்றி ஏனைய வாகனங்களும் வேகவேகமாய் பயணித்த வண்ணம் இருந்தன. சாக்குப்பைக்கட்டு வாங்கிவருவதும் சணல்முடிச்சு வாங்கி வருவதுமாய் ஒருபுறமும், அறுவடைநேரத்தில் உண்பதற்கு சமைக்க சமையற்பொருட்கள் வாங்குவதென்று மறுபுறமுமாய், மறுநாளின் அறுவடைக்கான பரபரப்பில் இருந்தது முழுக்கிராமமும். நெல்லை உடனே கொள்வனவு செய்து செல்வதற்கு ஊர்திகள் கூட வந்து கிடையாய்க் கிடந்தன. அனைத்தையும் கடந்தபடி ஓட்டமும் நடையுமாய் வீட்டுக்கு விரைந்தான் மாதையன்.

அங்கு தந்தை திண்ணைச்சிறாம்பியில் உறங்கிக்கொண்டிருந்தார். "அப்பா அப்பா.. பொழுது சாயுது ஒழும்பனப்பா". தலையணையில் இருந்து தலையைத்தூக்கி "நேரமென்ன மனே இரிக்கும்" என்று தகப்பன் கேட்க "அஞ்சு மணி இருக்குமப்பா". படுக்கையில் இருந்து எழுந்து தகப்பன் கிணற்றடிக்குச் செல்ல மாதையனோ உடையை மாற்றிவிட்டு., பகல் சாப்பிட்டு மிஞ்சிய மீதிக்குழம்பை சூடு காட்டுவதற்காக அடுப்பை மூட்டத்தொடங்கினான். இதர வேலைகளையும் செய்து வர பொழுதும் கடந்து வந்தது. மறுநாள் அறுவடை இருப்பதால் வழமையை விட சற்று முன்னரே இரவு உணவை உண்டுவிட்டு வயற்காவலுக்கு புறப்பட்டான் துரையான். மாதையனும் பாத்திரங்களை எல்லாம் கழுவி வைத்து வீட்டைப் பூட்டிவிட்டு மாமியின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தான். மறுநாள் தனக்கும் தன் தகப்பனுக்கும் நேரவுள்ள அவலம் அறிந்திராத மாதையன், "நாளைக்கு எப்பிடியோ வயல் வெட்டி முடிஞ்சிரும், அப்பாட கைநிறைய காசுவரும்.. இருக்கிற கடனெல்லாம் குடுத்து முடிச்சுப்போட்டு அப்பா நமக்கு புதுச் சைக்கிள் வாங்கித்தருவாரு" என்று தனக்குள் குதூகலத்தில் சென்று கொண்டிருந்தான்.

மாமியின் வீட்டிற்குச் சென்று நிமிர்ந்ததும்., கதவடியில் நின்றுகொண்டு மாமி நகைச்சுவையாக "என்ன பொடியா கடும் குஷியாத்தான் வாறமாதிரித் தெரியுது". மாதையன் சிறு கொடுப்புச்சிரிப்போடு "ஓம் மாமி நாளைக்கு வயல் வெட்டுத்தானே அதால நாளைக்கு பள்ளிக்கும் போகத்தேவல". "பாத்தயா, ஒருநாள் பள்ளிக்கூடத்துக்கு லீவு என்டொண்ணே மருமகன்ட சந்தோசத்த" என்று கேலிசெய்தாள்.. அப்படியே அன்றைய பொழுதும் முடிந்தது.

மறுநாள் அறுவடை நாள். வுழமையைவிடச் சற்று முன்னரே எழுந்து வீட்டுக்குச் சென்று செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு., தாயின் போட்டோவுக்கு விளக்கையும் ஏற்றிவைத்து அன்றைய நாளின் வேலைகள் எல்லாம் தடையின்றி நடைபெற பிரார்த்தித்து., அறுவடைக்குக் கொண்டு செல்லும் அரிவாள், சாக்குப்பைக்கட்டு, சணல் முடிச்சு எல்லாவற்றையும் எடுத்துத் தயாராக வைத்துக் கொண்டிருக்கும் போதே தகப்பனும் வந்துவிட்டார். "எல்லாத்தையும் எடுத்து வச்சுத்தா என மனே.. அப்பிடியே எடுத்து சைக்கிள்ல கட்டு" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்றான் துரையான். அவரும் பிரார்த்தனை செய்துவிட்டு வந்ததும், "நேத்து பக்கத்துக் கண்டம் வெட்டி முடிஞ்சாம் மனே.. அதால ராவு கடும் தொல்லப்படுத்திப் போட்டுது மனே ஆனக்கிள, அவனுகள்ற பக்கம் காவல் இல்லாதனால". என்று சொல்லிக்கொண்டே சைக்கிளிற்கு அருகில் சென்றார். "நம்மட வயலுக்கையும் வந்ததாப்பா?". "இல்ல மனே வரல. இன்டைக்கு எப்பிடியும் வெட்டி எடுத்துத்து வெட்டக்கிறம்பிரனும் வயலால இல்லாட்டி கடும் கரச்சல் பட்டுப் போவம்", என்று சொல்லிய படியே சைக்கிளைத் தள்ளினான் துரையான். தகப்பனோடு மகனும் புறப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலை அடைந்ததும், அறுவடை இயந்திரங்களை தயார்படுத்திவிட்டு வேளாண்மையில் படிந்திருந்த பனித்துளிகள் வடியும் வரை காத்துக்கொண்டு இருந்தார்கள் கமக்காரர்கள். தங்கள் வயல் வரை சென்று, எடுத்துச் சென்ற பொருட்களையெல்லாம் காவற்குடிலில் வைத்துவிட்டு, தமது வேளாண்மையை அறுவடை செய்வதற்கு சாரதி ஒருவரை ஒழுங்கு செய்வதற்காக அறுவடை இயந்திரங்களெல்லாம் தரித்து வைக்கப்பட்டிருந்த இடத்தை நோக்கி இருவரும் சென்று கொண்டிருந்தனர்.

அறுவடை இயந்திர விடயத்தில் ஒருசில சூழ்ச்சிகளும் நடப்பதுண்டு. அதாவது இவர்களது ஊரில், பல ஏக்கர் வயல் நிலங்களை உள்ளடக்கிய நிலப்பரப்பை "கண்டம்" என்பார்கள், கண்டத்திற்கு ஒரு தலைவர் அவர்தான் "வட்டயன்". நீர்ப்பாசனம்,உரம் வழங்குதல், விதைப்பு,அறுவடைக்கூட்டங்கள் நடாத்துதல், அரசால் வழங்கப்படும் நஷ்டஈடு வழங்குதல் போன்ற செயற்பாடுகளை முகாமை செய்வது வட்டயனின் கடமை, ஊதியம் நான்கு ஏக்கருக்கு ஒரு சாக்குப்பை நெல். அவரை நியமிப்பது என்னவோ பொதுவேலைக்குத்தான், ஆனால் அவரோ பொதுவேலை எனும் போர்வையில் முடியுமானவரை தனது கல்லாவை நிரப்பிக்கொள்வார். அறுவடைக்காலம் நெருங்கியதும் இயந்திர உரிமையாளர்களுடன் பேசி, இவரேதான் வட்டைக்குள் அறுவடை இயந்திரக்காரர்களையும் கொண்டுவந்தும் சேர்ப்பார், அதற்குக் கிடைக்கும் தரகுக்கூலிதான் அவர்களின் பிரதான நோக்கம். சாதாரணமாக ஒரு ஏக்கர் வயலை அறுவடை செய்வதற்கு ஒருதொகைப்பணம் அறவிடப்பட்டால் இவர்கள் அதற்கு மேலதிகமான தொகையை விவசாயிகளிடம் அறவிட்டு தங்கள் தரகுத்தொகையை பெற்றுக்கொள்வார்கள். இந்த வருடமும் அதே பாணியைத்தான் பின்பற்றியிருந்தார் வட்டயன். அவரின் தலைமையில் தான் இயந்திரங்கள் அனைத்தும் வட்டைக்குள் கொண்டு வரப்பட்டிருந்தன.

இயந்திரங்களை நோக்கிச் சென்ற துரையான் முன்னால் நின்ற வண்டியில் இருந்த சாரதியிடம் "என்ன அண்ணண் நம்மட வயலயும் வெட்டலாம் தானே என" அவரோ ஏற்கனவே தனக்கு இருபது ஏக்கர் அறுவடை செய்ய பேசப்பட்டுள்ளதாக சொல்லவும், அவருக்கு அடுத்ததாக நிறுத்தப்பட்டிருந்த இயந்திரத்தின் சாரதியிடம் சென்று விசாரித்தார் அவரும் தனக்கு ஏற்கனவே வயல்கள் பேசப்பட்டு விட்டதாகவே சொன்னார். அடுத்தடுத்து நின்ற சாரதிகளின் பதிலும் அதுவாகவே இருந்தன. இறுதியாக ஒரு சாரதி துரையானின் வயலை அறுவடை செய்து கொடுக்க ஒத்துக்கொண்டார். இருந்தாலும் அவருக்கு ஏற்கனவே பேசப்பட்டிருந்த வயல்களை முடித்தபின்னரே என்று முடிவாகியிருந்தது அந்தப்பேச்சு. இத்தனை இயந்திரங்களை விசாரித்தும் இந்த ஒன்றாவது முடிவாகி விட்டதே என்ற ஆறுதலில், தனது வயலின் காவற்குடிலிற்கு மகனை அனுப்பிவிட்டு, சாரதிக்கும் தனக்கும் மகனுக்குமான மதிய உணவை ஏற்பாடு செய்வதற்காக அவசர அவசரமாய் வீடு நோக்கி புறப்பட்டான் துரையான்.

அத்தனை அவசரம் அவனுக்கு இருந்திருக்காது, அந்த சாரதிக்கு பேசப்பட்டிருந்த வயல்களை வெட்டி முடிப்பதற்கு முன் துரையான் அங்கு நின்றாக வேண்டும். இல்லையேல் வேறு யாராவது ஒரு விவசாயி தன் வயலுக்கு பேசி முடித்து விடுவார். அப்படி மட்டும் நடந்துவிட்டால், துரையானின் மூன்றரை மாத உழைப்பும் மண்ணோடு மண்ணாகிவிடும். காரணம் ஏற்கனவே வட்டையில் காட்டுயானைத் தொல்லை மிக அதிகமாக இருந்தது, துரையானின் வயல் ஒன்றும் நடு வயலும் இல்லை, எல்லையில் உள்ள வயல் ஒன்றுதான். தங்கள் வயலை அறுவடைசெய்ததும் மற்றைய விவசாயிகள் கண்டத்தை விட்டு வெளியேறிவிட்டால், எல்லையில் துரையான் தனித்து விடுவான். ஆக, பொழுது சாய்வதற்குள் அடுத்தவர்களோடு சேர்ந்து வெளியாக வேண்டி இருந்ததே துரையானின் பதற்றத்திற்கு மூலகாரணமாய் இருந்தது. சென்ற போகச் செய்கையின் போது இதே சிக்கலில் துரையான் மாட்டியிருந்தது துரையானுக்கு மேலும் பதற்றத்தோடு சேர்த்து பயத்தையும் கொடுத்தது.

துரையானின் வீடு, வயலில் இருந்து சைக்கிளில் செல்லும் தூரமாகவே இருந்தாலும், அன்று துரையானுக்கு இருந்த பதற்றத்திற்கு, பாதை மலைப்பாம்பு போல் நீண்டு கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பது போன்றே இருந்தது. உந்தி மிதித்து ஒருவழியாக வீடு வந்து சேர்ந்துவிட்டான். அவசர அவசரமாய் அரிசியைக் கழுவி அடுப்பில் வைத்துவிட்டு கறி சமைப்பதற்காக கருவாட்டைக் கழுவிக்கொண்டிருந்தான். பக்குவமில்லாப் பையனை வயலில் தனியாக விட்டு வந்தது துரையானின் பதற்றத்தை மேலும் அதிகப்படுத்தியது. எப்படியோ ஒருவழியாக சமையலை முடித்து, சாப்பாட்டை தூக்குச்சட்டியில் போட்டு எடுத்துக்கொண்டான். சமையல் பாத்திரமெல்லாம் கழுவி வைக்க நேரமில்லை. அனைத்தையும் தூக்கி வீட்டினுள் வைத்துப் பூட்டிவிட்டு, சைக்கிளை வயலை நோக்கி மிதித்தான். வேகவேகமாய் மிதித்துப் போய்க்கொண்டிருந்தான் துரையான்.

வயலில் இருந்த மாதையனை சாரதி அழைத்து "இந்த வயல் இன்னங்கொஞ்ச நேரத்துல வெட்டி முடிஞ்சுரும் தம்பி, உங்கட அப்பாட்ட சொல்லி மிசின் உங்கட வயலுக்க இறங்குறதுக்கு தடத்த வெட்டிவை" என்று சொல்லிவிட்டு சென்றான். வரப்புகள் உயரமாக இருப்பதால் இயந்திரம் போகக்கூடிய அளவிற்கு வரப்பை சரித்துவிட்டே தடம் வெட்ட வேண்டும். மாதையனுக்கு விளக்கம் ஓரளவு தெரிந்திருந்ததால், காவற்குடிலில் இருந்த மண்வெட்டியை எடுத்து வந்து பொதுவரப்பில் தடம் வெட்டத்தொடங்கினான்.

இவன் வெட்டிக் கொண்டிருக்கையிலே நெல்லை சாக்கில் பிடித்துக் கட்டுவதற்கும் ஒருவரை கூலிக்கு அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்துவிட்டான் துரையன். வந்தவுடன் மகனிடம் மண்வெட்டியை வாங்கி, அவனை குடிசைக்கு அனுப்பிவிட்டு இரண்டு தடத்தையும் வெட்டிமுடித்தான். உச்சியைப்பிளக்கும் அளவிற்கு வெயிலடித்துக் கொண்டிருந்ததால் வரப்பின் ஓரத்தில் நின்ற வேப்பை மரத்தடிநிழலில் ஒதுங்கி நின்றுகொண்டு., "நல்ல காலம்., வேளைக்கு வந்துத்தம். இல்லெண்டா பெரியாக்கள் ஒருதரும் இல்லாத கோவத்துல மிசின்காரன் வேற வயலுக்கு ஒப்புக்கொண்டிருப்பான்" என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டான். வெட்டிக்கொண்டிருந்த வயலை முடித்துவிட்டு துரையானின் வயலுக்குள் இறங்கத் தயாரானது இயந்திரம். இயந்திரத்துக்கு அருகில் சென்று "சாப்பிடுட்டுத்து வேலையத் தொடங்குவம் தம்பி". என்று கூறி சாரதியைக் கூட்டிக்கொண்டு வந்தான் துரையான். இருந்த உணவை நான்கு பேருமாய் பிரித்து உண்டனர்.

சாப்பிட்டு முடிந்ததும் இயந்திரத்தை தயார்ப்படுத்தி துரையானின் வயலை வெட்டத்தொடங்கினான் சாரதி. இயந்திரம் ஒருபுறம் வெட்டிக்கொண்டிருக்க, அதன் பிடிக்கு போதாத மூலைகளில் உள்ள வேளாண்மையை அரிவாளால் அறுத்து இயந்திரம் வெட்டிவரும் பக்கத்துக்கு வீசிக்கொண்டிருந்தான் துரையான். கூலிக்குக் கூட்டி வந்தவர் மற்ற வரவைகளுக்கு செல்வதற்கான தடங்களை வெட்டிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்திலேயே இயந்திரத்தின் தாங்கியில் நெல் நிரம்பியதற்கான சமிக்ஞை ஒலித்தது. உடனே ஓடிவந்து மூவருமாய், விரிப்பை எடுத்து நிலத்தில் விரித்தனர். அந்த இடத்துக்கே இயந்திரமும் வந்து சேர்ந்தது. மாதையன் ஒவ்வொரு பையாக எடுத்துக் கொடுக்க துரையானும் கூலியாளும் இயந்திரத்தின் நெல் வெளியேற்றியின் வாயில் பையை வைத்துப் பிடித்து, பை முற்றாய் நிரம்பியதும் வரப்பில் சாய்த்து வைத்துவிட்டு அடுத்த பையைப் பிடித்தனர். இருப்பதிலேயே கடும் கஷ்டமான வேலை இந்த மூடை பிடிப்பதுதான், காரணம் வெளியேற்றியின் வாயிலிருந்து அதிவேகமாக நெல்லானது வெளியே வந்து கொண்டிருக்கும், பையைப் பிடிப்பவர்கள் சற்றுத் தாமதமானாலும் நெல்மணி வெளியே சிந்திவிடும். அதனால் தான் முன்னரே விரிப்பு ஒன்றை அடியில் விரித்து விடுவார்கள். நெல்லை நேரடியாக விரிப்பில் குவிய விட்டு மீண்டும் மூடையில் கட்டுவதென்பது ஒருவேலைக்கு இருவேலை என்பதால்தான் நேரடியாகவே மூடையில் பிடித்துவிடுவார்கள். ஒருவழியாக முதற்தாங்கி நெல்லை மூடை பிடித்து விட்டார்கள் துரையானும் கூலியும்.

மூடையின் உச்ச கொள்ளளவிற்கு நெல்லை நிரப்புவதற்காக, மூடையின் வாய்ப்பகுதியைப் பிடித்து கைகள் நெஞ்சு மட்டம் வரை உயரும் அளவிற்கு மூடையை உயர்த்தி மீண்டும் நிலத்தில் தட்டுவார்கள். அது ஒன்றும் அத்தனை இலேசுப்பட்ட காரியமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. ஏனென்றால் மட்டுமட்டாக நிரப்பப்பட்ட மூடையொன்று சாதாரணமாக அறுபது கிலோ வரைக்குமாவது இருக்கும். அதனால் மூடையை தூக்கித் தட்டும் இருவரும் முழுத்தெம்போடு பிடித்தால்தான் அது சாத்தியம். இப்படி தூக்கித்தட்டிய மூடைகளில் மேலும் இடைவெளி இருந்தால் அதற்கும் நெல்லைக் கொட்டி நிரப்பி அதன்பின்னர் சணலையும் ஊசியையும் கொண்டு மூடையின் வாயைத் தைத்துக் கொண்டிருந்தார்கள் இவர்கள். இத்தனையும் இயந்திரம் அடுத்த சுற்று நிரம்பிய நெல்லைக் கொட்டுவதற்கு வர முன்னர் முடிக்கவெண்டும் இல்லாவிட்டால், இரண்டும் கெட்டான் கதையாய் போய்விடும் என்பதால், வேக வேகமாக செய்து முடித்தனர். இவர்கள் முடித்து சிறிது நேரத்திலேயே அடுத்த சுற்றுக்கு இயந்திரம் வந்துகொண்டிருந்தது.

திடீரென்று, இரும்புக்கம்பி இரண்டு ஒன்றோடு ஒன்று மோதினாற்போல் ஒரு பலத்த சத்தம், டப்பென்று இயந்திரமும் நின்றுவிட்டது. அது இயந்திரத்தின் ஏதோ ஒரு பாகம் உடைந்ததால் வந்த சத்தமாகத்தான் இருக்க வேண்டும். சாரதி உடனே இறங்கி இயந்திரத்தின் பின்பக்கமாகச் சென்றான். சிறிது நேரத்தில் மறுபக்கமாக முன்னால் வந்து "உள்ளுக்கு பாட்ஸ் ஒண்டு உடஞ்சித்து அண்ணண், புதுசா ஒன்டு போட்டாத்தான் மிசின் இஸ்றாட் ஆகும்" என்றான். உடனே தலையில் கைவைத்துக்கொண்டு கீழே அமர்ந்தான் துரையான். இவனைப் பார்த்த சாரதி "இல்லண்ணண் நீங்க கவலப்படாதீங்க எத்தின மணியானாலும் சரி உங்கட வயல வெட்டித்தந்து பொட்டுத்தான் மிசன கரைக்கு ஏத்துவன்" என்று சொல்லிவிட்டு நகர்க்கடைக்கு செல்ல புறப்பட்டான். துரையானுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. எப்படியும் சாரதி நகர்க்கடை வரைக்கும் சென்று வருவதற்குள் பொழுது சாய்ந்துவிடும். பொழுது சாயவே காட்டுயானைகள் கண்டத்திற்குள் நுழைந்துவிடும். "எல்லாமே நாசமாயிருமே இறைவா, எண்ட மூணர மாத உழைப்பு, பெத்த பிள்ளையை ஊரார் வீட்டில நித்திரைக்கு அனுப்பிப்போட்டு இஞ்ச வந்து நான் இரவிரவா நித்திர முழிச்சு பார்த்த காவல் எல்லாம் சதக்காசுக்கும் பெறுமதியில்லாம போயிருமே.. இதுக்காக நான் பட்ட கடனையெல்லாம் எப்பிடி அடைச்சு முடிப்பன்". என்று கண்கலங்கி விட்டான் துரையான். தகப்பன் அழுவதைப்பார்த்து தனக்கும் அழுகைவந்தாலும் அதை மறைத்துக்கொண்டு. "அந்த அண்ணன் டக்கெண்டு வந்துருவாருப்பா கண்ணுக்கு இருட்டு உளமுதல் வெட்டி முடிச்சுறலாம்" என்று ஆறுதல் கூறிக்கொண்டிருந்தான் அந்தச் சிறுவன். மற்றவர்களின் வயல்கள் எல்லாம் எந்த தடையும் இன்றி அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. தனக்கு நடப்பவையெல்லாம் தன் துரதிஷ்டமே என்று தன்னையே நொந்து கொண்டான் துரையான்.

அந்த வழியால் வருகின்ற மோட்டார் சைக்கிள்களில் ஒன்றாவது சாரதியின் மோட்டார் சைக்கிளாக இருந்துவிடாதா? என்ற ஏக்கத்தோடு வழியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். பொழுதும் சாய்ந்து கொண்டிருந்தது. திடீரென்று தூரத்தில் யானையை விரட்டுவதற்கு வெடிக்கும் வெடியின் சத்தம் கேட்டது. துரையானின் பயம் மேலும் அதிகரித்தது. கூலிக்குக் கூட்டிவந்தவர் துரையானின் அருகில் வந்து "நேரம் போகுதண்ணன், வீட்ட நிண்டிருந்தா நான் எண்ட வேலைகள எண்டாலும் முடிச்சிருப்பன், இஞ்ச வந்து உண்ட வேல செஞ்ச பாடும் இல்ல எண்ட வேல முடிச்ச பாடும் இல்ல, இருட்டுறதுக்கு முதல் நான் வீடு போய்ச் சேருறன் அண்ணன்" என்று சொன்னான். துரையானைத் தூக்கிவாரிப் போட்டது. "நம்பித்தானே கூட்டித்து வந்தன், இப்பிடி நடுக்கட்டத்துல விட்டுத்து போறன் எண்றயே தம்பி, தட்டத்தனிய நான் என்ன கெட்டித்தனம் செய்யிற" என்று கலங்கிய குரலில் கேட்டான் துரையான். "அதுக்கு நான் என்னண்ணன் செய்யேலும் இவ்வளவு நேரமாகித்து, போனவனயும் இன்னும் காணல. அவன் எப்ப வந்து இத எப்ப வெட்டிமுடிக்கிற அண்ணன்..., ஆன வெட்டக்கிறம்ப முதல் நான் வீடு போய்ச் சேரணும்" என்றார். துரையானிடம் பதிலில்லை. சிறிது யோசித்து விட்டு ஒரு பெருமூச்சுடன். "சரி ராம்பி நீ வெளிக்கிடு நாளைக்கு விடிய வந்து உண்ட கூலியத்தாரன்" என்றார் துரையான். சரியென்று கூறிவிட்டு புறப்பட்டான் கூலி. சூரியன் மறைந்து கொண்டிருந்தது. செய்வதறியாமல் நின்று கொண்டிருந்தார்கள் தகப்பனும் மகனும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் மோட்டார் சைக்கிளொன்று வரும் சத்தம் கேட்டது. ஆம் அது சாரதிதான். மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வேகவேகமாய் வரப்பினால் வந்துகொண்டிருந்தான் அவன். "என்ன தம்பி கிடச்சிதா?". "ஓம் அண்ணன் வாங்கித்தன் பூட்டியெடுத்தா சரி" என்று சொல்லிக்கொண்டு இயந்திரத்தின் ஒரு பக்கத்தை திறந்தான். துரையானும் தன்னால் முடிந்த உதவியைச்செய்ய, இருவருமாய் அதைப்பூட்டி ஒருவழியாக இயந்திரத்தை இயங்கும் நிலைக்கு கொண்டு வந்தார்கள். "சரியண்ணன் இனி ஒரு பிரச்சனையும் இல்ல, அது சரி.. எங்க நீங்க உதவிக்குக் கூட்டிவந்த ஆள்" என்று கேட்க, நடந்த விளக்கத்தைக் கூறினான் துரையான். "இப்ப எப்பிடியண்ணன் தனியப் புடிக்கப்போறயள் அவ்வளவு நெல்லையும் அடுத்த வயலுகளுக்கு போய், ஆரயாவது உதவிக்குக் கேட்டுப்பாருங்க" என்றான். "கூலிக்காரன் எல்லாம் வேலைய முடிச்சித்துப் போய்த்தானுகள், வயல்க்காரன் மட்டும் தான் நிக்கிறான். பரவால்ல தம்பி, நான் ஏலுமானத மூடையில பிடிக்கிறன் மிச்சத்த படங்கில கொட்டி பிறகு கட்டியெடுக்குறதுதான்" என்றார். அப்போதைக்கு அவர்களுக்கு வேறு வழியொன்றும் தெரியவில்லை. ஏற்கனவே தாங்கியில் இருந்த நெல்லை விரிப்புக்கருகில் வந்து கொட்டுவதற்கு இயந்திரம் தயாரானது. துரையானும் மகனும் சேர்ந்து பையைப்பிடிக்க, நெல் கொட்டத்தொடங்கியது. அந்தளவு பாரத்ததைக் கையாளும் அளவிற்கு மாதையனுக்குப் பலமிருக்கவில்லை. பையினுள் நிரம்பிய நெல்லை விட விரிப்பினில் சிந்திய நெல்தான் அதிகம். குறை மூடைகளாகவே பிடித்து முடித்தனர் அந்தத் தாங்கி நெல்லை. வேறு வழியில்லை, அந்த நேரத்தில் அவர்களால் அவ்வளவுதான் முடிந்தது.

இயந்திரம் நகர்ந்ததும் விரிப்பில் சிந்திய நெல்லை அள்ளி மூடையை நிரப்பினார்கள். அது அத்தனை சுலபமாக இல்லைதான், இருந்தாலும் அதையே செய்தாக வேண்டியிருந்தது. அப்படியே அடுத்தடுத்த தாங்கிகளையும் பிடித்து முடித்தனர். மறுபுறமோ யானை விரட்டும் வெடிச்சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. இதற்கிடையில் பனியும் பெய்யத் தொடங்கிவிட்டது. ஒரு வழியாக வெட்டிக் கட்டி முடித்தார்கள். அனைத்தும் முடியும் போது தூரத்து வயல்கள் தெரியாத அளவிற்கு பனி படர்ந்திருந்தது. மாதையன் குளிரால் நடுங்கிக்கொண்டிருந்தான். அவனை குடிசைக்கு அனுப்பிவிட்டு மூடைகளை பாதுகாப்பதற்காக துரையான் இருந்தான்.

"ஒரு வழியா முடிச்சுத்தம் என". "ஓம் தம்பி, நீ இல்லண்டா இண்டைக்கு எனக்கு கெதியில்ல" என்று கையெடுத்துக் கும்பிட்டு கண்கலங்கினான் துரையான். "மனிசனுக்கு மனிசன்தானே அண்ணன் உதவனும்". "அதெண்டா உண்மதான் தம்பி, நான் விடியத்துக்கு வட்டயருட்ட காசக் குடுத்துவிடுறன் தம்பி" என்றான் துரையான். "சரியண்ணன் அப்ப நான் வெளிக்குடுறன்." மிசினை இஸ்டாட் செய்து புறப்பட்டான் சாரதி. வட்டையில் நிலவிய பரபரப்பு நீங்கி பேரமைதியொன்றும் நிலவியது அங்கு. இப்போதுதான் துரையானின் பதற்றம் படபடப்பெல்லாம் குறைந்து சாதாரண நிலைக்கு வந்தது. ரோர்ச்லைட்டை நாலாபக்கமும் அடித்து, யானை வரவில்லை என்பதை உறுதிசெய்து கொண்டேயிருந்தான் துரையான், காரணம் யானையை நினைத்து சற்று பயமாகவே இருந்தது அவனுக்கு.

சிறிது நேரத்தில் பொழுதும் விடிந்து வந்தது. பாதையால் சென்ற வாகனக்காரர் ஒருவரிடம் முதலாளிக்கு சேதியனுப்பிவிட்டு, காவற்குடிலுக்கு சென்றான் துரையான். நடுங்கியபடியே உறங்கிக்கொண்டிருந்தான் மாதையன். இரவிரவாக பனியில் நின்றதால் காய்ச்சலே பிடித்திருந்தது பிள்ளைக்கு. போர்வையை இழுத்துப் போர்த்திவிட்டு. குடிசையை விட்டு வெளியே வந்தான். முதலாளியின் வாகனம் வந்துகொண்டிருந்தது. துரையான் நின்றபக்கம் வாகனம் திரும்பியது. துரையானோ நெல்மூடைகள் இருந்த இடத்திற்கு சென்றான். வாகனமும் அவ்விடத்திற்கு கொண்டுவரப்பட்டது. வாகனத்தில் இருந்து பெரிய தராசு ஒன்றினை இறக்கி கீழே வைத்தனர். முதலாளி துரையானிடத்தில் வந்து பேச்சுக்கொடுத்தார். "ஒருவழியா கரைசேர்ந்துட்டா என துரையான்." "ஓம் முதலாளி சரியாக் கஷ்டப்பட்டுப்போனம் இந்த சீதேவிய கரைசேக்கிறதுக்கு". சாரதியின் பேருதவியை முதலாளியிடம் சொல்ல மறக்கவில்லை துரையான். பேசிக்கொண்டே நெல் நிறுக்கும் இடத்திற்கு சென்றனர் இருவரும். முதலாளியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்கள் நெல்லினை நிறுத்துக்கொண்டிருக்க, மூடை ஒன்றை பிரித்து நெல்லை அள்ளிக் கையில் எடுத்துப்பார்த்தார் முதலாளி. அவரின் முகபாவம் மெல்ல மாறியது. வயல்வரைக்கும் வந்து நெல்லை எடுத்துக்கொண்டு செல்வதற்காகவே விலையைக் குறைத்துப் பேச நினைத்துக்கொண்டு வந்தவருக்கு துரையானின் நெல் இருந்தநிலை மேலும் விலையைக் குறைப்பதற்கு வசதியாய் அமைந்தது. "என்ன துரையான் நெல்லு சரியா ஈரமா கிடக்கு., மழ கிழ பெஞ்சதா" என்று கேட்டார். "இல்ல முதலாளி கொஞ்சம் பனி பட்டுத்து அதுதான் ஈரம் மாதிரி தெரியுது". "என்னடாப்பா இப்பிடி நனஞ்சிருக்கு நீ என்னடாண்டா கொஞ்சம் நனஞ்சிருக்கு எண்றா" என்றார் முதலாளி. துரையான் எதுவுமே பேசவில்லை.

நெல் நிறுவை செய்து முடிந்ததும், கணக்குப் பார்க்கப்பட்டது. சாதாரணமாக துரையானின் நெல்லுக்கு கொடுத்திருக்க வேண்டிய பெறுமதியின் முக்கால் வாசிப் பணத்தையே முதலாளி துரையானிடம் கொடுத்தார். "என்ன முதலாளி இப்பிடி நட்டப் படுத்துறயளே" என்று கலங்கிய கண்ணுடன் தளதளத்த குரலில் கேட்டான் துரையான். "இதக்கொண்டு போய் காயப்போடனும் தூற்றியெடுக்கணும், திரும்பக் கட்டியெடுக்கணும், எவளவு வேல இருக்கெண்டு தெரியும் தானே துரையான்" என்றார் முதலாளி. துரையானும் எவ்வளவோ பேசிப்பார்த்தான் முதலாளி மனம் மாறுவதாக இல்லை. "கட்டுப்படியாகாட்டி விடு நான் எடுக்கல. வேறாருக்காவது வித்துக்கொள்ளு உண்ட நெல்ல" என்று முதலாளி கூறியதும் வேறு வழியில்லாமல் துரையான் அவர் கொடுத்த பணத்தையே எடுத்துக்கொண்டான். வாகனம் புறப்பட்டது.

துரையானும் மாதையனையும் கூட்டிக்கொண்டு மிகுந்த கவலையுடன் வயலை விட்டு வெளியேறினான். அந்தவேளையில் மாதையன் ஒருநாள் கேட்ட "அவங்கெல்லாம் பணக்காராக்களா இரிக்கிரப்ப, ஏனப்பா இவங்கட தொழிலுக்கெலாம் ஆரம்பமா, அடிப்படையா இருக்குற தொழிலச் செய்ற நாம இன்னும் கடன்காரனாவே இருக்கிறம்". என்ற கேள்விதான் ஓடிக்கொண்டிருந்தது.

இப்படித்தான் உலகெங்கிலும் விவசாயிடம் சுரண்டல் நடக்கிறது. தான் செய்யும் உற்பத்திக்கு விலை வைக்கும் உரிமைகூட இல்லை. துரையானுக்கு நடந்தது போன்றே இங்கு தினந்தினம் ஒவ்வொரு விவசாயியின் உழைப்பும் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இடைத்தரகர்கள், வியாபாரிமார் என்று ஏகப்பட்ட அட்டைகள் வேளாண்குடிமகனின் உதிரத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. நாட்டில் நடக்கும் ஒவ்வொரு பிரச்சினையாலும் அதிகளவில் நொந்துகொண்டிருக்கிறார்கள் தினம்தினம் துரையான் போன்ற விவசாயிகள்.

முதலாளி கொடுத்த பணம் துரையான் அந்தப் போக விவசாயத்துக்கு பட்ட கடனை அடைத்து முடிக்கவே போதாது, இதில் எப்படி தன் அன்றாட தேவைகளை முடிப்பது என்று யோசித்தபடியே வந்துகொண்டிருந்தான் துரையான். அவனின் சைக்கிள் வீதியில் ஏறும்போது நெல் மூடைகளை ஏற்றிய ஊர்திகள் வரிசையாக ஊர் எல்லையை தாண்டிப் போய்க்கொண்டிருந்தன. இப்படித்தான் உள்ளூர்க்காரனாலும் வெளியூர்க்காரனாலும் ஒவ்வொரு விவசாயியின் உழைப்பும் அரைவிலைக்கும் கால்விலைக்கும் சுரண்டப்படுகின்றது என்று உணர்ந்தும், எதுவுமே செய்ய வல்லமையில்லாமல் துரையானின் சைக்கிள் நகர்ந்து கொண்டிருந்தது. தற்கால விவசாயிகளின் வாழ்க்கைபோல..

-சிவஞானம் பிரதீபன்

விவசாய பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்ப்பொருள் காண்பதறிவு

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற் பயன் என்பர். கல்வி கற்றலின் இறுதிப்பயன் வீடடைதலாகும். ஞானத்தின் முடிவு முத்தி அல்லது வீடு என்பர். அதனை மெய்யுணர்வு என்றும் கூறுவர். மெய்யுணர்தலுக்கு இடையூறாயிருப்பது உலக வாழ்வில் உள்ள சிற்றின்பப் பற்றுதலாகும். இப்பற்றினை அறுத்தல் மிக மிக அவசியமாகும். மெய்ப்பொருள் ஆராய்ச்சியின் முதற்படியாக நாம் அறிந்துகொள்ள வேண்டியது மெய்ப்பொருளின் இலக்கணங்களை அறிதலாகும். பொய்ச்சமய நெறிகளை தழுவி நிற்போர் பொருள் அல்லாதவற்றைப் பொருளெனக் கொண்டு மயங்குவர். இம்மயக்கத்தினால் அறியாமையால் துன்பம் தரும் பிறவிச்சூழல் நம்மைவிட்டு நீங்காது.

அறியாமை நீங்கி மெய்யுணர்வைப் பெற்றோரே வீடுபேற்றை எய்துவர். அத்தகையோரை ஐயங்களும் திரிபுணர்ச்சியும் தாக்குவதில்லை. ஆராய்தலின் மூலம் மெய்ப்பொருளை அறிதல் மிக்க பயனைத்தரும். ஆராய்தலில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என மூன்று படிகள் உண்டு. இப்படிகள் வழிநின்று மெய்ப்பொருளை உணர்தற்கு முற்படுவோர் முதலில் உண்மை உணர்ந்த உத்தம ஆசாரியார் ஒருவரைத் தமது ஞான குருவாகக் கொள்ளவேண்டும்.

ஞான குருவையடைந்து அவர்கள் உபதேசங்களைக் கேட்டுச் சிந்தித்து உண்மையை ஐயந்திரிபற அறிந்திடவே சிந்திக்க வேண்டும். சிந்தித்துத் தெரிதல் வேண்டும். அங்ஙனம் சிந்தித்துத் தெரிதல் பிறப்புக்குக் காரணமாக உள்ள அறியாமை மனக்கிலேசங்களும் அகலும் முத்திக்கு வழிகாட்டும் முதல்வனை இறைவனைக் காண்பதே மெய்யுணர்வு என்பது புலனாகும். **"பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பெனுஞ் செம்பொருள் காண்பது அறிவு"** என்னும் வள்ளுவர் வாக்கும் இதனையே உணர்த்துகிறது. துன்பங்கள் நம்மைச் சாராமல் இருக்க வேண்டுமானால் அத்துன்பங்களுக்குக் காரணமானவற்றை உணர்ந்து அவற்றின் மீதுள்ள பற்றை விலக்கிக் கொள்ள வேண்டும். செம்பொருள் காணும் வழியும் அதுவே.

கல்வி என்பது அறியாமையை அறிவது, நமக்கு அறிவெனும் ஒளியைத் தருவது, கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அது அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை நம்முள்ளத்தே திறப்பதாகும். கல்வியின் பயன் கடவுளைத் தொழுவதாகும். எனவே நாம் பெறும் கல்வி நமக்கு ஆன்ம ஞானத்தைத் தருதல் வேண்டும். கல்வி நமக்கு அறிவைத்தருகிறது அறிவினால் மெய்ப்பொருளை அறிந்திடும் பேறு கிடைக்கிறது. **"கல்வி கரையில் கற்பவர் நாட்சில"** என்றுரைக்கிறது நாலடியார். எனவே நாம் பெறும் கல்வியின் மூலம் குறுகிய காலத்திலேயே மெய்ப்பொருளை அறிந்திட முயலவேண்டும்.

**"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருளை காண்ப தறிவு"** என்னும் குறளும் உண்மையை மெய்ப்பொருளை உணர்வது தான் அறிவுடைமையாகும் என வலியுறுத்துகிறது. ஆதலின் நமது கல்வி அறிவை மெய்ப்பொருளை உணர்த்திடும் வகையில் பயன்படுத்தல் அவசியமாகும். **"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"** என்றார் வள்ளுவர். நாம் யார் யாரிடம் என்ன பொருள் பற்றிக் கேட்டாலும் கேட்பதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் சிந்தித்து அதில் உள்ள மெய்ப்பொருளை உணர்தல் வேண்டும். அதுவே அறிவு என்கிறார் வள்ளுவர். அந்த அறிவு இருந்தால் தான் கூறும் கருத்தைப் பிறர் விளங்கும்படி எளிமைப்படுத்திக் கூறலாம். பிறர் கூறுவதிலுள்ள நுண்ணிய கருத்துக்களைக் கூறலாம். உலகத்தோடொட்ட ஒழுகுதலும் அறிவுடைமையாகும்.

**"உலகந் தழிஇய தொட்பம் மலர்தலுங் கூம்பலு மில்ல தறிவு"** என்கிறார் பொய்யில் புலவரான வள்ளுவர். உலகோர் எனப்படுவதால் அவர்களுடன் நட்புக்கொண்டு இன்பம் துன்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இரண்டையும் ஒரே நிலையாகக் கருதுவது அறிவுடைமையாகும். ஆதலால் உயர்ந்தோர் வழியில் உலகம் எவ்வாறு நடைபெறுகிறதோ அதற்கேற்ப நடந்து கொள்வதே அறிவாகும். ஆதலால் நாம் பெற்ற அறிவை பயன்தரும் வகையில் பயன்படுத்த வேண்டும். எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பதை முன்னதாகவே எண்ணி உணர்தல் வேண்டும். அஞ்சுவதற்கு அஞ்சி, நல்லவனவற்றை நயந்து நம் வாழ்வைப் பயனுடையதாக்க வேண்டும்.

**"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார் என்னுடைய ரேனுமிலர்"** என்னும் குறள் கூறும் கருத்துக்கமைய நம் அறிவைப் பயன்படுத்தி மெய்ப்பொருளைக் கண்டு இவ்வுலகிலும் மறுமையிலும் அழிவிலா ஆனந்தத்தை முக்தியின்பத்தைப் பெற முயல்வோமாக....

**-கு.கோகுலன்**

**முகாமைத்துவப்பீடம்**



**எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்பதறிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல் பாதுகாப்பு

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது இருபத்தோராம் நூற்றாண்டைச் சேர்ந்த எமக்கு பொருந்துவதில்லை எனக்கூற வேண்டும். எவ்வாறு பொருந்தும், சுற்றுச்சூழலை பாதுகாத்தால் தானே அது சாத்தியமாகும். இதற்கு முன்னதாக சுற்றுச் சூழல் என்றால் என்ன? அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும், அது எவ்வாறு மாசடைகிறது, எவ்வாறு அதை பாதுகாக்கலாம் என்பன பற்றி இக்கட்டுரையில் விரிவாக நோக்குவோம்.

சுற்றுச்சூழல் என்பது நீர்வளம், நிலவளம், காற்று, ஒலி போன்றவற்றை உள்ளடக்கி காணப்படுகின்றது. அவற்றை மட்டுமல்லாது எரிபொருட்கள் மற்றும் கனிமங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் நுண்ணங்கிகளும் மனித வளங்களும் கூட காணப்படுகின்றன. முதலில் நிலவளத்தை எடுத்து நோக்கினால் பிளாஸ்டிக் பொருட்களாலும், இரசாயன பதார்த்தங்களாலும் நிறைந்து காணப்படுகின்றது. இவ்வாறான மாசாக்கிகளால் மண்ணில் வாழும் உயிரினங்கள் அழிவடைகின்றன. மண்ணின் வளம் குன்றுகின்றது. அத்தோடு இரசாயனப் பொருட்களை விவசாயத்தில் பாவிப்பதால் நிலத்தை மட்டும் மாசடையச் செய்யாமல் எம்மையும் நோயாளிகளாக மாற்றுகின்றோம். மேலும் உக்காது எனத் தெரிந்தும் பிளாஸ்டிக் பொருட்ளை மண்ணினுள் புதைத்துவிடுகின்றோம். இது மழைநீரை பூமியின் அடிக்குச் செல்லவிடாமல் முட்டுக்கட்டையாக இருக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் நிலத்தடி நீருக்கு தட்டுப்பாடு ஏற்படலாம். இவை தவிர சட்ட விரோத மண் அகழ்வுகளாலும் நிலம், மண்வளம் பாதிப்படைகிறது.

"நீரின்றி அமையாது உலகு" என்றார் வள்ளுவர். அதை உறுதிப்படுத்தும் வகையில் உலகில் 75% ற்கும் அதிமாக நீர்வளமே காணப்படுகின்றது. அதிலும் பெரும்பாலும் உவர்நீர் மனிதனுக்கு பெரிதளவில் பயனற்றதாக காணப்படுகிறது. மிகச் சிறிய அளவான நீரே மனித பயன்பாட்டுக்கு ஏற்புடையதாக இருக்கிறது. அத்தகைய நீர்வளத்தை நாம் பல்வேறு மனித செயற்பாடுகளால் மாசடையச் செய்கின்றோம். பல்வேறு பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் இரசாயன கழிவுகள் நீரினுள் கலக்கப்படுதல், முறையற்ற வடிகாலமைப்பு, முறையற்ற கழிவு முகாமைத்துவம் போன்றவையே இதில் அதிகளவு பங்கைச் செலுத்துகின்றது. மேலும் சுயநலமுடைய மனிதர்கள் குப்பைகளை நீரினுள் கொட்டிவிடுகின்றார்கள் இதுவும் நீர் மாசடையக் காரணமாக அமைகிறது. நீர் என்பது மனிதனுக்கு மட்டுமல்ல பல்வேறு உயிரினங்களின் வாழிடமும்கூட என்பதை அடிக்கடி மறந்துவிடுகின்றோம். இதனால் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது, நீர்வாழ் உயிரினங்கள் அழிவடைகின்றன மேலும் விவசாயத்திற்கு நீர்ப்பற்றாக்குறை ஏற்படுகின்றது இத்தகைய நீரைப் பருகுவதால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதோடு இவை உயிராபத்தை கூட ஏற்படுத்தும்.

அடுத்ததாக வளி பற்றி பார்ப்போமானால், வளி உயிர்களின் சுவாசத்திற்கு இன்றியமையாததொன்றாகும். வளியில் பல்வேறு நுண்ணுயிர்களும் தூசு துணிக்கைகளும் காணப்படுகின்றன. இத்தகைய வளியானது பல்வேறு மனித செயற்பாடுகளினால் அதிகம் மாசடைகின்றது. வளியில் பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் விசமுடைய வாயுக்கள் சேர்கின்றன. மேலும் வாகனங்களிலிருந்து முறையற்ற விதத்தில் வெளியேற்றப்படும் புகை மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகையினாலும் வளியானது மாசடைந்து செல்கிறது. இதனால் வளியிலுள்ள ஓசோன்படலம் தேய்வடைகிறது. இதன் விளைவக சூரியனிலிருந்து வரும் கழியூதாக்கதிர்கள் பூமியை அதிகளவில் வந்தடைகின்றன. இக் கதிர்களின் விளைவாக தோல்நோய்களும், புற்று நோய்களும், கண் தொடர்பான நோய்களும். ஏற்படுகின்றன. மேலும் புவியின் வெப்பநிலை உயர்வடைகின்றது. புவி வெப்பமடைவதில் காடழிப்பு பெரும்பங்கு வகிக்கிறது. நமது அன்றாடத் தேவைகளுக்காக ஏற்படுத்தும் காடழிப்பும் பெரியளவில் தாக்கத்தைச் செலுத்துகின்றது. இதனால் சூரியனிலிருந்து வரும் கதிர்கள் அதிகளவில் பூமியை அடைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் விவசாயப் பயிர்களின் வளர்ச்சி பாதக நிலையை அடைகின்றது. இதன் விளைவாக உணவுப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. அத்தோடு நீருக்கு பஞ்சம் மற்றும் வறட்சி ஏற்பட்டுள்ளது. மேலும் துருவப் பகுதிகளிலுள்ள பனிப்பாறைகள் உருகுவதால் கடல் மட்டம் அதிகரித்து ஊருக்குள் கடல் நீர் புகுதல், திடீர் அனர்த்தங்கள், பருவநிலை மாற்றம் என்பனவும் ஏற்படுகின்றது. இது மட்டுமல்ல சிறு தீவுகள் நீரினுள் மூழ்கும் நிலைகூட ஏற்படலாம்.

சூழலைப் பாதுகாக்க எம்மாலான சிலவற்றைச் செய்யமுடியும். இதற்காக தனிமனிதன் ஒவ்வொருவரும் புகை வெளிவிடும் இயந்திர வாகனங்களைப் பயன்படுத்துவதை தவிர்த்து பொதுப்போக்குவரத்தை உபயோகிக்க வேண்டும், பிளாஸ்டிக் பொருட்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்த வேண்டும். முறையான கழிவு முகாமைத்துவத்தை தொழிற்சாலைகளில் பயன்படுத்த வேண்டும், பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை இயன்றவரை குறைக்க வேண்டும், மேலும் இயற்கை உரங்களை விவசாயத்திற்கு உபயோகிப்பதோடு முறையற்ற மண் அகழ்வைத் தவிர்க்க வேண்டும், அத்தோடு உக்கக்கூடிய குப்பைகளை மண்ணினுள் புதைப்பதன் மூலமும் அதிகளவான மரங்களை நாட்டுவதன் மூலமும் இதனைத் தவிர்க்கலாம். மேலும் இவை பற்றிய விழிப்புணர்வுகளை பாடசாலை மாணவர்களிடையேயும் சமூகத்திடையேயும் ஏற்படுத்த வேண்டும்.

சூழலைப் பாதுகாக்க தனிப்பட்ட ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாமும் அவர்களுடன் கைகோர்த்து எமது சூழலைப் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு கையளிப்போம்.

**"வீடு வளம்பெறின் நாடு வளம்பெறும் நாடு வளம் பெறின் இவ்வுலகம் வளம் பெறும்"** எனவே அனைவரும் ஒன்றிணைந்து சுற்று சூழலை பாதுகாப்போம்.

**-க.டன்சிகா**
**விஞ்ஞானப்பீடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலின சமத்துவம் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந் நிற்பது தாய் சிவ சக்தியாம்
நாணமும் அச்சமும் நாய் கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மை தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ"

என்பது மகாகவி பாரதியாரின் கவி வரிகள் ஆகும். இக்கவிகள் இன்றும் உயிரற்றே இருக்கின்றன. "பாலின சமத்துவம்", "பாலின சமத்துவம்" என்று வெறும் நா பேச்சாகவே இன்றும் சிலர் பாடிக்கொண்டு திரிகின்றனர். மானிடர்கள் இதன் உண்மையான அர்த்தத்தை உணர்ந்து, பரஸ்பர மரியாதையை உயிருடன் கலந்து, உணர்ந்து இப்பாலினத்தை உயிர்ப்பிக்க யாரும் முன்வர மாட்டார்கள்.

பாலின சமத்துவம் என்றால் என்ன? "ஆண், பெண், மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களை சமூகத்தில் சமமாக நடாத்தும் செயல்முறை". ஆனால் இன்றைய 21ஆம் நூற்றாண்டிலும், நவீன தொழில்நுட்ப உலகத்திலும், கல்வி கற்றவர்களும் கூட இப்பாலின சமத்துவத்தை ஏற்றுக் கொள்வதில்லை. ஏன்? என்ன காரணம்? பெண்கள் இன்னும் நிராகரிக்கப்படுவதற்கு மூத்தவர்களும் இளைஞர்களும் உப்பு புளிக்காரமற்ற காரணங்களையே சொல்லிப் பாடி திரிகின்றார்கள்.

ஆண் ஒரு திசை என்றால், பெண் இன்னொரு திசை. இரண்டும் எப்படி சமனாக முடியும்? ஆண் செய்யும் வேலைகளை பெண்ணால் செய்ய முடியாது. பெண் பயன்பட்டவளாகவும், பொறுமையாகவும் இருப்பவள் ஆண் ஆள்பவனாக இருப்பவன். ஆணுக்கு நிகர் பெண் என்பதை காலங்காலமாக சொல்லி வருகின்ற போதிலும் உண்மையிலே ஆணுக்கு நிகராக பெண்கள் போற்றப்படுகின்றார்களா என்றால், "இல்லை". பெண் என்பவள், ஒரு குழந்தையைக் கருவில் வைத்து வளர்த்து அந்தக் குழந்தையை பிறக்கின்ற நிலைக்குக் கொணர்ந்து பின் பிறந்த குழந்தையையும் சமூகத்தில் ஒரு நல் மனிதனாக உருவாக்குவதில் பெண்ணின் பங்கு மிக மிக இன்றியமையாதது. ஆனால் அப்படிப்பட்ட பெண் கருவில் உள்ள போது அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் பெரும்பான்மையோருக்கு இல்லை. எத்தனை ஆண் குழந்தைகள் பிறந்தாலும் சந்தோஷப்படும் குடும்பம் அடுத்தடுத்து பெண் குழந்தைகள் பிறக்கின்ற பட்சத்தில் அந்த சந்தோஷத்தை தொலைத்து விடுகின்றார்கள்.

இவ்வாறு கருவிலே பாகுபாட்டிற்கு உள்ளாகும் பெண், தனது வாழ்க்கையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் சவால்களை மட்டுமே சந்திக்கின்றாள். ஒவ்வொருவரையும் பிறக்கும் போது அவர்களின் பாலுறுப்பை வைத்தே ஆண், பெண் என்று உறுதிப்படுத்த முடியுமே தவிர அவரவர்களின் முயற்சிக்கு ஏற்ற பயனை அடையட்டும் என்று சமூகம் என்றும் அங்கீகரிப்பதில்லை. இதற்கு காரணம், ஆண் என்ற ஆணாதிக்க மனோபாவம், பெண்ணை பலவீனமாக நினைக்கும் மனோநிலையும் தான். ஆணுக்கு இருக்கும் அதே புத்திசாலித்தனமும் சாமர்த்தியமும் பெண்ணுக்கு இருக்கின்ற போதிலும் ஆண் என்பவன் ஏழு கடல் தாண்டினாலும் வாழக்கூடியவன்.

பெண் என்பவள் வீட்டைத் தாண்டினாலே பிரச்சினைதான் என்கின்றது இந்த ஏளனமிக்க மக்கள் கூட்டம். பெண் என்பவள் சமூகத்துடனும், வெளி உலகுடனும் தொடர்பில் இல்லாத நிலை வரை எவ்வித பிரச்சினையும் இல்லை. அவர்களை வெளியே அனுப்பினாலே பிரச்சினைதான். ஆனால் பெண்களுக்குப் பிரச்சனைகளை கொடுப்பவர்கள் ஆண்கள் தானே. ஆண் என்ற ஆண் ஆதிக்கமும், தான் உயர்ந்தவன் என்ற மனநிலையும், திமிரும், கர்வமும் தான் காரணம். இதனாலேயே பெண்களை தன் அடிமைகளாக ஆண்கள் இன்றும் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அவர்களை வெளியே விடாமல் கூட்டினுள் அடைத்து வைத்த கிளியை போல வீட்டிற்குள்ளேயே அடைத்து இப்படி இருந்தால் எப்படி இவ்வுலகம் மாறும்? பெண்களுக்கு வெளியுலகுடன் தொடர்பு, நல்ல கல்வி என்பன கிடைத்தால் தானே ஆணும் பெண்ணும் முழுமையான மனித இனமாக மாறுவார்கள். பெண்ணும் எதிர்காலத்தில் நல்ல தாயாக பரிணமிக்க முடியும். ஆரம்ப காலங்களில் பெண்கள் இவ்வாறு வீட்டில் அடைத்து வைத்து இளம் வயதிலேயே யார் ,எவர் ,எப்படிப்பட்டவர் என்று எதுவும் அறியாத ஒருவரிடம் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளனர். அவன் ஆணாக இருந்தால் மட்டும் போதும் தன் பெண்ணிற்கு ஏற்றவனா, கல்வி கற்றவனா, தன் பெண்ணை புரிந்து நடந்து கொள்பவனா இவ்வாறு எதையும் பாராமல் அவனை மணந்து வைத்து விடுகின்றனர். கண்ணைக் கட்டி பூனையை காட்டில் விட்ட கதை தான் இது ஆனால் இன்றைய உலகில் இத்தகைய ஏளனமிக்க செயல் கொஞ்சம் குறைவடைந்து வந்துள்ளது.

உண்பதும், உறங்குவதும், ஊர்க்கதைகள் பேசுவதும் பெண்களின் குணங்கள் என்கின்றார்கள். ஆண்களும் அப்படித்தானே வாழ வைக்கின்றார்கள். பாரதியார் போன்ற பெரியார்கள் அழுத்தமான குரலில் கொஞ்சம் கொஞ்சமாக பெண்ணுரிமை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தத் தொடங்கினாலும் அதுவும் உடனடியாக நிகழவில்லையே, நிகழப் போவதும் இல்லை.

ஒரு குழந்தைக்கு தன் தாயே முதல் தெய்வம். ஒரு குழந்தை பிரசவிக்கும் போது தாயானவள் அத்தனை வழிகளையும் தாங்கி மறுபிறவியை எடுத்து குழந்தையை பிரசவிக்கின்றாள். அக்குழந்தை தினந்தோறும் தன் தாயைப் பார்த்தே வளர்ந்து வருகின்றது. ஆனால் தாயானவள் படிப்பறிவு அற்றவளாக இருந்த போதிலும் பாசத்தில் அவளை மிஞ்சிட யாரும் இருக்க முடியாது. இக்காலகட்டத்தில் குழந்தை தாயைப் போன்று வரவேண்டும் என்று எதிர்பார்ப்புடன் இருக்கையில், தாய் படிப்பற்றவளாக இருந்தால் அக்குழந்தையும் கூட தாயை நிராகரிக்கும் மனநிலை ஏற்பட வாய்ப்பு உண்டு. ஏன் கல்வி மட்டுமே அழியாத செல்வம் அந்த செல்வத்தைக் கூட தாயானவள் பெற்றிருக்கவில்லை எனில், நாளை தன் தாய் என இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தவும் தயக்கம் கொள்ளும். இப்படிப்பட்ட கருத்துக்கள் இருக்கையிலும் தாயானவள் இதற்கு நிகராக தான் கல்வி பெறாவிடினும் தன் கல்வியையும் சேர்த்து குழந்தை பெற்றிட வேண்டும் என்று நினைக்கும். அனைத்தும் காலத்தினது மாயையும், மக்கள் கூட்டத்தின் போதையும் தான். தற்போதைய சூழ்நிலையில் கல்வி இல்லாத பெண் குழந்தை பெற்றெடுக்கவும் தகுதியற்றவள் ஆகின்றாள்.

இன்றும் கூட பெண்கள் மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், ஏன் விமானிகள் ஆகவும் கூட விளங்கினாலும் அவர்களை போற்றும் பாடின்றி "பெண்தானே' என்கின்ற எண்ணமே மேலோங்கி உள்ளது. ஆண்களை விட பெண்கள் உயர்பதவி வகித்தாலும் ஆண்களுக்கு கிடைக்கின்ற சலுகைகளும், மரியாதைகளும் ஏன் சம்பளமும் கூட பெண்களுக்கு கிடைப்பதில்லை.

எனவே பெண்களும் சரி, மூன்றாம் பாலினத்தவர்களும் சரி தங்களுக்கான உரிமைகளை தாங்களே தேடிப் போராடி பெற்றுக் கொள்ள வேண்டும். ஆக்கபூர்வமான சமூக மாற்ற செயற்பாட்டால் மட்டுமே பாலின சமத்துவத்தை அடையலாம். ஆண் எந்த அளவிற்கு சமூக அமைப்பிலும் பொருளாதார அமைப்பிலும் மேலோங்கிய உரிமை கொள்பவனாக இருக்கின்றானோ அதே அளவிற்கு பெண்கள் மூன்றாம் பாலினத்தவர்கள் உரிமை கொண்டவர்களாக சமூகம் அங்கீகரிக்கப்படும் போதே பாலின சமத்துவம் மேம்படும்.

**-சத்தியசீலன் மிஷானி**
**இணைந்த சுகாதார விஞ்ஞானப்பீடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அர்த்தம்

காற்றில் அவள் கருங்கூந்தலும் அசைய, மல்லிகையும் மார் தட்டி அந்த கூந்தலில் குடிபுகுந்து நிற்க முன்னழகை மறைத்துக்கிடந்த அந்த சேலையினிடையே மெல்லிடை கசிய, புதுமையாய் ஒரு பதுமை! சாலையோர மரங்களும் மலர் தூவ, அவள் புருவங்களில் பொறுத்து அவள் விழிகளிலிருந்து பாய்ந்த அம்புகள் அந்த சாலையின் தன்னிலை மறந்த பல ஆடவரின் இதயங்களை பதம் பார்த்துச் சென்றன. அந்த விழிகளில் ஏதோ நிழலாடிக்கொண்டிருந்தது. அறியாத கேள்விகள் புரியாத பயங்கள் முடிச்சுக்கள் கோர்வையாகியிருந்தன. ஆடவரின் நிழல்கள் கூட அவளுக்கு அருவருப்பாய் தோன்றிற்று. நிழல்களின் வாசம் கூட அறியக் கூடாதவளாய் தயங்கித் தயங்கி விலத்தி நடந்து கொண்டிருந்தாள் சுமதி.

அவளின் மழலை நினைவுகளில் மட்டும் நிழலாகியிருந்த தந்தையின் பிரிவு, சமூகத்தின் எழுதப்படாத விதிகளை மீறி ஒற்றைப் பெண்ணால் வளர்க்கப்பட்டவள். கிராம வாசனை துறந்து வேலை தேடி நகரம் நாடி வேடந்தாங்கல் பறவைகளானார்கள் தாய் மல்லிகாவும் அவளின் அரும்பு மொட்டும்! இரட்டை வயிற்றுப் பசி போக்க ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் மணிக்கு நூறு என கூலியாளானாள் மல்லிகா. வறுமைப் பசியை அளந்து போக்கினாலும் அரசுபள்ளி கல்வியை மட்டும் அள்ளிக்கொடுத்திருந்தது.

தாயின் போராட்டம் சேயின் மனதில் இலட்சியத்தை விதைத்து விட ஆசிரியக்கனவுடன் கல்வி கற்றாள் சுமதி. மாத இறுதியில் கையில் மீதிருந்த பணத்திற்கேற்றாற் போல் ஒற்றை அறையும் குசினியுமாய் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தனர். ஆனால் வீட்டின் சூழல் அமைவு விந்தையாய் தான் இருந்தது. தகாத வார்த்தைப் பிரயோகம், தடுமாறும் இளசுகள், பார்வைகளால் பெண்ணியத்தை அளந்து கொள்ளும் ஆடவர் என சமூகத்தின் சீரழிவுகளை தத்ரூபமாய் சித்தரித்து பள்ளி முடித்ததும் பக்குவமாய் வீட்டினுள் தஞ்சம் கொண்டு விடுவாள் சுமதி. இருப்பினும் இந்த சிட்டின் சஞ்சரத்தை ஏதோ இரு கண்கள் கவனித்துக் கொண்டு தான் இருந்தது என்பதை அன்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. அந்த இரு கண்கள் அந்த சிட்டின் சிறகை ஒடித்துப்போட தக்க தருணத்திற்காய் காத்திருந்து சுற்றமும் அறியாமல் சூழ்ச்சியால் கச்சிதமாய் செய்து முடித்தன. தான் அனுபவித்ததை என்னவென்று வர்ணிக்க முடியாதவளாய் அன்று சுமதி சுற்றத்தை எதிர்த்து நகரத்தை நாடி வந்தவள், தந்தையின் துணையின்றி தனித்து வளர்த்துக்காட்டுவேன் என சபதம் பூண்டவள் , மூச்சிருந்தும் முடமாகிக்கொண்டாள் மல்லிகா. நான்கு சுவர்கள் மட்டும் அறிந்தவற்றை நகரத்தின் நாளிதழ்களுக்கு தீனியாக்க எண்ணாது ஒரு சில இரகசிய மருத்துவ சிகிச்சையின் பின் பாதுகாப்பாய் ஒரு பெண்கள் விடுதி ஒன்றில் அடைக்கலம் கொண்டனர் இருவரும். பாலியல் வன்கொடுமையின் வரைவிலக்கணம் கூட அறியாத அந்த சின்னவளுக்கு அது பற்றிய பேச்சுக்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

ஆனாலும்......

அவளின் வடுக்களாய் அந்த நினைவுகள், ஆண்டுகளின் வளர்ச்சி அன்று அவளுக்கு நடந்தது இன்னதென்று புரிய வைத்தது. ஆண்களை அருவருப்பாய் பார்க்க தூண்டிற்று. வயதுடன் வளரும் காதல் உணர்வுகளையும் அவளிடம் கொன்று போட்டது. இருப்பினும் அந்த ஒற்றைத்தாயின் வீரியம், சுமதியை ஓர் ஆசிரியை ஆக்கிற்று. அவளின் கடந்த காலத்தை அறியாத பல்கலைச் சூழலும் வேலைத்தளமும் அவளின் கதாபாத்திரத்தை திமிராய் எடை போட்டு தனிமையை பரிசளித்தன. அத்தனையும் சுமந்து கொண்டு தான் இன்று இந்த பதுமை பள்ளி நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றாள். ஆனாலும் இந்த திமிராய் சித்தரிக்கப்பட்ட பெண்ணின் கதாபாத்திரத்தின் பின் அந்த பதுமையின் அழகைத்தாண்டி புதுமையான குணத்தை இரசித்துக்கொண்டிருந்தான் குணாத்மன்.

சுமதியுடன் அதே பாடசாலையில் கற்பிக்கும் சக ஆசிரியர், ஒற்றை மகன், அறுபதுகளில் பெற்றோர்கள் இருந்தும் தற்கால உலக நடப்பிற்கு பழக்கப்பட்டவர்கள். தந்தை சுந்தரலிங்கம் முற்போக்காளர். தேநீர் கடைகளின் முற்போக்குப் பேச்சாளர். சமூகத்தின் போலி சட்டங்களுக்கு முன் மகனின் விருப்பை மட்டுமே சிரத்தை செய்வார்கள். சாதாரண தரத்தில் சற்றுத் தடுமாறி கிடந்த பெறுபேறு, சுற்றத்தாரின் பேச்சை மீறி மகனின் அவாவிற்கு ஏற்றவாறு கணிதப்பிரிவை கற்பித்தனர். அவனும் தாய் தந்தையின் கனவை சிதைக்காதவனாய் ஆசிரியனானான். கணக்கின் சிக்கல்களை கச்சிதமாய் தீர்ப்பதாலும் மாணவர்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசானைத்தாண்டி அவர்களில் ஒருவனாகி விட்டதாலும் மாணவரின் மனம் கவர்ந்தவனாகி விட்டான் குணாத்மன். சக ஆசிரியர்களுடன் அவனின் சுமூகமான உறவு, மாணவர்களின் கதாநாயகன் என அவனின் கதாபாத்திரம் அவளிடம் அவனை ஒரு நல்ல மனிதனாக திரையிட்டுத் தான் இருந்தது. ஆனால் அவளின் கதாபாத்திரத்தை ஒரு மனிதியாக தாண்டி ஒரு மனைவியாக காட்சிப்படுத்தியிருந்தது.

மறுதலிப்பு பற்றிய பயம் அவளிடம் அவனின் உணர்வுகளை வெளிப்படுத்தத் தடை போட்டிருந்தது. அவ்வப்போது அவன் விழிகளின் பார்வையில் விழுந்து செல்லும் அந்த மங்கையை இரசித்து விடத்தான் செய்கின்றான். அதையும் தாண்டி மாணவர்களுடன் அவளின் நடை, உடை பாவனை, அடுத்தவரை வார்த்தைகளில் வஞ்சித்துக்கொள்ளாத குணம், ஆசிரியர் ஓய்வறைகளில் மலிந்து கிடக்கும் மாணவ மட்டத்தட்டங்களில் பங்கு கொள்ளாத குணம் என அத்தனையும் மெய் சிலிர்த்து விடத்தான் செய்கின்றன. சில சமயங்களில் அவனின் கனவுகளிலும் அவள் நிழலாடிக் கொள்கின்றாள். சொல்லாத காதலாய் காலம் அதை மென்று விடாது ஒரு நாள் தைரியத்தை தன்னுள் வரவழைத்தவனாய் தன் உணர்வுகளை உளறித் தீர்த்தான். அவளிடம் பெண்மை பேசிய போதும் அவளின் வடுக்கள் வலிந்து மறுத்துக் கொண்டன. பெண்மையை புதைத்து உண்மையை உரைக்க முடியாது விலகிக் கொண்டாள் சுமதி.

குணாத்மனோ தன் மீது குற்றத்தை சுமத்திக்கொண்டு திரும்பிக்கூட பார்க்காது சென்று கொண்டிருந்த சுமதி, காற்றில் நிழலாகும் வரை பார்த்துக்கொண்டிருந்தான்.இவனின் இரசனையற்ற முகத்தின் பாவனைகளை அறிந்தவளாய் தாய் சரஸ்வதி கேட்டும் ஒன்றும் கூறிக்கொள்ளவில்லை. வழமையான வார இறுதியின் விருந்தை இரசித்துக்கொள்ளும் அவனின் அன்றைய விசித்திரமான உணவுத்தவிர்ப்புக் கூட சரஸ்வதியம்மாளிடம் கவலையை ஏற்படுத்தியது. சுமதியின் வார இறுதி நாட்களும் குணாத்மனின் நினைவுகளில் தான் கரைந்திருந்தது. வாய் மறுதலித்தும் மனம் ஒரு காதல் மலர்ச்சியை கோரி நின்றது. அடுத்த நாள், திங்கட்கிழமை! காலை பிரார்த்தனை நேரத்திலும் ஓரப் பார்வையால் குணாத்மனை நோட்டம் விட்டிருந்தாள் சுமதி. அந்த வழமையான குணாத்மன் தொலைந்திருந்தான்! கலகலப்புக்கள் கலை இழந்திருந்தன. ஏதோ ஒரு சோர்வு, அந்த முகத்தில் காதல் பிரேரணைகளின் நிராகரிப்பும் அது வருவித்திருந்த உணர்வுத்தவிர்ப்பும் முகத்தில் திரையிடப்பட்டிருந்தது. ஆனால் அவன் அவள் மனம் கவர்ந்தவன் அல்லவா! எவ்வாறு அவனை அவள் அவ்வாறு விட்டுவிடுவாளா? மனதை திடப்படுத்திக்கொண்டு தன் ஆறிப்போயிருந்த காயங்களின் வடுக்களை கூற முடிவு செய்தாள்! இதுவரை வேலை தொடர்பான செய்திகள் மட்டும் பகிரப்பட்ட அந்த குறுஞ்செய்தி உரையாடலில் ஒரு குறுஞ்செய்தி, ஒரு சில நிமிடங்கள் தனிமையில் உரையாடல் வேண்டுமென ஒரு பிரேரணை! காதல் நிராகரிப்பில் சோர்ந்திருந்தவனுக்குள் ஒரு குதூகலிப்பு! சுமதி ஏற்கனவே காலத்தையும் நேரத்தையும் தீர்மானித்திருந்தாள். குணாத்மனோ குறித்த நேரத்திற்கு முன்னரே வந்து காத்திருந்தான். தூரத்தில் சுமதி காற்றிலாடும் கருங்கூந்தலை நீவி விட்டவளாய் ஒரு நீல வண்ண சுடியில் அவன் மனதைக் கட்டி ஈர்த்தவளாய் பதட்டத்தை அவளின் அந்த அழகினுள் மறைத்து வந்து கொண்டிருந்தாள்.

அவனினுள்ளும் பதட்டம் பல வேலைகளை செய்து கொண்டிருந்தது. அவள் மெல்லமாகத் துவங்கி அத்தனை வடுக்களையும் விழிகளினுள் பெருகிய நீர்த்துளிகளுக்கு விலங்கிட்டு கொண்டு அவனின் கண் முன் வரைந்து கொண்டிருந்தாள். ஆனால் அவளால் புதிராகிக் கொண்டிருந்த குணாத்மனின் முகபாவனையை கற்றறிய முடியவில்லை. திடீரென்று இடைமறித்தவன் அவளின் கேள்வி எழுந்த முகத்தைக் கூட பார்க்காமல் அவளுக்கு ஏமாற்றத்தை விட்டுவிட்டு விரைந்து கொண்டிருந்தான். உடைந்து போனாள் அவள்! இவளின் தவறு தான் என்ன? பெண்ணாய் பிறவி எடுத்ததோ? இன்றுவரை காதலுக்கு கடுகளவும் இடம் கொடுத்திராதவள் அந்த காதலின் சித்திரவதைகளை அனுபவிக்கின்றாள்!

அடுத்தநாள் அவனின் முகத்தை நோக்க விரும்பாது போலிக்காய்ச்சலால் பள்ளிக்கு லீவு சொல்லி விட்டு வீட்டின் அறைகளினுள் அடைக்கலம் கொள்கின்றாள். அந்தி சாயும் வேளை, பகலவன் கூட பணி முடித்து திரும்பிக்கொண்டிருந்தான். வீட்டு முற்றத்தில் படர்ந்திருந்த அந்த வேம்பில் ஓடித்திரிந்த அணில்களை இரசித்தவளாய் அமர்ந்திருந்தாள் சுமதி. வீட்டு வாசலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கார் வேகத்தை மெதுவாக்கி இயக்கத்தை தனித்துக் கொண்டது. குசினிக்குள் இரவு உணவைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த மல்லிகாவும் வெளியே வந்தாள். காரிலிருந்து இறங்கினான் குணாத்மன். பின்னாலேயே பைகள் சகிதம் இறங்கினார்கள் சுந்தரலிங்கம் சரஸ்வதி தம்பதியினர். படலையை உரிமையோடு திறந்து கொண்டு முற்றத்தினுள் நுழைந்தனர். சுமதிக்கு ஒன்றும் புரியவில்லை. எழுந்து ஆடையை சரி செய்து கொண்டு வந்தவர்களை வரவேற்றாள். நடப்பவற்றின் அர்த்தம் அறியாது நின்றிருந்த மல்லிகாவும் சுமதியின் அழைப்பில் நிதானித்தவளாய் கதிரைகளை இழுத்து போட்டாள்.

சுந்தரலிங்கம் ஐயா குரலை சரி செய்து கொண்டு கதைக்க ஆரம்பித்தார். வரதட்சனையின் வாசம் கூட வீசாது வீட்டுக்கு விளக்கேற்ற சுமதியை மருமகளாக்கும் எண்ணத்தை சொல்லி முடித்தார். ஆனால் மல்லிகா சற்று தயக்கத்துடன் சுமதியை பார்த்தாள். அந்த தயக்கத்தின் பின் இருந்த காரணத்தை ஏற்கனவே மகனிடம் கேட்டறிந்திருந்த சுந்தரலிங்கம் ஐயா தனது ஆட்சேபனையற்ற சம்மதத்தை சொல்லி முடித்தார்.அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த மல்லிகா பூரித்துப் போனாள். இப்படி ஒரு குடும்பத்திற்கு வாக்கப்பட்டு போக கடந்த பிறவியின் புண்ணியம் என்று மனதினுள் சொல்லிக் கொண்டாள்.இறுதியாக அந்த இரு விழிகளும் சந்தித்துக் கொண்டன ஆனால் புதிய அர்த்தத்துடன்!

**அனற் கியூறி கமிலஸ்**

**பல்மருத்துவ விஞ்ஞான பீடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழினி மெல்லச்சாகும்

ஆக மொழியடக்கற் செயற்பாடுகள் இன்றல்ல, என்றோ எம்மொழிமீது தீந்தையடிக்கப்பட்டிருக்கின்றன. சோழவம்சம் சுரந்த இராமகாதை எதற்காய் முதன்முதலில் வடமொழியில் பாடப்பட்டது? மொழித்திணிப்பின் சூழ்ச்சிப்பின்னல் தானே அதனுடைய வரலாற்றுப் பின்னணி, அவற்றைப்பிய்த்து தமிழணுவை தரவிறக்கம் செய்திருக்கின்றானே கம்பன்...

அன்றைய மொழிமறைப்பாக்கங்களில் முகம் மூடாதவள் அல்லவா தமிழ்க்கிழவி. ஆக, இன்று இலக்கியச் சாட்சியங்களின் இனிப்பறியாத ஒரு சிறுபிள்ளை வந்து சேலையிழுக்க எப்படியவள் மானந்துறப்பாள்? தமிழவள் மூப்பழகி. அவளது கருணைப்பார்வையில் சிங்களம் கொள்ளுப்பேத்தி ......

கொள்ளுப்பேத்திகளின் சேலையவிழ்ப்புக்களில் இருபது ரூபாய் பறிபோகுமே தவிர, கிழவியின் இதயம் எப்படிக் களவுபோகும்? அன்றைய சமகாலக்கிழவிகளின் சுரண்டலுக்கே கம்பநிறை விரல்களாய் விருந்தளித்துச் சிரித்துப்போனவள், இந்தச் சிறுபிள்ளைச் சண்டைக்கா சிறுகிப்பாள் !

ஆமோதிக்கிறேன் : தமிழினி மெல்லச்சாகும்

மெல்ல......... அந்த வார்த்தையுமிழ் காலமும் மெல்லத்தான் வரும். வேண்டுமானால் கம்பனுக்கு யான் எத்தனையாவது பேரனோ, என்னுடைய அத்தனையாவது பேரனின் காலத்தில் வேண்டுமானால் அது நடக்கலாம்

என்ன அது கிறுக்கற் சத்தங்கள் ?............

என்னுடைய பேரன் "தமிழின் சாவுப்பேழை தயாரா" என்று தன்னுடைய வருநாள் பேரனுக்குக் கடிதம் எழுதுகின்றான்.

**-மதுமிதன்**

**மருத்துவ பீடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமலி...( களம் கண்ட காதலின் கதை )

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த கமலி திடீரென ஒலித்த வானொலி பாடலில் விழித்தாள். “சாரிம்மா சவுண்ட் கூட்டி இருந்தத கவனிக்காம ஒன் பண்ணீட்டன் ” என கெஞ்சலுடன் வெளியே நடந்தாள் தமிழ். தமிழ் கமலியின் மடியில் உயிர் பெற்றவள். அவளை விழிக்க வைத்த பாடல் இப்போது காதோரம் மெல்லிசையாக கேக்கிறது.

“கன்னத்தில் முத்தத்தின் ஈரம் அது காயவில்லையே,கண்களில் ஏன் இந்த கண்ணீர் அது யாராலே…” அவளை மறந்து ஆழ்ந்த சிந்தனைக்கடலினுள் மூழ்கினாள் கமலி. பரீட்சை பற்றிய கலந்துரையாடல் அவளைச் சுற்றி நடந்து கொண்டிருக்க அவள் மட்டும் ஏதோ ஒரு எதிர்ப்பார்ப்புடன் வீதியை வெறித்துப்பார்த்துக் கொண்டு இருந்தாள். கமலி ஏற வேண்டிய பஸ் அவள் முன்னாள் வந்து நின்றது. "இண்டைக்கும் சந்திப்பிலை" என்று முணு முணுத்தபடி அவள் கையைப்பிடித்து நடந்த தோழி அனுவுடன் பஸ்சில் ஏறினாள். சலிப்புடன் ஏறியவள் முன் சீட்டில் அமர்ந்து இருந்து கை காட்டிய மதிவரனை பார்த்து புன்முறுத்தாள். பஸ்சில் பழக்கமான வேறு முகங்கள் ஏதும் இருக்கிறதா என்று கண்களால் நோட்டமிட்டு உறுதிப்படுத்திக்கொண்டாள்.

அவனருகில் சென்று அமர்ந்து, அவன் தோளில் மெல்ல சாய்ந்தாள். அவளை அறியாமல் கண்களில் குற்றாலம் உருவெடுத்தது. மெல்ல அவளின் மனம் பஸ்சில் ஒலிக்கப்பட்ட பாடலின் வரிகளினுள் புதைந்தது.

“மன்னவனே உன் விழியால் பெண் விழியை மூடு,ஆதரவாய் சாய்ந்து விட்டாள் ஆரிராரோ பாடு,ஆரிரரோ, இவர் யார் எவரோ பதில் சொல்வார் யாரோ…..”

மதிவரனின் வீட்டார் ஊருக்குள்ளேயே ஜாதி கூடிய குடும்பம். கமலி வீட்டார் சராசரி குடும்பம் இதை விட வேறு தகவல்கள் வேண்டுமா அவர்களின் காதல் எவ்வளவு வலிகளைத் தாங்கியது என அறிய. இருவரின் வீட்டையும் இணைப்பது ஒரு கோவில் மட்டுமே. கோவிலின் வலது புறம் மதிவரனின் வீடு மறு புறம் கமலியின் குடிசை. மதிவரனின் அப்பா பூசாரி அவரின் பூசையில் ஓரமாக நின்று வழிபடும் கமலியின் அப்பா கூலித்தொழிலாளி. மதிவரன் சிறு வயதில் இருந்தே பல கஷ்டங்களுக்கு முகம் கொடுத்தவன். குடும்பத்தின் மூத்த மகன் என்பதால் சிறு வயதிலேயே குடும்ப கஷ்டங்களை சுமக்கத் தொடங்கியவன். அவன் வீட்டார் அவனை காசு கொடுக்கும் இயந்திரமாகப் பார்த்தனர். எல்லா வசதியும் இருந்தும் அரவணைப்பு இல்லாமல் ஏங்கி அழுத நாட்கள் உண்டு.

பதினைந்து வயதில் வாழப் பிடிக்காமல் தண்டவாளத்தில் கடைசி நொடிக்காக காத்து இருந்து இருக்கிறான். அந்த காலத்தில் இருந்தே அவன் கரங்களை பிடித்து ஆறுதல் அளித்தது கமலி தான். பின் நாட்களில் அவன் வாழ்வதற்கு கமலி அர்த்தமானாள். அன்று அவள் நீண்ட நாட்களின் பின் மதிவரனைப் பார்த்தாள். அந்த சந்தோசத்தில் கடைசி சீட்டில் இருந்த அவளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தப்பாவின் நண்பரைக் கவனிக்கவில்லை. அவர்களின் ஊர் நிறுத்தம் வந்தது. கமலியை மட்டும் முன்னால் செல்ல விட்டு அங்கேயே அமர்ந்து கொண்டான் மதிவரன்.

கமலி மெதுவாக வீடு செல்ல முதல் அவரவர் வீட்டில் உலைக்கொதிக்கத் தொடங்கியது. மதிவரனின் தாயார் நாகம்மா கமலியின் வருகைக்காக சந்தியில் நின்றிருந்தாள். கமலியைக் கண்டதும் அவளின் கூந்தலைப்பிடித்து இழுத்துச் சென்றாள். செல்லும் வழி எங்கும் வார்த்தையால் அவளை சாகடித்தாள். இவை ஏதும் அறியாமல் தனது தோளில் உணர்ந்த கமலியின் அரவணைப்பை அணைத்துக் கொண்டு அங்கேயே அமர்ந்து இருந்தான் மதிவரன். தன் மகளை அலங்கோலமாக நடத்திக்கூட்டி வருவதைப்பார்த்த கமலியின் தாய் தலையில் அடித்துக்கொண்டு ஓடி வந்தாள். நாகம்மாவின் கைப்பிடியில் போராடிக்கொண்டு இருந்த மகளை விடுவிக்க அவளின் காலடியில் விழுந்து கதறினாள். கமலி அவளை நினைத்து அவளே கூனிக்குறுகி நின்றாள். இதனையும் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்த அனு மதிவரனிடம் ஓடினாள். மதிவரன் வர முதல் அழுகைகள் ஓய்ந்து இருந்தன.

நேராக கோவிலுக்குச் சென்றவன் பூஜைக்காக ஏற்றி வைத்து இருந்த சுடர் அருகே சென்று நெஞ்சில் எறிந்து கொண்டிருந்த தீயை வெளிக்காட்டினான். "கல்யாணம் எண்டு ஒண்டு நடந்தா அது கமலியோட தான். நீங்க ஒத்துக்கல எண்டா நான் அவளை கூட்டிட்டு எங்கயும் போரன்". ஒரு புறம் ஜாதிப் பிரச்சினைகள் இருந்தாலும் மறு புறம் மதிவரனின் காசில் தான் அந்த குடும்பம் சொகுசாய் இருந்தது.

கல்யாணம் நடந்த முதல் நாளில் இருந்தே அழுகையை பரிசாகப் பெறத் தொடங்கினாள் கமலி. சமையல் செய்யும் போது தெரிந்தே சூடு போட்டாள் நாகம்மா. அவளிடம் இருந்த கொஞ்ச நகைகளையும் வாங்கி நாகம்மாவின் மகளுக்கு அலங்கரித்தாள். கமலியை பார்க்க அவளது தம்பி வந்தாலுமே அவன் செல்லும் போது அவனின் பைகள் சோதிக்கப்பட்டு அகதி போல அனுப்பி வைக்கப்பட்டது. அவளை வீட்டு வேலைக்காரியை விட கேவலமாக நடத்தினர்.

அனைவரும் சாப்பிட்ட மீதியைப் பிணைந்து கொடுத்து சாப்பிட வைத்து இருக்கிறாள் நாகம்மா. எதையும் எதிர்த்துப் போராடாமல் அழுது தனக்குள் புலம்பிக்கொண்டாள். இவை ஏதும் தெரியாமல் வெளி ஊரில் வேலை செய்த மதிவரன் வாரம் ஒரு முறை வரும் போது மட்டும் அவளை ஒழுங்காக நடத்தினர். கமலியின் மன வலியும் உடல் வலியும் சேர்ந்து அவளை நோயாளி ஆக்கியது. சில நாட்களில் மிகவும் மோசமான நிலைக்குத்தள்ளப்பட்டாள்.

வார இறுதி வீடு வந்த மதிவரனின் கண்களில் நிலை குலைந்து போய் இருந்த கமலியை கைகளில் சிறுபிள்ளை போல சுமந்து ஆஸ்பத்திரிக்கு ஓடினான். உடல் வலியில் இருந்து வெளி வந்தக் கமலிக்கு மன வலியில் இருந்து மீள முடியவில்லை. மதிவரன் அவளை வாடகை வீட்டுக்கு அழைத்து சென்றான். மன வலியைப் போக்க வந்த மருந்தாய் தமிழ் கமலியின் வயிற்றில் கருவானாள். வாடகைக்காணியில் விவசாயம் செய்ய ஆரம்பித்தனர். நிறை மாத கர்ப்பிணியாக அவனுக்கு உதவினாள். பிரசவத்திலேனும் அவளை வருத்தத்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பவில்லை போலும். சுகப்பிரசவமாய் பெற்றெடுத்தாள். காலம் மீண்டும் அவளை சோதிக்கத்தொடங்கியது.

தமிழ் ஈழப்போர் காலம் ஆரம்பமானது .

வியாபாரம் சம்பந்தமாக தூர இடம் சென்று வர முடியாமல் தவித்தான் மதிவரன். வீட்டில் கைக்குழந்தையோடு ஒவ்வொரு நொடியும் ரணகளமாய் கடந்தாள். திடீரென கதவை திறந்து கொண்டு ஒரு உருவம் வந்து நின்றது. கைகளில் துப்பாக்கி. "எழும்பி பின்னால பார்க்காம ஓடு" கத்தியது அந்த உருவம். தமிழை கையில் ஏந்தி மதிவரனை மனதில் சுமந்து குலசாமியை வாயில் முணு முணுத்துக்கொண்டு ஓடினாள். பிரசவம் நடந்து நான்கு நாட்கள் மட்டுமேயான நிலையில் அவள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் மரண வேதனையை குடுத்தது.

அவளுடைய மடியை உதிரம் நனைத்தது. அந்த தருணம் அவள் மனதில் நினைவு வரும் போதெல்லாம் அவள் கண்களை கண்ணீர் நனைத்தது. அந்த உருவத்தின் உள்ளும் சிறு துளி மனிதம் உண்டு போல அது அவளை ஒண்டும் செய்யவில்லை. நாட்கள் மாதங்களாகின மாதங்கள் வருடங்கள் ஆகின. மதிவரன் உயிருடன் இருக்கானா இல்லையா எனத் தெரியாமல் நடை பிணமாய் வாழ்க்கையை நடத்தினாள்.

அந்த நேரங்களில் யாரும் அவன் இறந்து இருப்பான் எனச் சொன்னால் அவளின் தாலி கயிறு தூக்குக்கயிறாக கழுத்தை இறுக்கியது. இரண்டு வருடங்கள் கழித்து முகாமில் ஓர் நாள் தமிழை தோளில் சுமந்து கொண்டு முகத்தை தாடி மறைக்க கறை படிந்த ஆடையில் சோர்ந்து போன நிலையில் ஒருவன் கமலி முன் வந்து நின்றான். அவனது தோள்களைப்பார்த்து என்னவன் வந்து விட்டான் என ஓடிச்சென்றாள். வார்த்தை ஏதும் வரவில்லை. அவனது மார்பில் முகம் பதித்து அழுதாள்.

"மன்னிச்சிடுமா ரொம்ப நாள் காக்க வைச்சிட்டென் இனி உன்ன விட்டு போறது என் கடைசி நாள் தான் எத்தனையோ முகாம் அலஞ்சன் ".

"உன்னை கண்டு தென்றலும் நின்று போனதுண்டு,
உன்னை காண வெண்ணிலா வந்து போவதுண்டு,
ஏன் தேவி இன்று நீ என்னை கொல்கிறாய்,
முள் மீது ஏனடி தூங்க சொல்கிறாய்... "

மீண்டும் நிகழ்காலத்தில் திடுக்கிட்டாள் கமலி. அவளது கண்கள் அவளைக் கண்ணீரால் நிரம்பி இருந்தது. தமிழ் கவனிக்க முதல் முந்தானையால் கண்ணீரை மறைத்துக்கொண்டாள். "அம்மா ரேடியோ சார்ஜர் எங்கம்மா "என ரேடியோவுடன் அறைக்குள் நுழைந்தாள் தமிழ். நாளை மதிவரனின் பதின்மூன்றாம் ஆண்டு நினைவு நாள். அதற்கு அனாதை இல்லத்திற்கு உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க ஏற்பாடு செய்து இருக்கிறது .அந்த வேலைகளை மனக்குமுறல்களை அமைதிப்படுத்தி பாடல் கேட்டு கொண்டு செய்கிறாள் தமிழ். யுத்த காலத்தில் இரண்டு வருடங்கள் வாங்கிய அடியில் உள் உறுப்புகள் எல்லாம் பாதிக்கப்பட்டு இருந்தன. அதன் பின் ஐந்து வருடங்கள் மட்டுமே அவனால் அவனது உயிரை உடலுக்குள் புதைத்து வைத்துக் கொள்ள முடிந்தது.

இறுதி நாட்களில் கமலியின் கரங்களில் மழலை ஆனான். அதன் பின் அவன் நிரந்தரமாக விடை பெற்றுக் கொண்டான். முன்பு போல இப்போதெல்லாம் அவளின் கண்கள் அடிக்கடி நனைவதில்லை சோகங்கள் பழகி போனது. சந்தோசத்தில் முடியாத சில கதைகளில் இவளின் கதையும் வரிசையில். அவளுக்காக இன்னும் வாழத் தொடங்கவில்லை. தமிழின் சம்பளத்தில் குறைவு இல்லாமல் வாழ்ந்தாலும் ஏதோ ஒரு நெருடல் அவளின் மனதில். மதிவரனின் தோள்களுக்காக இன்னும் ஏங்கிக்கொண்டு இருக்கிறாள்.

**தர்சிகா தமிழ்ச்செல்வன்**
**இணைந்த சுகாதார மருத்துவ பீடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயத்தக்க நாகரிகமும் மனித விழுமியங்களும்.

அகத்தணு சூழலின் எல்லைகளை சுவைத்துக் கொண்டிக்கும் இந்த நவநாகரீக காலத்தில் மனிதாபிமான செயல்களும் அணு அளவை நோக்கியுமே சென்றுகொண்டிக்கின்றது. மனித வரலாறு தொடங்கிய காலகட்டங்களில் நாகரிகம் குறைந்த மனிதர்கள் இருந்திருக்கலாம், ஆனால் மனிதப் பண்பாடுகள் நிறையப் பெற்றிருந்தனர். நாகரிகம் என்று குறிப்பிடப்படுவது மனித குலம் அடைந்த உலகியல் சார்ந்த வாழ்க்கை வசதிகள், வாழ்க்கை முன்னேற்றங்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிலைமைகளையே ஆகும். அன்னதய மனிதர் மிகக்குறைந்தளவு வாழ்க்கை வசதிகளையே கொண்டிந்தனர். உணவு, உடை, இருப்பிடம், போக்குவரத்து, சுகாதாரம், தொழில்கள் என்பவற்றில் இன்று போல் அபிவிருத்தி பெற்றிருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் பரந்த மனப்பான்மையைப் பெற்றிருந்தனர். மனிதாபிமானம், மனிததர்மம், வாழ்க்கை அறங்கள் என்பவற்றில் பெரிதும் முன்னேற்றம் கண்டிருந்தனர். சுருங்கக்கூறினால், அன்றைய மனிதர்கள் மனிதப் பண்பாட்டில் உயர்ந்து விளங்கினர்.

பண்பாடு என்பது அகம் சார்ந்தது. மனிதனிடம் உள்ளார்ந்து காணப்படுகின்ற உணர்வுகள், எண்ணங்கள் பண்படுத்தப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டு வெளிப்பாடாகும் போது பண்பாடு தோன்றுகின்றது. மனித உள்ளங்களில் ஊற்றெடுத்து வெளிப்படுவதால் மனிதப் பண்பாடு எனப்படுகிறது. பண்பாடு வெளிப்படுத்தல் என்றால் ஒழுக்கத்தின் மூலமே அதனைக் காண முடிகிறது. பேச்சிலும், செயலிலும் பண்பாடு துலங்கும் போது தான், அதனை மதிப்பீடு செய்ய முடியும். நல்ல பண்பாடு உடையவர்கள், பண்பாடு இல்லாதவர்கள் என மக்களை பாகுபாடு செய்து மதிப்பிடும் அளவு கோலாக உள்ளது ஒழுக்கம் ஆகும்.வெறுமனே நாகரீக முன்னேற்றம் மாத்திரமே சமூகத்தில் ஏற்பட்டு விட்டால், மனித வளர்ச்சி உயர்ந்து விட்டது என்று கொள்ள முடியாது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பெரு விருத்தியால் நாகரிகம் வளர்கிறது. இத்தகைய புற வளர்ச்சியின் பயனாக, மனிதர்கள் தாம் வாழுகின்ற பௌதிக சூழலைத் தமது விருப்பத்திற்கு இசைந்து கொடுக்கச் செய்கின்றனர். நாகரிக முன்னேற்றம் மனித இயற்கையை எந்த அளவிற்கு வெல்லும் சக்தியைப் பெற்று விட்டான் என்பதை காட்டுவதாக உள்ளது.

மனிதன் இயற்கையை வெல்லும் ஆற்றலை அடைந்து விட்டால் மட்டும் போதாது. வாழ்க்கை வசதிகளை அபரீதமாகப் பெற்று விட்டால் மட்டும் போதாது. விண்ணிலும் மண்ணிலும் விரைவாகப் போக்குவரத்துச் செய்து, 'உலகம் இன்று சுருங்கி விட்டது' என்கிறார்கள். உண்மையில் பூமியின் பருமன் அன்றிருந்த அளவிலேயே இன்றும் இருக்கின்றது. ஆயினும் சுருங்கியது உலகம் அல்ல, மனித மனம். விளைவு மனித பண்பாடு சுருங்கியமையேயாகும். மனிதப் பண்பாடு சுருங்க மனித சமூகத்தில் அமைதி, நிம்மதி, சாந்தி, சமாதானம் என்பனவும் குறைந்து கொண்டே போகின்றது. எல்லாச் செல்வங்களும், வாழ்க்கை வசதிகளும், உல்லாசங்களும் முன்னைப்பொழுதையும் விட இன்று மக்களுக்கு மிக அதிகமாகக் கிடக்கின்றன. அதே வேளை மனிதர்கள் நிம்மதியின்றித் தவிக்கும் தவிப்பு, முன்னெப்பொழுதும் காணப்படாத அளவிற்கு இன்று பெருகி விட்டது. மனித நாகரிக வளர்ச்சி பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. அதே சமயம், மனிதப் பண்பாடு பின்னடைவு பெற்றுள்ளது. இதனால் சமநிலை சீர் குலைந்து விட்டது. அதுவே இன்றைய உலகில் நிம்மதியும், அமைதியும் மறைந்து வருவதற்கு காரணம். வன்செயல்களும், அழிவுகளும், குழப்பங்களும், கொந்தழிப்புக்களும் கட்டுக்கடங்காமல் இன்றைய உலகில் பெருகுதவற்கும் அதுவே ஏதுவாக அமைந்துள்ளது.

**'கண்ணோட்டம்'** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் **'பெயத் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்கநாகரிகம் வேண்டுபவர்'** என்கிறார். இங்கு வள்ளுவர் குறிப்பிடும் நாகரிகம், நயத்தக்க நாகரிகம் நாம் தற்கால உலகில் பார்க்கின்ற நாகரிகம், நவ நாகரிகம் நான் இன்று பண்பாடு என்று கொள்வதையும் வள்ளுவரின் நாகரிகம் உள்ளடக்கியமையினால் அது நயத்தக்க நாகரீகம் ஆகியது. கண்ணோட்டம் பற்றிய அதிகாரத்தில் நாகரிகம் பற்றி பேசப்படுவதில் இருந்து, அதன் உண்மையான தார்ப்பரியத்தை விளங்கிக் கொள்ளலாம். பண்பாடு என்ற சொல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டைக் காலத்து உருவாக்கம். அதனால் நம் முன்னோர் பண்பாடு பற்றி அறிந்திருக்கவில்லை என்ற முடிவுக்கு வந்து விடலாகாது.

தற்போது பண்பாடு என்னும் சொல்லால் சுட்டப்படுபவை நம் முன்னோர்களினால் பண்பு, சீலம், ஒழுக்கம், பண்புடைமை, சால்பு, சான்றாண்மை, ஒப்புரவு, கண்ணோட்டம் முதலிய சொற்களினால் குறிப்பிடப்பட்டுள்ளன. வள்ளுவர் நயக்கத்தக்க நாகரிகம் என்று பண்பாட்டினைக் குறிப்பிடுகின்றார். அத்தகைய பண்பாடு உடையவர்களை அக்காலத்தில் சான்றோர்கள், ஒழுக்க சீலர்கள், அறிவார்கள், மாசற்ற காட்சியர் என்றெல்லாம் அழைத்தனர். எனவே நாகரிகம் பண்பாடு என இன்று வேறு வேறாகக் கருதப்படும் அம்சங்கள் அன்று இணைந்த நிலையில் ஒன்றாகக் கொள்ளப்பட்டன. அந்த நிலையிலேயே நாகரிகமானது, நயத்தக்க நாகரிகமாக விளங்கியது.

நாகரிகமும் பண்பாடும் வேறு துறைகளாக்கப்படாமல் அவை இணைய வேண்டும். அவை இணையக் கூடியன, உண்மையில் இணைய வேண்டியுள்ளன. இன்று நாகரிகத்தையும் பண்பாட்டையும் இணைத்துப் பார்க்காமையினால் தான், நாகரீகமுள்ளவர்களிடம் பண்பாடு அந்தலாகவிட்டமையும், பண்பாடு உடையவர்களிடமிரந்து நாகரீகம் விலகி நிற்பதையும் காணக்கூடியதாக உள்ளது. மனித இனம் எதிர்நோக்கும் தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும், மனிதர்களிடம் நாகரிகம் பண்பாடும் ஒன்றோடொன்று இணைந்து இருக்காமையே காரணம் எனலாம்.

நாகரிகத்தினையும், பண்பாட்டையும் பிரித்து நோக்குவதாலேயே, பண்பாடு நல்லது என்றும், நாகரிகம் கூடாது என்றும் கருதுபவர்கள் தோன்றியுள்ளனர். 'இப்போதைய நாகரிகத்தில் தான், நமது பண்பாடு, கலாசாரங்கள் யாவும் அழிந்து செல்கின்றன' என்று பலர் சொல்லக் கேட்கிறோம். நாகரிகத்தின் மீது பெரும் பழி விழுகிறது. உண்மையில் நாகரிகம் என்பதன் எண்ணக்கருவைச் சரியாகப்புரிந்து கொள்ளாதவர்களினால் தான் நாகரிகத்திற்கு இந்த அவப் பெயர் வந்தது.

நாகரிகம் சுட்டுவது மனித இனத்தின் அறிவு, ஆற்றல், திறன்கள், ஆகியவற்றின் விருத்தியையும், அவற்றின் துணையால் ஏற்பட்ட பல துறை விருத்தியையுமே ஆகும். அபிவிருத்தியென்பது ஆக்க பூர்வமாக அமைவது, அழிவிற்கு உடந்தையாக இருப்பது அல்ல. துரதிஷ்டவசமாக, தற்காலத்தில் நாகரிகத்தை உருவாக்கும் அறிவு, ஆற்றல், திறன்கள் முதலியன பெரும்பாலும் அழிவிற்கே இட்டுச் செல்கின்றன. அதனால் நாகரிகம் என்றதுமே மக்கள் மனதில் எதிர்மறையான எண்ணமே தோன்றிவிடுகின்றன. உண்மையில் மனித அறிவும், செயலாற்றலும் இணைந்து மக்களின் உயர்வுக்கும் மேம்பாட்டிற்குமாக உருவாக்கப்படுவது தான் நாகரீகம். மனிதனிடம் அறிவுப் புலம், செயல் புலம், மனப்பாங்கும் புலம் என்ற மூன்று புலங்கள் உள்ளன. மனிதனின் நாகரீக வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்டவை, அறிவுப்புலமும் செயல்திறன் புலமும் ஆகும். மனப்பாங்கும் புலத்தில் விளைவன, பண்புகள், உணர்வுகள், விழுமியங்கள், சீலங்கள், ஒழுக்கங்கள், முதலியன, இவை யாவற்றினதும் ஒட்டு மொத்தமான அறுவடைதான் பண்பாடு எனலாம்.

அறிவு, செயல்திறன், மனப்பாங்கு என்னும் மூன்று பலங்களும் வசதிக்காகப் பிரித்து பார்க்கின்ற போதிலும், அவை வேறு வேறானவை அல்ல. அவை ஒன்றோடொன்று இணைந்தவை, தொடர்புள்ளவை, ஒன்றில் மற்றையது சார்ந்திருப்பது நாகரிகம், பண்பாடு என்று பிரித்துப் பார்த்தாலும் மேற்கூறிய வகையில் நோக்கும் போது அவையும் ஒன்றோடொன்று இணைந்து நிற்பவை ஒன்றில்லாமல் மற்றையதால் பயனில்லை, என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாகரிகத்தை மட்டும் வளர்த்துக் கொண்டு பண்பாட்டை உதாசீனம் செய்ததால் இன்றைய நிலை அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் ஒங்கிணைந்த வளர்ச்சி இல்லாமல் உள்ளது. எனவே மனித சமுதாயக் குறைபாடுகளினை கொண்டு விளங்க ஏதுவாகின்றது. நடை, உடை, பாவனை பற்றி ஒரு காலத்தில் ஒரே மாதிரியான எண்ணமே நிலவியது. தற்காலத்தில் நாகரீக நடை, உடை, பாவனையென்றும் பண்பாட்டு நடை, உடை, பாவனையென்றும் பிரித்து நோக்க வேண்டியுள்ளது. எனவே தான் நாகரீக நடை, உடை பாவனைகள் பண்பாட்டு நடை, உடை, பாவனையாளருக்குப் பிடிப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம் மட்டும் வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தால், சமுதாயத்தில் குறை வளர்ச்சியே ஏற்படும். மனிதத் தன்மை இல்லாத மக்களைக் கொண்ட சமுதாயத்தையே காண நேரிடும். எனவே பண்பாட்டையும் அணைத்துக் கொண்டு நாகரீகம் வளர்ச்சி பெறுமேயானால் அதாவது நாகரீகம், பண்பாடு ஆகிய இரண்டினதும் ஒருங்கிணைந்து சமநிலை வளர்ச்சி ஏற்படுமேயானால் உலகம் சகல துறைகளிலும் சுபீட்சம் பெறும். எல்லோரும் அமைதி, நிம்மதி, மகிழ்ச்சி, சமாதானம் பெறுவர் என்பதும் உறுதியாகிவிடும்.

-முசாலி ரவி

மருத்துவ பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை ஒரு இயற்கையின் கொடை

கடவுள் எல்லையற்ற பொருள், ஆற்றலுடைய பொருள் ஆனால் உருவமற்றது. விஞ்ஞான அடிப்படையில் கூட ஏராளமான ஆற்றல் மிக்க பொருள்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பொருள் உருவமற்றவையாகவே இருக்கின்றன, என்பதை உலகத்தின் மிகப்பெரும் ஆற்றலாக விளங்கும் மின்சாரத்திற்கே உருவமில்லையென்பதை நினைவிற் கொள்ள வேண்டும். கட்புலனுக்கு வராத பொருள்களின் உண்மையை அவற்றின் செயற்பாட்டின் மூலமும், பயன்பாட்டின் மூலமும் அறிய முடியும். அது போல இயற்கையில் எல்லாம் விஞ்சிய இயற்கையாக விளங்குவது வான்மழை. கடவுளைப் பற்றிப் பேசிய திருவள்ளுவர் அடுத்து உலக இயக்கத்துக்கும் நுகர் பொருள் படைப்புக்கும் கருவியாக இலங்கும் வான் மழையைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

ஊசித்தூறல், (தூத்தல்), சாரல் மழை ஊதல் காற்றோடு கலந்து பெய்யும் நுண்ணிய மழை, பூந்தூறல், பொசும்பல், ஏறி தூறல், போடி தூறல், ரவை தூறல், ஏறசல், பரவல், பருட்டு மழை, அரண்ட பருவ மழை, மழை, துணை மழை, பேய் மழை, நச்சு மழை, வதி மழை, கல் மழை (ஆலங்கட்டி மழை), காத்து மழை, சேலை மழை, கோடை மழை, கால மழை, தக்காலம், பாட்டம் மழை, நீருந்து மழை, வெக்கை மழை, அடை மழை, மாசி மழை, தை மழை, சுழி மழை, பட்டத்து மழை, எல்லைக்கட்டி பெய்யும் மழை, குளிக்கும் மழை,பனி மழை, வெள்ளை மழை, பரு மழை (கன மழை), பருவ மழை, பத மழை, அப்பு மழை மழையில் இத்தனை வகைகளா? தமிழில் எத்துணை எத்துணை வார்த்தைகள்.

மழை பயிர்க்குலம் தழைக்கவும், அதனால் மனித குலம் தழைக்கவும் உதவும் உன்னத அமிழ்தம் ஆகும். அமுதம் என்பது உயிர் வளர்க்கக் கூடிய ஒன்று. மழையும் உயிர்களை காக்கும் ஒன்று. அதனால் தான் மழையை அமிழ்தம் எனத் திருவள்ளுவர் குறிப்பிட்டார். **"வானின் றுலகம் வழங்கி வருவதால்தானமிழ்தம் என்றுணரர் பாற்று"** என்கிறது திருக்குறள். மழையை, அமிழ்தம் என்று அவர் சொல்ல இன்னொரு காரணமும் உண்டு. உண்பதற்கு ஆன உணவுப் பொருட்கள் விளைய, மழை காரணமாகிறது.

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர், நகரைச் சுற்றி அமைத்த குளங்களும், ஏரிகளும், தெப்பக்குளங்களும், அதற்கு திலகம் வைத்தது போல மதுரையின் கிழக்கே உலகம் போற்றும் மாரியம்மன் தெப்பக்குளத்தை அவர் அமைத்த பாங்கும், வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். அவர் காலத்தில் நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்படும் செவி வழிச் செய்தி உலவுகிறது. தன் தங்கையை புல்வாய்க்கரை அருகிலுள்ள திம்மாபுரம் என்ற சிற்றூரில் திருமணம் முடித்து தந்ததாகவும், மழை இல்லா ஒரு வறண்ட நாளில் பயிர் எல்லாம் தண்ணீருக்காக தவம் கிடந்த நாளில் தன் தங்கையை பார்க்க ஆனை, சேனை பரிவாரத்துடன் வந்ததாகவும், அவர் வருகையை அந்த ஊர் மக்கள் அவரின் தங்கையான திம்மியிடம் கூறிய போது, அவர் கோபத்துடன் தண்ணீர் பஞ்சத்தில் கருகி கிடக்கும் நம் வயல்களுக்கு தண்ணீர் கொண்டா வருகிறார் என்ற ரீதியில், கார் கொண்ட நெல்லுக்கு நீர் கொண்டா வருகிறார், கதிர் கொண்ட நெல்லுக்கு தண்ணீர் கொண்டா வருகிறார் என கேட்டதாகவும், அந்த தகவல் மன்னரின் காதுகளை எட்ட அவர் உடனே மதுரை திரும்பி, கிருதுமால் கால்வாயில் இருந்து ஒரு துணை கால்வாய் வெட்டி கொந்தகை, கட்டமன்கோட்டை, விராதனூர், நெடுங்குளம், முக்குடி, சாரி புதுக்கோட்டை, கொட்டங்குளம், முடிச்சனேந்தல், கீழக்கள்ளங்குளம், திம்மாபுரம் என்ற ஊர்களின் வழியாக நீர்தடங்கள் அமைத்து அந்த ஊர் கண்மாய்க்கு நீர் கொண்டு சேர்த்ததாகவும் 400 ஆண்டுகளாக பேசப்பட்டு வருகிறது.

மழைநீர் சேகரிப்பு என்பது கேலிக்குறியதல்ல. அது அவசியமானது. கிராமங்களில் அந்த கால வீடுகளில் முற்றம் வைத்து கட்டியிருப்பர். கடுமையான மழை பொழிவிலும் முற்றத்தில் விழும் மழை நீர், தேங்காமல் செல்ல தூம்பு வைத்திருப்பர். அதன் வழியாக மழை நீர் நிலத்திற்குள் செல்லும். இப்படி நம் முன்னோர்கள் மழை நீர் சேகரிப்பின் மூலம் மண்ணுக்கும், வீட்டிற்கும் பயன் சேர்த்துள்ளனர். அவர்களின் சந்ததியர்களாகிய நாம் மழை நீரின் அருமையையும், மழைநீர் சேகரிப்பின் நன்மையையும் அறியாமல் இருக்கிறோம்.

விதைத்தது விளையும்.... அது தான் பரிணாமத்தின் சூட்சுமம்....இருந்தும், கனவு நிறைந்து மூச்சும் திணற வைத்து விட்ட மழையை ஒரு கலைதலில் கடந்து விட ஏதாவது செய்... இயற்கையே......

ச.கேஷானந்
பல்மருத்துவ விஞ்ஞன பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையற்ற எதிர்காலத்தை உருவாக்குவோம்..

வளர்ந்து வருகின்ற 21 ஆம் நூற்றாண்டில் எமது சமூகத்திலே பல பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. அந்த வகையில் அப்பிரச்சினைகள் மத்தியில் போதைப்பொருள் பாவனையானது மிகவும் கொடிய தீராத பிரச்சினையாக உள்ளது. இப்போதைப்பொருள் பாவனையால் இச்சமூகமானது பல சவால்களை எதிர்கொண்டு காணப்படுகிறது. போதை என்பது மனதில் இறுக்கம் குறைந்து கிளர்ச்சி அடைந்து சற்று கிறங்கியிருக்கும் நிலையாகும். மனிதனை தன் நிலை மறந்து அவனை கற்பனை உலகில் மிதக்க வைத்து மரணத்துக்கு இட்டுச் செல்வதாகும். போதைப் பொருட்களாக பியர் வகைகள், மது வகைகள், புகையிலை, கஞ்சா, அபின், ஹெரோயின், போதை மாத்திரைகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.இன்றைய உலகிலே இளையோர் முதல் முதியோர் வரை போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி சீரழிவதை காண முடிகிறது. வயதானவர் காலம் முடிந்து இப்பொழுது பெரியவர், சிறியவர், இளைஞர், யுவதி என சாதாரணமாக அனைவரும் பாவனைக்கு அடிமையாகி உள்ளதைக் காணலாம். இவற்றினை எமது சமூகத்தில் இன்றுவரை காணக் கூடியதாக உள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியிலே போதைப் பொருள் பழக்கம் அதிகரித்து வருவது வேதனை தரும் விடயமாகும். போதையால் வகுப்பில் மாணவர்கள் ஆட்டம் போடுவதும், ஆசிரியர்களை அவமதிப்பதும் போன்ற பல பிரச்சினைகளை காணக்கூடியதாக உள்ளது. போதையில் ஈடுபடுவது வெட்கமான விடயமாகும். இவ்வாறான விடயங்களைக் கண்டு எதிர்கால சமூகம் என்ன ஆகுகின்றது என்று நினைக்கும் போது வேதனையாக உள்ளது. பள்ளிகள், பேருந்து நிலையங்கள், வீதிகள், தனியார் கல்வி நிறுவனம் என பொது இடங்களைக் குறி வைத்து போதையானது விற்பனைக்கு உட்படுத்தி இருப்பதைக் காணலாம். பெரும்பாலான போதைப் பொருட்கள் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்படுகின்றன. விமான நிலையங்களிலும் சோதனை சாவடிகளையும் மீறி அவை நாட்டுக்குள் புகுந்து விடுகின்றன.

போதைப் பொருள் பாவனையால் பல உடலியல் ,உளவியல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உடலில் கல்லீரல் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, இரத்த ஓட்டம் தடைபடல், மூட்டு வலி ,நரம்பு பிரச்சினை என பல பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன உளரீதியாக தற்கொலை, ஞாபக மறதி ,மன அழுத்தம் ,களைப்பு என பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதை நாம் காணலாம். வசதி படைத்தவர்கள் அதை உயர்தரச் சந்தையில் இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் ஏனையவர்கள் சந்தையில் மலிவு போதைப் பொருட்களை பெறக்கூடியதாகவும் உள்ளது இவ்வாறு பல சமூக ஊழல்கள் இப்போது ஏற்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. சமூகத்தை சிதைக்கும் போதைப்பொருள் விற்பனையை தடுக்க இலங்கை அரசானது பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைக் காணலாம். அவற்றில் "யுக்திய நடவடிக்கை" முக்கியமானதாகும். போதை இல்லாத நாட்டை உருவாக்க விழிப்புணர்வு பிரச்சாரத்தில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது. எமது நாடு மட்டுமன்றி அயல் நாடான இந்தியாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிது. அரசாங்கமே விற்பனை செய்வதால் போதைப் பொருளாக மது இல்லை என்று ஆகிவிடாது.

அரசே விற்பனை செய்துவிட்டு மற்றவர்களுக்குத் தடை போடுவது போதைப்பொருட்களை முற்றிலும் ஒழிக்கும் செயலாக குறிப்பிடுவதும் பிரச்சினைதான். முதலில் போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்கள் அதனை தயாரிப்பவர்கள் போன்றவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வைக்க வேண்டும். இதன் மூலம் உயிர்களை போதைப்பொருள் பாவனையில் இருந்து காப்பாற்றிக் கொள்ளலாம். இன்று நாடு முழுவதும் போதைத் தடுப்பு சட்டங்கள் பல அமுல்படுத்தப்பட்டு உள்ளன. போதை மறுவாழ்வு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்களுக்கு புது வாழ்வை பெற்றுத்தரலாம். அதேபோல் மாணவர்கள்,இளைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு போதைப்பொருள் குறித்த நிகழ்ச்சிகளை நடத்தலாம். குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமூகத்தினரின் ஆதரவை அதிகரிக்க வேண்டும் . அவ்வாறு செய்வது மிக முக்கியமாகும்.

போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்களைக் கண்டால் அவர்களை சட்டம் முன் கொண்டு நிறுத்தி கடும் நடவடிக்கை எடுக்க வைக்க வேண்டும். போதைப் பொருள் ஒழிப்பு நிகழ்வுகளை பாடசாலைகளிலும், கிராமங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். போதைப் பொருள் பாவனையின் கொடூரத்தினையும் அவற்றால் ஏற்படும் விளைவுகளையும் சமூக வலைத்தளம் மூலம் பரிமாற்ற வேண்டும். போதைக்கு உள்ளானவர்களை பல பெரிய நற்பிரஜைகள் மூலம் அறிவூட்ட வேண்டும்.போதைப்பொருள் பாவனையில் பக்க சார்பின்றி சட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டும். தனிநபர் சிக்கலாக உருவெடுத்து சமூகத்தை சீரழிக்கின்ற இப்போதைப்பொருள் பாவனையை நாம் ஒழிக்க வேண்டும். போதைப்பொருள் அற்ற வாழ்வை நாம் பேணி எமது ஆரோக்கிய வாழ்வைப் பேண வழிவகுக்க வேண்டியது நம் எல்லோரினதும் தலையாய கடமையாகும்.

**"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"**

**ர.பிறேமசாலினி**
**விஞ்ஞான பீடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியும் சடமும்

உலகம் சக்தியும் சடமும் இணைந்ததோர் இரவியின் இரவல் புத்தகம்...

கட்புல ஒளிக்கு கசடற இயைந்த அத்துணை உயிரிகளும் சடத்தின் மீது உள்ள விருப்பங்களின் ஏற்ற இறக்கங்களின் அடிப்படையில் தம் வாழ்வியலை வழக்கப்படுத்திக்கொள்கின்றன. இருந்தும் உலகுடை சடம் யாவும் சக்தியின் பிரதிபலிப்பு என்பது யாரும் மறுக்கவொண்ணா வாய்மை.

சடத்தை நோக்கிய ஒவ்வோர் உயிரிகளின் அசைவுகளும் அவைகள் அறிந்தும் அறியாமலும் சக்தியின் பிரயத்தனத்தால் திசைதிருப்பப்பட்டவண்ணம் உள்ளன.

சக்தியின் சிந்தனையின்றி தனியே சடத்தின்பால் மயங்கித்திளைக்கும் ஒவ்வொரு மனிதனும் வாழ்வின் இறுதியில் சக்தியின் பரிமாணம் அற்றவனாய் (அறியாதவனாய்) அழிந்துபோய் அறியப்படாதவனாயாகின்றான்.

சடத்தினை சக்தியொடு சரியான மாத்திரையில் பயன்படுத்திக்கொள்பவன், வாழ்வியல் விதிகளுக்கு உட்பட்டவனாய் பிறமாந்தர்களின் பார்வையில் பரபரப்பானதொரு வாழ்வியலைக் காட்டி பேசுபொருளாக திகழ்ந்து சடமிழக்கும் தறுவாயில் சக்தியுறைகிறான்.

அடுத்த வகையறா, சடத்தின் மாயவுடை அறிந்து அதனின்றும் படிப்படியே விலகி சக்தியின் பிரயத்தனங்களொடு கூடி, சாதாரண வாழ்வியலுக்கு அப்பாற்பட்டவனாக நோக்கப்படுகிறான்.

சரி பிழை என்று ஏதுமற்றது இவ்வுலகம். சடத்தினுள் சக்தி சமத்துவமாகும் போது சலனமற்றதோர் புலன்கள் உணரப்படுகின்றன. சடத்தினுள்ள சக்தியிழக்கப்படுகையில் சடம் ஏதுமற்றதாகின்றது. (ஓய்வடைகின்றது/அமைதியடைகின்றது) அதேவேளை சக்தி சடத்தினின்றும் மீறி அதிகளவாய் அதிகாரம் செய்யும் தறுவாயில் சடம் அழிந்து போகிறது. சக்தி அழிவற்றது என்ற கோட்பாட்டினடிப்படையில், மனிதன் இழப்புமிகுதியால் பிச்சைக்காரன் எனும் ஒரு பதவிகொள்வதுபோல சக்தியும் வேறுவடிவம் பூண்டு வேறொன்றில் வேலையைத் தொடங்குகிறது.

ஆக இங்கு மனிதனுட்பட எந்தவொரு சடமும் சக்தியின் இயக்கவிதிகளுக்குட்பட்டே வேலையாற்றுகின்றன. நாங்கள் சரியென்றும் பிழையென்றும் வரையறை செய்துகொள்வதெல்லாம் அவனினின்று வெளிப்படும் சக்தியின் தோற்றப்பாடுகள்... ஆனால் நிலைமாறும் சக்திக்காக சடம் வீணே பழிச்சுமைகளை தாங்கியவண்ணம் உள்ளது.

சக்தியின்றி சடமியங்காது என்பது எவ்வளவு உண்மையோ, சடமின்றி சக்தி பிரலிபலிக்காது என்பதும் அவ்வளவுக்கு உண்மை.....

சக்தி தனித்தியங்கும் என்பது உண்மையாயிருப்பினும் அது மனிதனின் வாழ்வியலுக்கு பொருத்தப்பாடுடையதன்று. மனிதம் எனுமொரு கோட்பாட்டுக்கு சக்தி சடத்தை வழிநடத்துவதாக இருக்கவேண்டுமே தவிர, சடத்தை மறக்கச்செய்வதாக இருத்தல்கூடாது... சக்தி மிகுந்தவனாயினும் சக்தி இழந்தவனாயினும் சமூகத்திலிருந்து வேற்றுமைக்கண்களால் பார்க்கப்படுவதற்கு இதுவே காரணம்.

இதையே ஒவ்வொரு மதங்களும் கூட ஏதோவொரு வகையில் மானுட அறிவியற்கு தக்கதாய் போதித்துக்கொண்டிருக்கின்றன.......

(மதங்களின் சக்திப்பிணைப்புக்கள் வாசகர் ஆய்விற்கு .........)

-மதுமிதன்
மருத்துவ பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரநிலங்கள் இயற்கை அன்னை தந்த கொடைகள்

ஈரநிலங்கள் என்பது உலகின் சமநிலையைப் பேணிப் பாதுகாக்கும் புவியின் கட்டமைப்பாகும். இவை இல்லையெனில் உலகம் வெறும் மண்மேடு என்று சொல்லும் அளவிற்கு அவற்றின் முக்கியத்துவம் இப்புவிக்கு அவசியமானதொன்றாகும். இயற்கையின் தாங்குசக்தியென்றும், இயற்கையின் கருவறைகள் என்றும் அழைக்கப்படும் ஈரநிலங்கள் சூழலின் ஈரலிப்பினைப் பேணும் முக்கிய கட்டமைப்பாகும். இத்தகைய முக்கியத்துவம் பெற்ற ஈரநிலங்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டு அதிகளவில் அழிவுக்குள்ளாகி வருகின்றன.

இயற்கையான மலைகள் போதாதென்று இன்று மனிதன் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்ற கழிவுகளால் குப்பைமேடுகள் அமைக்கின்றான். நீரினை மாசடையச் செய்கின்றான். இவற்றின் தாக்கம் ஈரநிலங்களைப் பெரிதும் பாதிக்கின்றது. இவ் அளவு கடந்த செயற்பாட்டினால் மாசடைந்து அழிவுக்குள்ளாவதனால் "அளவோடு எரிந்தால் விளக்கு அளவு கடந்தால் நெருப்பு" என்று கூறும் அளவிற்கு ஈரநிலங்கள் உட்பட சூழலில் அவன் மேற்கொள்ளும் செயற்பாடுகள் அவனுக்கே வினையாகும் நிலைமை உருவாகி வருகின்றன.

எதற்கும் உதவாத சாதாரண நிலங்கள் தானே இந்த ஈரநிலங்கள் என்ற மனிதனின் அலட்சிய விளைவால் சூனியமாகி வருகின்றது. உலகில் அதிக உயிர்ப்பல்வகைமை கொண்ட இவ் ஈரநிலங்கள் இவ்வாறு அழிவுக்குள்ளாவதானது பருவம் தவறிய மழை பெய்வதற்கும், வெள்ளச்சேதம் ஏற்படுவதற்கும், கடல்நீர் தரைப்பகுதியினுள் உட்புகுவதற்கும் காரணம். இவ்வாறு மனிதகுலம் எதிர்நோககும் பிரச்சினைகளுக்குப் பின்னால், நானே காரணமென்பதை ஏற்க மறுக்கின்றான் மனிதன்.

உண்மையைக் கூறவேண்டுமானால் மக்களிற்கு ஈரநிலங்கள் என்றால் என்ன? அவை எங்குள்ளன? எவற்றை ஈரநிலங்கள் என்று அழைக்கின்றோம்? என்ற தெளிவு பலரிடமில்லையென்றே கூறமுடியும். அதாவது "புவியில் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நீரினால் நிறைந்துள்ள அதேநேரம் ஆறடியினை விட ஆழங்குறைந்ததும் உயிர்ப்பல்வகைமை நிறைந்ததுமான நிலங்களே" ஈரநிலங்களென்று கூறமுடியும். உலகளவிலுள்ள ஈரநிலங்களில் ஒன்றான சதுப்பு நிலங்கள் அதன் பெறுமதி உணரப்படாமல் அழிக்கப்பட்டு வருவதனால் அதனைப் பாதுகாக்கும் நோக்கில் "ரம்சார் அமைப்பு" என்ற சர்வதேச அமைப்பு மக்களை விழிப்பூட்டும் வகையில் செயற்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்ல ஆண்டுதோறும் பெப்ரவரி இரண்டாம் திகதி உலக ஈரநில தினமாகக் கொண்டாடி வருகின்றது.

உண்மையிலேயே ஈரநிலங்கள் பெரும் ஆபத்தினை எதிர்நோக்கி வருகின்றன. அதற்கு பெருகிவரும் நகரமயமாக்கம், தொழிற்சாலைகளின் ஆக்கிரமிப்பு, புதிதாக உருவாக்கப்பட்டு வரும் குடியிருப்புக்கள், சுற்றுலாத்தளங்கள், பெரும்தெருத்தொகுதிகளென்பன இதன் அழிவுக்குக் காரணமாக அமைந்து வருகின்றது. அதிலும் குறிப்பாக உலகில் அதிகளவான நகரங்கள் மற்றும் சுற்றுலாத்தளங்கள் கரையோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டு வருவதனால் அதிகளவான கரையோர நிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான அழிவானது உயிர்ச்சங்கிலிகள் உடைந்துபோவதற்கும், நிலத்தடி நீர் மாசடைந்து போவதற்கும், நீர் வடிகட்டற் செயற்பாடு நின்று போவதற்கும் முக்கிய காரணங்களாகும். உயிர்ச்சங்கிலிகளைப் பேணிப்பாதுகாக்கும் அமைப்பே ஈரநிலங்கள். அவற்றின் செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டால் உலகில் என்ன நடக்குமென்பதனை சிந்தித்துப் பாருங்கள். பல்லாயிரம் உயிரினங்களின் வாழ்விடங்களை அழித்து நீர் மேற்கொள்ளும் நிர்மங்களை இயற்கை விட்டு வைக்கின்றதா என்று சிந்தியுங்கள். இன்று உலகில் அதிகரித்து வரும் புவி வெப்பமடைதலும், பாலைவனமாதலும், கடல் மட்ட உயர்வு போன்றவற்றிற்கு அடிப்படை நீர் மேற்கொண்ட தாக்கம் என்றால் தவறில்லை.

ஆரம்பத்தில் மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான் அதனால் இயற்கையும் சந்தோசமாக இருந்தது. மனிதனும் சந்தோசமாக இருந்தான் ஆனால் இன்று பாருங்கள், கண்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரங்களே கரையோரப் பாதுகாப்புப்படை. இவை பல்வேறு தேவைகளுக்காக அழிக்கப்படுவதனாலேயே உலகில் அதிகளவிலான கரையோரங்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. இது இலங்கையிலும் முக்கிய பிரச்சினைகளிலொன்றாக நோக்கப்படுகின்றது. அவற்றிற்கு மாற்றீடாக மீளவும் உருவாக்கும் நடைமுறைகளும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் என்பது அரிது" என்ற ஔவைப்பாட்டியின் பொன் வாக்கிற்கிணங்க மனிதர்களாகப் பிறந்த நாம் நன்மை செய்யாவிடினும் தீமை செய்யாதிருக்க வேண்டும். சூழல் நேயமானவர்களாக, சூழலினைப் பாதுகாப்பவர்களாக, ஈரநிலங்களைப் பேணிப் பாதுகாப்பவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் எம் சந்ததி இப்பூமியில் நிலைத்திருக்க முடியும், சூழலை மீறப்படாத வகையில் நடைபெறும் மனிதனது எந்தவொரு செயலும் வரவேற்கத்தக்கது. எந்தளவிற்கு நாம் ஈரநிலங்களையும் இயற்கையையும் பாதுகாக்கின்றோமோ அந்தளவிற்கு இயற்கை நம்மைப் பாதுகாக்குமென்பதே உண்மை.

**"சூழல் நேயம் பேணி என்றும்**

**சூழற்காப்பாளராய் வாழ்வோம்"**

ஸானுஜா ஆனந்தராஜா
கலைப்பீடம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதையின் தலைவன் காதலன்...

"சூழவும் வயல்வெளி அதன் அருகில் ஓடிக் கொண்டிருக்கும் ஆறு, வீசும் காற்றிற்கு தலையசைத்துக் கொள்ளும் தென்னந்தோப்பு ஒட்டுமொத்தமாக பச்சை தேசமாக பார்ப்போரை கவரும் அழகிய கிராமம். செங்கற்களை எண்ணும் வகையில் பூசப்படாத சுவரும் வீசும் காற்று உள்ளே நுழையும் வகையில் பூட்டப்படாத கதவுகளும், யன்னல்களும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் கடலின் நடுவில் அமைந்திருப்பது போன்று காட்சியளிக்கும் வீடு அது...

அவளுக்கு வயது பதினேழு. அவளது அழகை அலங்கரிக்க அவளிடம் ஆபரணங்களோ, அலங்காரங்களோ இல்லை. இருந்தாலும் அவள் பேரழகி....! அவள் ஒரு வறுமையான குடும்பத்தில் பிறந்த பெண்ணவள். தந்தை ஒரு கூலித்தொழிலாளி, தாய் ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்பவள். அவளது வீட்டின் வறுமை அவள் கண்முன்னே தாண்டவமாடியது. இருந்தாலும் அவர் உயர் தரத்தில் கல்வி பயின்று கொண்டிருந்தாள். தாயை நினைத்து அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வராத நாட்களை காணமுடியவில்லை. அதனை அவளால் வெளியில் கூட சொல்ல முடியவில்லை. நாட்கள் சில கடந்தன தனது சகோதரியின் துணையாளனின் உதவியின் மூலமாக அவளது குடும்பத்தின் வறுமை ஓரளவிற்கு குறைந்தது. தனது தாய் தன் அருகில் இருப்பதனால் ஆறுதலடைந்தாள்.

ஒருநாள் ஒரு நபரை சந்தித்தாள். அவளுக்குத் தெரியவில்லை. அவனே அவளது காதலனாவான் என. அவன் அவளது வாழ்வில் ஒளியூட்ட வந்தவன். சிறிது காலமாக அந்த நபருடன் பழகி வந்தாள். அவன் படிப்பில் கெட்டித்தனமானவன். அன்பிலும், பண்பிலும் சிறந்து விளங்கியவன். அவள் கூட நன்றாகப் படிக்கும் பெண். ஆனால் அவன் அவளை விடவும் ஒரு வயதில் கூடியவன். அவளது குறும்புத்தனங்கள் அவனை மகிழ வைத்தது. அவனை அறியாமலே அவள் மேல் அவனுக்கு காதல் வந்தது. அவள் அவனை நல்ல நண்பனாக ஏற்றுக் கொண்டிருந்தாள்.

அவனுக்கு அவள் மீது இருந்த காதலை அவளிடம் சொல்ல முடியவில்லை காரணம் அவனது காதலை சொல்லி அவளது நட்பை இழந்து விடுவான் என்ற பயம் இருந்தாலும் அவனால் அவனது காதலை மறைத்து மனதில் பூட்டி வைத்துக் கொள்ளவும் முடியவில்லை. மேலும் பல நாட்கள் கடந்தன. அவன் அவளை சந்தித்து ஒரு வருடம் கடந்து சென்றது.அவன் நகர்ப்புற பாடசாலைக்கு கல்வி பயில்வதற்கு சென்றிருந்தான்.அவள் கிராமத்தில் உள்ள பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாள். அவன் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் அவனது காதலை அவளிடம் சொன்னான். அவள் செய்வதறியாது தடுமாறினாள். அவனது காதலை மறுத்தாள். ஏனெனில் அவளது வீட்டின் வறுமை அவளை காதலிக்க சொல்லவில்லை நன்றாகப் படித்து அவளது பெற்றோரை கவனித்துக் கொள் என்றது. இருந்தபோதிலும் அவன் மீது அவளுக்கு ஏதோ ஒரு வகையில் அன்பு இருந்தது. அவள் அவனிடம் கூறினாள் தற்போது காதலிக்கும் தருணத்தில் தான் இல்லை என்று. அவன் அவளது வார்த்தையை ஏற்றுக் கொண்டான். இருந்தாலும் அவளை இழப்பதற்கு அவனுக்கு விருப்பமில்லை மீண்டும் ஒரு வார்த்தை கூறினான். "உனக்காக எப்போதும் காத்திருப்பேன் உனக்கு என் மீது காதல் வரும் வரை" அவள் அவனது கருத்தை ஏற்றுக் கொண்டாள்.

காலமும் கடந்தது அவனோடு பயணத்தை தொடர அவள் ஆசைப்பட்டாள். அவளுக்கும் அவன் மீது காதல் வந்தது ஆனால் சொல்லவில்லை. தனது தாயிடம் சென்று தனது காதலைப் பற்றிக் கூறினாள். தாய் பதிலளிக்கவில்லை "முதலில் நன்றாக படி" எனும் கூற்று அவளின் காதில் ஒலித்தது. மௌனமாக அவ்விடத்திலிருந்து திரும்பிச் சென்றாள். அவளது காதல் அவனுக்குத் தெரிய வந்தது. அவனும் சொல்ல முடியாத அளவிற்கு ஆனந்தம் அடைந்தான். அவனது பரீட்சைக்கான நாட்களும் நெருங்கின அவர்கள் இருவருக்குமான தொடர்பு குறைவடைந்தது. பரீட்சை காலங்கள் முடிவடைந்ததும் அவளோடு பேசினான். அவன் நன்றாக பரீட்சை எழுதியதாக அவளிடம் கூறினான். இது அவளுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது ஏனெனில் அவன் மீது அவள் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தாள்.

சிறிது காலம் அவர்களது காதல் கடிதத்தின் மூலம் வளர்ந்தது. எப்போதும் அவளை படிப்பதில் அக்கறை செலுத்துமாறு கூறுவான். அவளும் அதன்படி செயற்படுவாள். அவளுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையும் நெருங்கியது. அவர்களது காதல் இடை நிறுத்தப்பட்டது. சிறிது காலம் பேசிக் கொள்ளவில்லை. காதலன் அவளை நினைத்து வாடினான். அவளும் சில தருணங்களில் கண்ணீர் சிந்துவாள். காதலனை அடைய வேண்டுமெனின் நன்றாகப் படித்து நல்ல சித்திகளைப் பெறவேண்டும் என முழு முயற்சியாக படித்தாள். அவளுக்குத் தேவையான புத்தகங்களை காதலன் வாங்கி கொடுத்தான். அவளை மேலும் நன்றாகப் படிக்கச் சொன்னான். அவளும் நன்றாகப் படித்தாள். காலங்கள் செல்ல பேசுவதை குறைத்துக் கொண்டனர். காதலன் அவளை நினைத்து கவிதை வரிகளை எழுத ஆரம்பித்தான்.

அவனது முதற்கவிதை, "கவிதையே உன்னை நயந்து பார்ப்பதற்கு பலர் இருந்தாலும் நீயே நயந்து பார்க்கும் அளவிற்கு ஒருத்தி இருக்கின்றாள் அவளே என் காதலி" என்றமைந்தது. காலம் இவ்வாறே மெல்ல மெல்ல கடந்து சென்றது. ஆனால் அவளுக்கு அவனது பேச்சைக் கேட்கும் போது ஏதோ ஒரு சந்தோஷத்தை உணர்ந்தான். காதலனது பரீட்சைப் பெறுபேறுகளும் வெளியாகியது. அவன் பரீட்சையில் சித்தி பெற்று பட்டப்படிப்பிற்கு தகுதி பெற்றான். இதனை அறிந்த அவளுக்கு அளப்பெரிய மகிழ்ச்சி. காலம் சென்றது. அவளது பரீட்சைக்கான நாட்களும் நெருங்கியது. அவனது குரலை கேட்ட பின்னர் நகரும் அன்றைய தினத்தை அவளது அதிஷ்ட தினம் என நம்பினாள். அவனது குரலை கேட்டாலே அவ்வளவு மகிழ்ச்சி அடைவாள். பரீட்சைக்கு செல்லும் முன் அவனது குரலை தொலைபேசி அழைப்பின் மூலம் கேட்டுச் செல்ல வேண்டும் என்றாள். அவனும் அழைப்பை மேற்கொண்டு பரீட்சையை சிறப்பாக எழுத வேண்டும் என வாழ்த்துவான்.

அவள் பரீட்சை முடிவடைந்து வெளியில் வந்தாள். பாடசாலை வாயிலில் காதலனைக் கண்டாள். அவளது கண்களில் நீரும் நிரம்பியது. வாயில் வார்த்தை இல்லை. அவனைக் கண்டதும் சிரித்துக் கொண்டே அவன் அருகில் சென்றாள். பரீட்சையைப் பற்றி வினாவினான். அவளும் சிறப்பாக அமைந்ததாக கூறினாள். இவ்வாறு பரீட்சை நாட்களில் தினந்தோறும் பாடசாலை வாயிலில் நின்று அவளது பதிலை ஆவலுடன் எதிர்ப்பார்ப்பான். அவளுடைய பரீட்சைகளும் இனிதே முடிவடைந்தது. அவளுக்குள் ஒரு நம்பிக்கை இருந்தது பரீட்சையில் சித்தி அடைந்து விடுவாள் என. இவ்வாறு மூன்று வருடங்கள் நகர்ந்தன. அவளது பரீட்சை பெறுபேறு வெளியானது. அவளது கண்களில் இருந்து ஓடிய கண்ணீர் நதிகளில் இருந்து நீர் பாய்வது போன்று காட்சியளித்தது. அதி விசேட சித்திகளைப் பெற்று பரீட்சையில் சித்தி அடைந்தாள். அனைவரையும் வியக்க வைக்கும் வகையில் அமைந்தது அவளது பரீட்சை பெறுபேறு. வீட்டில் தனது தாயின் ஆனந்த கண்ணீரைக் கண்டாள். தனது காதலனுக்கு அழைப்பை மேற்கொண்டாள். தனது பெறுபேறு பற்றிக் கூறினாள். காதலன் அளவு கடந்த ஆனந்தத்தை உணர்ந்தான். அவளையும் அவளது குடும்பத்தையும் கண்டு கொள்ளாத உறவுகள் கூட அவளைத் தேடி வந்தன. பாடசாலையிலும், கிராமத்திலும் அவளுக்கு அதிக பாராட்டுக்கள் கிடைத்தன. அவள் மேலும் பட்டப்படிப்புக்கு தயாராகிவிட்டாள்.

காதலன் எப்போதும் அவர்களுக்கு துணையாகவே இருப்பான். அவளது இன்ப துன்பங்களை பங்கெடுத்து அவளுக்கு ஆறுதல் வார்த்தைகளை அடிக்கடி கூறுவான். அவர்கள் இருவரும் வெவ்வேறு பல்கலைக்கழகங்களில் தமது பட்டப் படிப்பினைத் தொடர்ந்தனர். மீண்டும் அவளது காதலைப் பற்றி தனது பெற்றோரிடம் பேசினாள். பெற்றோரும் ஒத்துக் கொண்டனர். அச்சமயத்தில் வீட்டின் வறுமையும் குறைந்தவராக நீங்கப் பெற்றது. காதலன் அவளைச் சந்திப்பதற்கு மாதத்தில் ஒருமுறை அவளது விடுதிக்குச் சென்று வெளியில் அழைத்துச் சென்றான். இவ்வாறு ஐந்து வருடங்கள் அவர்களது காதல் பயணித்தது. மேலும் அவர்களது வாழ்வை சுவாரசியமாக மாற்றுவதற்கு காத்துக் கொண்டிருந்தாள்.

"காலங்கள் கடக்கட்டும் என ஆசை கொண்டிருந்தாள் ஏனெனில் அவளது காதலனோடு காலங்களை கடத்துவதற்கு..." அவள் இழந்த சந்தோஷங்கள் அனைத்தையும் காதலனூடாகப் பெற்று வாழ்க்கையை அழகாக மாற்றிக் கொண்டாள்.

**ஞானசுந்தரம் கௌசிகா**
**கலைப்பீடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான விளம்பல்

மனிதனிற்குள்ள உரிமைகளில் ஒன்றாக தகவல் அறியும் உரிமையுள்ளது. இது உலகளாவிய ரீதியில் 18ஆம் நூற்றாண்டில் இருந்தே பேசுபொருளாக கொள்ளப்பட்டு இன்று உலகிலுள்ள 110 ற்கு மேற்பட்ட நாடுகளில் இச்சட்டம் நடைமுறையில் உள்ளதாக சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான நிலையம் குறிப்படுகிறது. அவ்வகையில் தகவலறியும் சட்டமென்பது "பொதுமக்கள் அரசாங்கம் மற்றும் அது சார்ந்த நிறுவனங்கள் மீதான தகவல்களை பெற்றுக்கொள்ள உரிமையுண்டு என்பதை விளக்கும் சட்டமாகும்".

தகவலறியும் உரிமை சட்டம் தொடர்பிலான வரலாறுகளை நோக்குகையில் மன்னராட்சி காலப்பகுதியில் மன்னர்கள் தங்களது ஆட்சிமுறைகள். சட்டதிட்டம் என்பவற்றை தமது கல்வெட்டுக்களில் பொறித்து அதனை மக்கள் முன்னிலையில் காட்சிப்படுத்தினர். இது தகவலறியும் உரிமை ஆரம்பகாலத்தில் இருந்தே பின்பற்றப்பட்டு வருவதனை எடுத்துக்காட்டுகின்றது. பிற்பாடு 18ஆம் நூற்றாண்டுகளிலே தகவலறியும் உரிமை சட்டத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டு பின்னர் ஒவ்வொரு நாடுகளிலும் இச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அவ்வகையில் சுவீடனே முதன் முதலில் இச் சட்டத்தினை 1766 இல் கொண்டுவந்தது. இதன் பின்னர் கி.பி 1951 இல் பின்லாந்தும் இச் சட்டத்தினை நடைமுறைக்கு கொண்டுவந்தது. பின்னர் கி.பி1966 இல் ஐக்கிய அமெரிக்காவிலும் கொண்டுவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1970 களில் டென்மார்க் மற்றும் நோர்வே நாடுகள் இச் சட்டத்தினை கொண்டு வந்தது. பின்னர் கி.பி 2000 ஆண்டுகளிற்கு பின்னரே 3ம் உலகநாடுகளில் இவ்வகையான உரிமைச்சட்டங்கள் கொண்டுவரப்பட்டது. பாகிஸ்தானில்(2002), இந்தியாவில்(2005), நேபாளத்தில்(2007), பங்களாதேசத்தில்(2009), மாலைதீவு மற்றும் ஆப்கானிஸ்தானில்(2014), இலங்கையில் 2016இல் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 117 நாடுகள் இச்சட்டத்தினை தங்களது அரசியல் அமைப்பில் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும்.

இலங்கையில் தகவலறியும் உரிமைச்சட்டம் தொடர்பிலான வரலாற்றினை நோக்குகையில் இச்சட்டமானது கி.பி 1995 களில் இருந்தே இலங்கை அரசியலில் பேசுபொருளாக பேசப்பட்டு வந்ததுடன் 2004 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் இதற்கான சட்ட மசோதா தயாரிக்கப்பட்டு பாராளுமன்றில் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டது. தொடர்ந்து பின்னரான காலப்பகுதியில் இது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டே சென்றது. இருப்பினும் 2015இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கொண்டுவரப்பட்ட 19வது திருத்தத்தின் மூலம் 2016 ஜுன் 23 இல் இச் சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

அவ்வகையில் தகவல் எனப்படுவது பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்புகள், பத்திரிகை வெளியீடுகள், சுற்றுநிருபனங்கள், கட்டளைகள், சம்பவத்திரட்டுகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், ஒளிப்பதிவுகள், ஒலிநாடாக்கள், இயந்திரம் மூலம் வாசிக்ககூடிய பதிவுகள், கணிணி பதிவுகள் மற்றும் வேறு ஆவணப்பொருட்கள் உள்ளடங்கலாக அதனுடைய பௌதீக வடிவம் ஏதேனும் பிரதி என்பவற்றை உள்ளடக்கிறது. மேலும் இலங்கையில் தகவல் ஒன்றினை அறிந்து கொள்வதற்கான உரிமை இலங்கைவாழ் பிரஜைகள் என்ற ரீதியில் அனைவருக்கும் காணப்படுகின்றது. இங்கு சாதி, மதம், இனம், மொழி, பால்நிலை வர்க்கம் போன்ற எவ்வித வேறுபாடுகளும் பார்க்கப்படுவதில்லை என்பது குறிப்பிட்டதக்கதொரு விடயமாகும்.

இலங்கை பிரஜைகள் பின்வரும் நிறுவனங்களிடம் இருந்து தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் அவையாவன, அரசாங்கத்தின் நிறுவனங்கள், அரசாங்கத்தின் ஒரு அமைச்சு, அரச கூட்டுத்தாபனங்கள், அரச நிணைக்களங்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பாராளுமன்றம் என்பவையாகும். இந்நிறுவனங்களில் காணப்படுகின்ற தகவல் அலுவலர், சிரேஸ்ட தகவல் அலுவலர் இவர்களின் மூலமாக பிரஜைகள் தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவலறியும் உரிமையினைப் பயன்படுத்தி பிரஜை ஒருவர் தகவலொன்றை பெற்றுக் கொள்வதற்கான செயன்முறையை நோக்குவோமாயின் முதல் எமக்கு தகவல் தேவைப்படும் அரச நிறுவனம் தொடர்பிலும் அதன் தகவல் அலுவலகர் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும். பின்னர் அந்த தகவல் அலுவலகருக்கு தகவல் பெற்றுக் கொள்வதற்கான எழுத்து மூல கோரிக்கை ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் .(இது கட்டாயமானதல்ல). பின்னர் இக்கோரிக்கை வழங்கப்பட்டதனை உறுதி செய்யும் வகையில் எழுத்திலான ஏற்பாடு ஒன்றினை மேற்கொள்ள வேண்டும். பின்னர் நாம் கேட்ட தகவலினை அவ் அரச நிறுவனம் 14 அரச வேலை நாட்களுக்குள் குறிப்பிட்ட தகவலை பெற்றுக்கொண்டோமா? என்பதை அவதானிக்க வேண்டும். அவ்வாறு 14 வேலை நாட்களுக்குள் மேற்குறிப்பிட்ட நிறுவனத்தால் எவ்வித அறிவித்தல்களோ, பதிலோ எமக்கு வரவில்லை என்றால் குறிப்பட்ட தகவல் அலுவலகர் மீது எம்மால் மேன்முறையீடு செய்யமுடியும்.

இவ்வுரிமையினைப் பயன்படுத்தி சில தரவுகளைப் பெறுகின்றபோது அவை மறுக்கப்படலாம். இவ்வாறான தரவுகளாவன இலங்கை அரசின் இறைமையையும் அதன் பாதுகாப்பையும் பாதிக்கக்கூடியதாக இருக்கும். தகவல்கள், சர்வதேச உடன்படிக்கைகள் தகவல் வெளிவிடுகையானது நீதிமன்ற அவமதிப்பாக கருதும் சந்தர்ப்பங்களில், இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரதூரமாக இருக்கும் சந்தர்ப்பங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். மேலும் இவ்வாறாக தகவல்களினை அரச நிறுவனங்களிலிருந்து பெறப்படுகின்றபோது அதற்கு கட்டணம் அறவிடப்படுமா? என்ற அச்சம் பிரஜைகளுக்கு இருக்கலாம். தகவலறியும் உரிமை விண்ணப்பப் படிவத்திற்கு கட்டணம் அறவிட முடியாது. எனினும் நாம் கோரும் தகவலினை அவர்கள் வழங்குகின்ற போது அச்சுப்பிரதி எடுத்தல் ருளுடீ, இறுவட்டு போன்ற சேமிப்பு சாதனங்களில் பதிந்து தருகின்ற போது அரச வர்த்தமானியில் உள்ள அறிக்கையின் படியே செயற்படமுடியும். மேலும் தகவல் உரிமை சட்டத்தினால் பின்வரும் சந்தர்ப்பங்களில் குற்றவாளிகள் தண்டிக்கப்படலாம். தகவல் வழங்குவதற்கு வேண்டுமென்றே மறுத்தல், பொய்யான பூரணப்படுத்தாத தகவல்களை வழங்குதல், தகவல்களை இல்லாமல் ஆக்குதல், அதில் மாற்றங்களை செய்தல், தகவலறியும் ஆணைக்குழுவிற்கு சமூகம் அளிப்பதை தவிர்த்தல், மறுத்தலின்போது தகவலறியும் ஆணைக்குழுவிற்கும் அதன் தீர்மானத்திற்கும் கட்டுப்பட மறுக்கும் சந்தர்ப்பத்தில் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தால் வழக்கு விசாரணையின் பின் குற்றவாளிக்கு 50,000 ரூபாவிற்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது 2 வருடங்களிற்கு மேற்படாத சிறை தண்டனையும் அல்லது இரண்டு வருடங்களிற்கு மேற்படாத சிறைத் தண்டனையும் வழங்கப்படலாம்.

அவ்வகையில் மேற்கூறப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பிலான ஓர் விளக்கத்தினை எம்மால் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இலங்கையில் இச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் இதனை கிராமப்புறங்களில் வாழுகின்ற சாதாரண மக்களால் இச்சட்டம் தொடர்பிலான தெளிவுபடுத்தல்கள் இல்லாமையினால் இவ்வுரிமையினை பெறத் தவறுகின்றனர். இருப்பினும் அவ்வுரிமை சட்டம் மூலமாக அரசாங்கம் மற்றும் அதனுடைய நிறுவனங்கள் மக்களுக்கு பொறுப்பு கூற கடமைப்பட்டுள்ளதுடன் பல்வேறுபட்ட மக்கள் இதன் நன்மையினை அடைந்து வருவதனை ஊடகங்கள் மூலமாக காணக்கிடைக்கின்றது. தகவலறியும் சட்டத்தினை கண்காணிக்கவும் முறைப்பாடுகளை மேற்கொள்ளவும் தகவலறியும் ஆணைக்குழு உருவாக்கப்பட்டு இன்றுவரை வெற்றிகரமாக பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**சிவகுமார் சிறீகரன்**
**கலைப்பீடம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்குள் ஒருத்தி

ஒளியால் வீசப்பட்ட நிழல்களின் உலகில்,
நான் தனியாக நிற்கிறேன் - ஒரு தனிப் பார்வை,
என்னுள் ஒருத்தி, ஒரு தனித்துவமான தீப்பொறி,
எல்லையற்ற இருளில் ஒரு கிசுகிசு.

நான் மலைகளில் எதிரொலி - என்றும் அசையாத வேகமான காற்று,
ஒளிரும் ஒரு தனி நட்சத்திரம், - கனவுகளின் பரந்த பரப்பில்.
எனக்குள் ஒருத்தி - ஒரு மௌன அழுகை,
முடிவில்லா வானில் ஒரு கேள்வி - கடலுக்குள் ஒரு துளி,
இன்னும் எனக்குள் உலகங்களை வைத்திருக்கிறேன்.

தனிமையான பாடலின் குறிப்புகள்
நான் தவறாக நடக்கும்போது விரைவான நம்பிக்கை,
எல்லையற்ற, ஆனால் ஆழமான உண்மை,
ஒரு முரண்பாடு - ஒரு உயிருள்ள கவிதை,
என்னுள் ஒருத்தி - இன்னும் எண்ணற்றவள்

ஒரு விரைந்த தருணம், நேரத்தில் சிக்கிக்கொண்டது.
கண்ணாடியில், பிரதிபலிப்புகள் பார்க்கின்றன
ஒவ்வொன்றும் கடந்த காலம், எதிர்காலம்
என் தனிமையில், நான் என் அமைதியைக் காண்கிறேன்



என்னுள் ஒருத்திக்கு இன்னும் தேவையானது,
நான் எனும் ஒருத்தி - எனவே இங்கே நான் நிற்கிறேன்
வாழ்க்கையின் திரையில், நான் நெசவு செய்கிறேன்,
ஒற்றை நூல், நான் வெளியேறத் தேர்வு செய்கிறேன்,
என்னுள் ஒருத்தி - இன்னும் பலரால் காண முடியும்
**நான் மர்மத்தின் முடிவற்ற ஆழம்.**

**பொ.அனுசியா**
**கலைப்பீடம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேய்

ரகசியமாய் கதை பேசி நால்வர் செல்ல
உருவம் ஒன்று ஓடுது என
ஒருவன் சொல்ல-ஓமடா
என மற்றவன் சொல்ல
ஓடுபவனை விழவைத்து ஓடுகின்றான்
ஓணான் உடம்புக் காரன்

சந்திகளில் குந்தியிருந்து ஆலமரத்தில்
ஆடி நின்று
நடுராத்திரியில் நடனமாடி மயானத்தில்
ஓலமிட்டு
நண்பகல் என்று இல்லாமல் நடு ராத்திரியிலும்
நடுங்கவைத்து
ரசிக்கின்றான் இவன்....



உக்கிரமாய் உருவெடுக்கும் சாமியாருக்கும்
பிணம் காவி எரிக்கும் பெரும்யனங்களுக்கும்
பேய் என்றால் பயமாம்
அதனால் மந்திரம் என மனைகளில் ஓதி
கயிறு என கைகளில் கட்டி
வேடிக்கை காட்ட விழிகளில் நான் விழுகிறேனா என
விழுந்து விழுந்து சிரிக்கின்றான்
இவன்.....

மங்கும் நேரம் மர்மமாய்-ஓர்
குரல் கேட்க
காற்றோரம் கரு இருளில்-காதுகளில்
சதங்கை கேட்க
சட்டென சாமியறை ஓடும்
சாமி பக்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் இல்லா நான் உன்னை-வா
என்றா அழைப்பேன் என
வருந்தி வருந்தி அழுகிறான் இவன்......

ஊதி ஊதி ஊர விட்டு துரத்தவும்
அலறி அலறி என்னை அடித்து விரட்டவும்
ஆன்மா என்ற காத்து என்னை
எத்தனை தரம் தான்
ஆணி வைத்து அடிப்பீரகள்
எரிந்த என் உடலில் ஆன்மா
மட்டுமே அநாதை

**-செ.கஜெந்தினி**
**கலைப்பீடம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசபக்தியுள்ள மாந்தர்கள்

தாய்க்கும் நிகரென்பார்
தன் நாடே உயிரென்பார்
ஏய்க்கும் குணமறியார்
எள்ளளவும் கேடெண்ணார்
சேய் போல் மனமுடையார்
சிறுமை தனை நாடார்
ஆய்ந்தால் அவர் பெருமை
அறிதல் நம் கடனே

பேசும் மொழியதனால்
மாந்தரிடையே பேதமவர் காணார்
கூசவே கனல் பறக்கும்
குரோதம் ஆவர் காணார்
ஆசிலா மனிதராக
அன்பின் வழியது செல்வார்
நாச வழிகள் மறுத்து
நன்மையை நாடுவராவரே

தேசம் அவர் பேச்சு
தீண்டாமை அவர் மூச்சு
வேசம் அவர்க்கில்லை
வெறும் கோச மூவர்க்கில்லை
நாச வழியது நாடார்
பேசப் பெரியதவர் எல்லாம்
பீடுபடை மாந்தவரே
நரி வேசமூவர் போடார

இனங்கள் வேறானாலும்
இரத்தம் வேறவர்க்கில்லை
மனங்கள் ஒன்றானாலும்
மதத்தால் பிரிவுகளில்லை
இணங்கும் வழி சொல்வார்
இனியர் அவரென்பேன்
பிணங்கும் மனங்கொண்டால்
பீடை சூழுமென்பார்

தேசபக்திக்கு திலகமெனத்
திகழும் பேசரிய மாந்தர்
நேசமுடன் நெஞ்சம் நினைத்திடும்
அவரைநிதம் வீசுபுகழுண்டு
விண்ணுயரப் புகழ் உண்டு
மாசில்லா மானிடராம்
மாநிலம் மதிக்கும் மாந்தரவர்

**யோ.துகிலினி**
**விவசாய பீடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்ப்புகளில் வனையப்பட்டவள்

ஆர்க்கும் அணிகலனோ ஆரமுத உண்டிகளோ
பார்க்கும் வனப்புகளோ பாரதனின் இலக்கணமோ
யாவுமற்ற பெண்டிரிவர்,
கூவுகின்ற கதை கேளீர்!
பல கைகள் கொண்ட பத்ரகாளி இவள்,
ஏற்காத பாத்திரமில்லை!
கோரிக்கையற்ற அகோரியிவள்,
பிணந்தின்னிக்கழுகுகளால் புணராத நாட்களில்லை!
மரண ஓல மண்டோதரியிவள்,
காரணமே இல்லாமல் அவல ஓசையில் ஐக்கியமாகிறாள்!
பழிசேராப் பாண்டிமாதேவியிவள்,
தப்பே செய்யாது தண்டனை பெறுகிறாள்!
கண்ணுக்குத் தெரிகின்ற கண்ணகியிவள்,
சீர்கெட்ட வாழ்வுடனே சிலம்பேந்தி நிற்கின்றாள்!
தமரறியாத் தமயந்தியிவள்,
கானகத்தே கலைபாதியொடு கலங்கி நிற்கின்றாள்!!
திரிவுபட்ட வாழ்வின் திரௌபதை இவள்,
துகிலுரிந்தே துவேசிக்கப்படுகின்றாள்!!
பொன்னிழைத்த பூவையரைப் புடம்போட்ட காரணிக்கு,
மன்னிழைத்த மனுநீதி மாற்றாங்கு வேறுளதோ??
வந்தனை செய்வோம் இன்றே,
வார்ப்புகளால் வனையப்பட்ட நம் மாதரைக் கண்டிடிலே!



ப.துவராகன்
முகாமைத்துவ பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிதாய் ஓர் வரம் வேண்டும்

அளவு கடந்த ஆசையும் இல்லை
அகிலமே வேண்டும் என்ற
ஆசையும் இல்லை -ஆயினும்
சிறிய நெஞ்சுக்குள் சிறிதாய் ஓர் ஆசை
வண்ணங்கள் சிந்த வேண்டும் - வரட்சிகள்
அங்கில்லை
மாரி பொழிய வேண்டும் - மரங்கள்
தளைக்க வேண்டும்
பட்சிகள் பறக்க வேண்டும் -விலங்குகள்
விளையாட வேண்டும் பனியால் பசுமை வேண்டும் - பணிவான
உள்ளம் வேண்டும்
சாதிகள் சபிக்கப்பட்ட இடமாக வேண்டும் - மனிதம்
தளைத்த தளிர் இடமாக வேண்டும்
பூக்களின் மலர்வும் வண்டுகளின் இசையும் - மனதிற்கு
இனிமை தர வேண்டும்
சீறும் கடலோ சினக்கும் காற்றோ
சீண்டும் மனிதர்களோ - இவை
தூரமாய் உள்ள இடமாக வேண்டும்
வாழும் இடம் தாய்மை நாடாகவும் -தாகம்
தீர்க்கும் தாயாகவும் வேண்டும்
தனிமை இனிமையாகவும் இதை
தாங்கும் எளிய மனமாகவும் மரணம் வரை
அவ் இடம் புனிதமாகவும் வேண்டும்

-செ.கஜேந்தினி
கலைப்பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் நீர்

முன்பு ஒருநாளில்
எதிர்காலம் இழந்து போன
மண்ணின் பிள்ளை நான்
இருப்பிழந்து நிலம் பிரிகையில்
ஏதுமறியா பாலகன் நான்
அகவைகள் கடக்கையில்
அனைத்துமற்ற அகதி வாழ்வில்
வெறுமை பற்றிக் கொண்ட
வேரற்ற மரமாக இருந்தவன்
அத்தனையும் பறித்து
ஆழப்புதைத்துவிட்ட போதிலும்
கல்வியின் கரங்களை மட்டும்
இறுகப்பற்றிக் கொண்டேன்
வருடங்கள் பல கடந்து
தாய்நிலம் மீண்டும் கிடைக்கையில்
கல்வி மட்டுமே உடனிருந்த ஒரே சொத்து
இருளில் மூழ்கி வேரற்றுக் கிடந்த எனக்கு
உரமாய் உயிர் நீராய் ஆனது அது
சிறிது சிறிதாய் வேர்கள் துளிர்த்தன
கிளைகள் செழித்தன
பல்கலைப்பூங்காவில் நானுமோர்
சிறுமரமாகினேன்
என்னைப்போலவே அனைவரும் உயர
என் மண் எங்கும் கல்வியின்
விதைகளைத் தூவுவேன்
அவைகளும் ஏதோவோர்
பல்கலைத்தோட்டத்தில் மரமாகிச்
செழிக்கும்



இ.விதுர்சனன்
விவசாய பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாய நாட்காட்டி...

தன் எதிர்காலம் அறியாமல்

கிழித்து எறியப்படும் இறந்தகாலத்தை

ஏளனம் செய்கிறது

நிகழ்பொழுதொன்று...

வெறுமை நரம்புகள் படர்ந்த

வெள்ளைச் சுவர்களின் சாபமாய்

வெளிறும் வினாடிகளை முற்றுகையிடுகிறது

ஓர் இனம்புரியாப் பதட்டம்...

உள்ளங்கையில் வெடித்து ஓடும்

ரேகைகளால் இடம்பெயர்ந்த

வெண்ணிறக் கல்லின் திசைகளை

தேடி அலைகிறது உயிர்ப்பறவை...


சிரிப்பில் பாதி பிரிவில் மீதியாய்

கரைந்துபோன கணங்களைத் தொலைத்து

வேடிக்கை பார்த்து மகிழ்கிறது

மாய நாட்காட்டி.

**சு.சுடர்ச்செல்வி**
**கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராவின் மாதா

வளைந்தோடும் மகாவலி கங்கையை,
சேலையாய் உடுத்தவளின் மடியிலே
கருணையின் புகலிடத்தை உணர்ந்தாய்,
விழுப்பமும் விருப்பமும் உடைய
குழந்தைகளாய் விளங்கிடவே நாமும்

வானுயர நிற்கும் ஹந்தானை உச்சியில்,
வீசும் தாயின் மூச்சுக்காற்றிலே
பயன்தரும் ஞானத்தை சுவாசித்ததாய்,
ஊக்கமும் உண்மையும் கொண்ட
மக்களாய் ஊர்ந்திடவே நாமும்

பசுமையில் வளரும் மலைநாட்டு மண்ணை,
தன் தேகத்தில் பூசியவளின் கண்களிலே
பிரபஞ்ச அறிவொளியை கண்டதாய்,
ஒழுக்கமும் ஓர்ப்பும் மிக்க
மாணாக்களாய் ஒளிர்ந்திடவே நாமும்,

தெரியட்டும் அன்னையின் பிரதிபலிப்பு பேராவின் நீரருவிகளிலே!
கேட்கட்டும் அன்னையின் கூக்குரல் பேராவின் கட்டிடங்களிலே!
உணரட்டும் அன்னையின் பரிவு பேராவின் தோட்டங்களிலே!

மஞ்சளின் மதிப்பும் சிவப்பின் சிறப்பும் மிக்க
நவபீடங்களை நவமணிகளாய் அணிந்த அன்னையின்
மைந்தர்களாய் !! பேராவின் மைந்தர்களாய் !! திகழ்வோம் !!!

தி.நரேஷ்ஹர்
மருத்துவ பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டெழுந்தவள்

விரல் விட்டு எண்ணும் விண்மீன்களுக்குள்
விளையாட்டாய் போனதே பெண் வாழ்க்கை
காவியங்கள் கண்ணகி பற்றிப் பேசவேண்டியதில்லை
கண் முன்னே நடக்கும் அவலங்கள் ஏராளம்
பேச வார்த்தைகள் போதவில்லையே!
சில்லறை சிரிப்புக்கு சிறுமி என்று பெயர் வைத்தார்கள்
தாலாட்டுப் பாடுகையில் தாய்மை என பெயர் வைத்தார்கள்
கணவனை இழந்த கணப்பொழுது விதவை என்றார்கள்
தாராள மனம் படைத்தவர்கள் பெயர்களைக் கொண்டே சிறைப்படுத்தினர்
பெண்மை என்றவள் சாதாரணமானவளில்லை, சரித்திரம் படைத்தவள்
காலங்களும் காவியங்களும் மாறினாலும் மனிதா நீ நினையாதவரை
சிற்பம் கூட சிறுகல் தான், உன் அறியாமைப் பார்வையில்
அறிவியலின் கல்பனா சௌளலாவை பற்றிப் பேசுவதோ
அன்பு உலகில் அன்னை தெரேசா பற்றி வாழ்த்துவதோ
தமிழமுதம் அள்ளித்தந்த ஔவையாரைப் பற்றி பேசுவதோ
இந்திய விடுதலைப் போராட்டத்தில் வேலுநாச்சியார் பற்றி பேசுவதோ
பெண்மை என்பவள் பேரதிசயமே அவளைப் பற்றி அவள் உணர்ந்த கணமே
உடல்வலிமையில் ஆணென்றால், உளவலிமையில் பெண்ணே...ஐயமில்லை
கீழ் நோக்கி எறியப்பட்ட விதைகளே விருட்சங்களாகும்
ஒதுக்கப்பட்ட பெண்ணால் தான் உயர்வடையும் இந்த உலகம்
பெண்மையை இழிவென்று நினையாது இனிதென்று சங்கே முழங்கு...



- ந.விதுர்ஷன்
கலைப்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயம்

மண்ணோடு தினம் பேசி

நீர் செல்லும் வாய்க்காலில் காலை வீசி

நெடும் வயலில் பாத்தி கட்டி

மணம் வீசும் எருவின் சாணம் பூசி

சேற்றோடு புரண்டாடி மற்றும் சதுராடி

அகலமான நிலத்தினிலே

அழகாக நாற்று பரவி

அருமையாக வளரும் போது

அளவான நீரைக் கட்டி

நீண்ட நாட்கள் காத்திருந்து

நெல் வரப்பில் தூங்கி எழுந்து

மதிப்பான விளைச்சல் வேண்டி

மாரியம்மனுக்கு பொங்கலிட்டு

மந்தக்கரையில் களமிட்டு

மடங்கல் நெல்லை அறுத்து வந்து

மலைபோல் குவித்த நெல்லை - விற்க

மண்டிக்கு எடுத்துச் சென்றால் - எங்களை

மரியாதை குறைவாக ஏசிக் கொண்டு

ஈன விலைக்கு நெல்லைக் கேட்கும்

பணம் படைத்த வீணர் என்று வீழ்வாரோ!


நிலத்தை உழுது செய்வதல்ல விவசாயம்

கதிரும் மழையும் காற்றும் பணியும்

சிதைக்கும் நாளை கணித்துச் செய்யும்

மகத்துவ அறிவியலே

அருமையான விவசாயம்



கே.தனுசன்

விவசாய பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்து

வெண்மை நிலத்தில்

எழுத்தாய் விதைத்த விதைகள்

வரியாய் வாலிபம் கண்டு

வார்த்தைகளாய் இணை சேர்த்து

கருத்தாய் கருவாகி

படைப்பாய் பிரசவித்து

பயனாய் வளைந்து

பேசு பொருளாகி

மக்கி மறைந்தும் போய்விடுகிறது



யோ.ஜெயராஜ்
விஞ்ஞான பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜன்னலோரம்

ஜன்னலோரம்..........

ஆறேழு மணிநேர பயணத்தில்

பேருந்தில் ஏறியவுடன்

என் கண்கள் தேடும் முதல் இடம்.....

ஜன்னலோரம் - இது

இயற்கை விந்தைகளை காட்டும்

ஓரளவு பெரிய துவாரம்

பயணத்திசைக்கு எதிர்த்திசையில்

போட்டிக்கு ஓடும் மரங்கள்

நிமிடத்திற்கு நிமிடம் ஊர் பெயர் மாறும்

திரையில் காட்சி தோன்றி மறைவது போல்

கணங்களில் காட்சி மாறும்......

முன்புறம் கிழிக்கப்பட்ட காற்று

ஜன்னலோரம் உரச

பல எண்ணங்களோடு

என் மனமும் பறக்கும்

தூங்காமல் நான் கண்ட கனவுகளையும்

ஆசைகளையும் ஜன்னலோரத்தில்

காற்றின் தாலாட்டில்

எனக்குள்ளே நினைத்து , எனை மறந்து

நான் எங்கெங்கேயோ சென்று விடுவேன்

அருகிருந்து அணைக்க யாருமில்லாது

ஊர்விட்டு ஊர் நகரும் எனக்கு

மனக்கவலைகளை – சில மணிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடக்கி வைத்துவிடும்

ஜன்னலோரமும் - எனக்கு

இன்னொரு தாய்மடிதான்.............

யோ.அனோபா
விஞ்ஞானப்பீடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

வாழ்பவன் வாழ்ந்திட வாழ்ந்து முடித்தவன் வீழ்ந்திட
வாழப்போறவன் எதிர்பார்த்து நிற்க.....
வாழ்க்கை என் காதில் சொன்னது
வாழ்வை வாழ்வதற்கே படைத்தான் இறைவன்
ஆனால் பயனற்றுப் போகுதடா ....
பொறுப்பற்ற மனிதனின் பேராசையால்

காற்றடைத்த பையில் தினம் காயம் எதற்கெடா?
காணாமல் போகும் காயத்தில்
காரணமின்றி கோபம் எதற்கெடா?
வாழ்ந்தவன் வாழ்த்திச் சென்றான் வாழ்வின் இரகசியங்களை.....
வீழ்ந்தவன் விட்டுச்சென்றான் வீர வடுக்களை....



அனுபவித்தவன் அசைபோடும் இசையம் இதோ!
அனுபவிக்க நினைப்பவன் அலையும் சத்தமும் இதோ!
காண்பவன் கண்ணிற்கு காணமும் இதோ!
விட்டவன் தொட்டதில்லை தொட்டவன் விட்டதில்லை
பெற்றதும் கற்றதும் பயனின்றிப் போகும்
பாழாய்ப்போன மதியின்றிப் போனால்

வாழ்வில் வேம் வீண்பொறாமை கோபம் பாவலோகம்
காதல் பாசம் நட்பு அறிவு பாவநாசம்
வாழ்வின் கொஞ்ச அர்த்தம் தேடு!
பிறந்தவன் எல்லாம் வாழ்ந்ததும் இல்லை
வாழ்ந்தவன் எல்லாம் இறந்தவனும் இல்லை
வாழ்ந்துபார் மானிடா வாழ்வின் அர்த்தம் புரிவாய்!

-கே.உஷா
கலைப்பீடம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொறுமை

ஓ!பொறுமை உன்

வாழ்வை உயர்த்தும்,

வாய்மை காக்கும்,

சிகரம் தொட வைக்கும்.

குன்றிலிட்ட தீபமாய்

நின்று ஒளி வீசும்- பொறுமை!

நன்று என்று நால்வர்

நவிலும் மிகப் பொறுமை

நாவடக்கம் நற்செயல்கள்

அறிவு,ஊக்கம்,கல்வி

நட்பு,மானம் இத்தனைக்கும்

நடுவுநிலை காத்துநிற்கும் பொறுமை

பொறுமையின்றேல் வறுமை

பொறுமையின்றேல் சிறுமை

பெருமை பெற வாழ்வில்

பொறுமை கொள்வாய் நீயும்!




**-கெ.பிரம்மிகா**
**விவசாய பீடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சைபெருங்கோயில்

பல நூறு தசாப்தங்கள்
முடியா தொடர்கதையாய்
எத்தனை அழகு
எத்தனை ரம்மியம்
எத்தனை பிரமாண்டம்
அப்பப்பா..........
எத்தனை எத்தனை சிற்பங்கள்
இதுவெல்லாம் என் முப்பாட்டனின்
சொல்லணா கலையாற்றல்
என மொழிகையில்
ஏனோ என்னுள் பிறக்கிறது
புதிதாய் ஒரு வீரம்
பைசா என்கிறார்கள்
ஈபிள் என்கிறார்கள்
எம்மாத்திரம் இவையெல்லாம்
தலைகுனியாச் சிம்மமாய்
சகாப்தம் தனை கடந்தும்-என்
தாய்த் தமிழின் வீர மகன்
இராஜராஜன் செதுக்கிய
வெற்றியின் சின்னம்
மண்ணாண்டவன் மண்ணினுள்
புகுந்த கதைகள் பல
நிதர்சனமே என்றாலும்
விண்ணுறை இறையோனே
பொறை கொள்ளும் கலைநயத்தை
என்னவென்று நான் சொல்ல?



கிருஷ்ணா ஸ்ரீதரன்
கலைப்பீடம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாதர் பெருமை.



கருவறை கூட்டினுள் உயிர் கொடுத்து,
கருணையில் மார்பினில் ஊண் கொடுத்தாள்.
அன்னையே அன்பின் அகரம் என,
அகிலம் எங்கும் அறியச் செய்தாள்.
கூரையால் கூடொன்று அமையச் செய்து
காதலால் கதவுதனை மூடச் செய்தாள்.
கவிதைகள், கலைகள் ஊறச்செய்து
மானுடம் என்றொன்றை ஓங்கச் செய்தாள்.

இராமனை கண்களால் கைது செய்தாள்,
இராவணனை கூட தோற்கச் செய்தாள்,
சரித்திரம் முற்றும் தோன்றச் செய்தாள்
சாதனை செய்யும் வீர மங்கை....

சாதம் படைப்பதும் பெண்ணினமே..
சாமிகள் படைப்பதும் பெண்ணினமே..
சமதளம் தரணியில் கிடைத்து விட்டால்,
சரித்திரம் செய்வதும் பெண்ணினமே..
பூக்கள் பூமியில் இல்லை என்றால்,
பூச்சிக்கு இங்கு வேலை இல்லை.
மாதர் மண்ணில் இல்லை என்றால்,
மானுடம் என்றொன்று இல்லை.. இல்லை..

நா.அனந்தசாகரன்
பொறியியல்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடியோன்

வரலாற்றுப் பிழைகளை வைத்து
வயிறு வளர்க்கவில்லை,
கதாகாலட்சேபம் செய்தேன்.
நந்தனாய் உருகினேன்.
அரைகண்ட உத்தரவு அங்கு,
என்செய்ய எங்கெங்கோ, ஓடினேன்.
அக்கினி மூண்டுவிட்டதே ஐயகோ!!
மெலிய சிறகு, சிறிய சிறகு
எங்கனம் பிழைப்பது என அங்கலாய்க்கும்
அற்ப்பங்கள் ஏதறியும்
அக்கினி குஞ்சுகள் பற்றி
யாசகம் கேட்கும் வாமனங்கள்
ரட்சகன் நெடியோனை ஏதறியும்
மூன்றடி உருவங்கள், வாமனங்கள்
உலகளந்த நெடியோனை ஏதறியும்
ஏதறியும் அல்ல
வாமனங்கள் எல்லாம் எல்லாம் அறியும்
விஸ்வரூபிக்க மட்டும் வழி அறியா..........
நாளும் பொழுதும் ஓங்கி ஓங்கி வளர்ந்து
என் சிந்தை நிறைத்து
உயிராயும் உணர்வாயும் என்னுள்
நானாகி, எனை ஆட்கொண்ட
நெடியோனை நானறிவேன்.
நெடியோன் வாமனம் பூண்டாலே
அன்றி உலகு தழைக்கவழியேது
இராமனுக்கு அணிலாகத்தான் முடிந்தது
அதனாலே இப்பெருவாழ்வு
நெடியோனின் பாதங்களில் சமர்ப்பணம்



**வாசுகி விஜயதாஸ்**
**கலைப் பீடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு ஆன்மாவின் அலறல்

யார் அது?......

இந்த இருட்டான பாதையில் என்னை

அதீத வேகத்துடன் இழுத்துக்கொண்டு செல்வது

ஆ,இல்லை...

எவரும் இழுத்துக்கொண்டு செல்லவில்லை

காற்றில் மிதக்க வேண்டும் என்ற அவா

தற்போது நிறைவேறியது போன்ற உணர்வு

ஆனால் ஒரு சங்கடமான நிலையிலா!

கட்டிலில் என்னைப் போன்ற ஒருவரைக் காண்கின்றேன்

வைத்தியர் முகத்தில் ஏமாற்றம்

தாதியர் முகத்தில் பரிதாபம்

வெளியே செல்லும் அவர்களை காற்றில் மிதந்தவாறு

பின்தொடர்கின்றேன்

என்ன இது? விபரம் விளங்கவில்லை

எனது குடும்பம் வெளியில் ஏக்கத்துடன்

குழப்பம் நீங்கியது

மரணம் எனும் அடைமொழியுடன் எனது பெயரா?!

கதறி அழ முயற்சிக்கின்றேன்,

என்ன பயன் முடியவில்லை

ஏன் நான் என்ற கேள்வி எழுகிறது

பக்கத்து அறையில் பிழைக்கவும் முடியாமல்

இறக்கவும் முடியாமல் உள்ள

அந்த செல்வந்த வயோதிபருக்கு ஏன் இல்லை?

வீதி விதிகளை பின்பற்றாது சென்று விபத்துக்குள்ளான

அந்த இளைஞனுக்கு ஏன் இல்லை?

தாயைத் தவறவிட்டு ஊனமாகப் பிறந்துள்ள

அந்த குழந்தைக்கு ஏன் இல்லை?

கடந்து செல்பவர்கள் முகத்தை சுழித்தும்,

மூக்கை மூடியும் அருவருக்கப்படும்

அந்த நாய்க்கு ஏன் இல்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகை இழந்து தனிமையிலுள்ள
அந்த பறவைக்கு ஏன் இல்லை?
வஞ்சனை செய்தானோ இறைவன்
புலம்புகின்றேன்
சினம் கொள்கின்றேன்
கவலைகொள்கின்றேன்
இனி எப்போது எனது மறு ஜனனம்?

**ரா.லக்ஷாயினி**
**விஞ்ஞான பீடம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு அதிசயமே

கடல் இருப்பதற்காக ஓடை வற்ற வேண்டுமா என்ன!?
முத்துள்ள சிப்பி அழிப்பதா
பாசமுள்ள பட்டி தனை அழிப்பதா
சிற்றொளி விண்மீனை அழிப்பதா
வானவிலிலுள்ள நீர்க்குமிழியைத்தான் அழிப்பதா
கடல் இருப்பதற்காக ஓடை வற்ற வேண்டுமா என்ன!?
மழை தருவது என்னவோ தாழ் மேகங்கள் தான்!



**ச.கர்ஷனா**
**கலைப்பீடம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணம்

கண்மூடி கண் விழிக்கிறேன்
பிறந்த பிறப்பும் நிலையானதல்ல
இறக்கப்போகும் நொடியும் நிலையானதல்ல
இதற்கிடையில் நிகழும் விம்ப நிழலாய்
என்வாழ்க்கை அமையும் என்பதில் ஐயமில்லை

பிறப்பு சம்பவமாய் இருந்தாலும்
இறப்பு சரித்திரமாக இருக்க
உள்ளத்திலே முழங்கும் என் குரல்
வெளி உலகத்தில் எதிரொலிக்க,


ச. லினோஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணி மேல் என்றும் தமிழ்

தமிழின் உயிர் 'அ' கரம்
தரணியின் உதிரம் தமிழ்
எழுத்துக்களோ மூன்று
ஆழ்பவையோ மூவுலகம்



கலம் இன்றி அமையாது உடல்
தமிழ் இன்றி அமையாது உலகு
காலம் எல்லாம் பாடுக உன் புகழ்
தமிழை என்றும் அடையாது இகழ்

தொப்புள் கொடி உதிர்ந்தாலும்
குறைவதில்லை தாயின் பாசம்
தொலைதூரம் சிதறினாலும்
மறைவதில்லை தமிழின் வாசம்

பொன் கிரணங்கள் மறையும் கருமையில்
மின்னும் தாரகைகள் மறையா செம்மையில்
பணத்தால் புதையும் சீமைகள்
குணத்தால் அழியாது தமிழனின் பெருமைகள்

தரணி மேல் என்றும் தமிழ்..

ச.தரணிகா
விவசாய பீடம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரட்சியில் வாடிய மனித உள்ளங்கள்

உதிரத்தை உறிஞ்சுகின்ற உதய காலத்தில்
மனித உறவுகள் உணர்வுகள் சிற்பமாகி மௌனம் காக்கின்றன...
உடல்களெல்லாம் வடிக்கின்ற வியர்வை
உணர்வுகள் உதயமாகிறது
நாவின் வறட்சி கண்டு

அன்று தோள் கொடுத்து தட்டி கொடுத்த
மனித இதயங்கள் இன்று மனம் இல்லாமல்
தள்ளி விடுகின்றன
நெற் கதிரும் தலையாட்ட கரும்பும் காலாட்ட
காணவரும் உழவர் மனம் பெருக்கெடுத்து
உவகை உற்றாகும்....
புன்னகைத்து சிலிர்க்கும் காற்றின் வருடலில்
வார்த்தைகள் கவிபாடி அழகு களைகின்றது.....

ஈற்று பொழுதினில் இன்முகமாய் இருந்த உள்ளங்கள்
இன்று அழுவதற்கு கூட கண்ணீரில் நீரில்லை....
வறுமையில் துடிக்கும் வாடிய பயிர்கள்
வாரியணைக்க வருவாயோ வான்மழையே
வாரி கொடுத்த விளைநிலங்கள் இன்று வறட்சியால்
வருந்தி கண்ணீர் சிந்தும் மொழியை பார்

வறண்ட நிலத்தின் வெடிப்புகள்
தண்ணீர் கேட்டு தவம் கிடப்பதேனோ....
வானம் பார்த்து வருடி போனது இதயங்கள்
மனம் அழுதது அந்த அவலநிலை பார்த்து...

மாறி மாறி வருகின்ற வரட்சியும்
தேறி வர முடியாமல் தேம்பும் மனிதனும்
போலியானது பொய்யானது இவ்வுலக


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையென்றே
உறவுகள் சில்லறையாய் இன்று
சிதறிப் போயின...

வீட்டத்து முற்றமெல்லாம் உரையாட
உறவில்லாமல் அவதிப்படுகின்றன....
காலத்தின் சாயலில் அனைத்தும்
இனிதாகும்
வறட்சி எனும் வறுமையை மழை வந்து
நீராட்டும் அந்நாள் வெகு
தொலைவில் இல்லை.......

ந.விதுர்ஷன்
கலைப்பீடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதி எங்கே ?

நித்தம் நான் துயில் எழுந்து
நிம்மதியை தேடுகின்றேன்
கண்ணிலே காணவில்லை
கண்டவர்கள் சொல்லுங்களே!

நிலையில்லா வாழ்வு வந்து
நித்தம் என்னை துன்புறுத்த
நிகழ்வது தான் என்ன - என்று
நிலை கெட்டு நான் தவிக்க
நிம்மதியை தேடுகின்றேன்
கண்டவர்கள் சொல்லுங்களே!



ஓலை குடிசையிலே ஊமை
நான் உயிர் வாழ
ஒரு வயிற்று கஞ்சிக்காக
கடன் பட்ட இவ்வேலை
கடனை அடைத்து விட
ஆயிரம் அடிப்பட்டு - நிம்மதியாய்
படுத்துறங்க எனக்கேது
நேரம் ஒன்று - இருந்தும்
என் வாழ்வு ஓடிக் கொண்டிருக்கின்றது
நிம்மதியைத் தேடி...
கண்டவர்கள் சொல்லுங்களே!

இன்பமாய் அமைந்து விடாதா?
எதிர்காலம்.... என்று
ஏக்கத்தோடு காத்திருக்கின்றேன்
நிம்மதியை தேடி...
கண்டவர்கள் சொல்லுங்களே!

க.பத்மினி
கலைப்பீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரங்கள்... 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.கவிதா

மருத்துவ பீடம்



இமானா நௌஷாட்

இணைந்தசுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்



அ.அசுவத்தா

விஞ்ஞான பீடம்



சு.பிரியா

விவசாய பீடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.அசுவத்தா

விஞ்ஞான பீடம்



உ.கேதுசன்

கலைப் பீடம்



ஸ்ரீ.லக்ஷாயினி

விஞ்ஞான பீடம்



யே. றியானி

விஞ்ஞானப்பீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




C.லினோஷா




பி.நவசௌமியா

விஞ்ஞானப்பீடம்



இ.துவாரகன்

விவசாய பீடம்



S.சாகித்யா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சி.டினோஜா

கலைப்பீடம்

ர.தனுஜன்

கலைப்பீடம்



அ.தினமலர்

கலைப்பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சு.பிரியா

விவசாய பீடம்



சு.பிரியா

விவசாய பீடம்



இமானா நௌஷாட்

இணைந்தசுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மைச் செருகேடு-2024

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















முடிவிலியிது...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**இதழ் 01 – 27.06.2021**




**இதழ் 02 – 15.09.2022**




**இதழ் 03 – 25.07.2023**




**இதழ் 04 – 02.10.2024**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து...

மொட்டவிழ் மலரில் வாசனை மல்கும். மொட்டுக்களே இங்கு வாசனை பேசும் போது நாளை விடியல் பூக்கும் தருணங்களில் எத்தனை மணம் பேசும். மொட்டின் இணையான மாணவர்களின் இன்றைய எழுத்து வாசனையெல்லாம் அவர்கள் மலரும் வேளையில் இன்னும் பரந்து படர்ந்து தமிழ் பேச வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு நறுமுகை இதழானது புதுமுக மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் இவ்விதழானது மூன்றோடு ஒன்றாய் நான்காவது முறையாக இதழ் விரித்து இம்முறை மலர்ந்துள்ளது. புதுமுக மாணவர்களின் எழுத்துருக்கள், கிறுக்கல்கள், படைப்புக்கள், கவிகள் என கனதியான ஆக்கங்களைச் சுமந்து புதிய முகங்களுக்கு அடையாளம் கொடுத்துள்ளது.

நறுமுகையானது மொட்டவிழ்ந்திடத் துணைப்புரிந்த பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், கல்விசார் ஊழியர்கள் மற்றும் ஆக்கங்களைத் தந்துதவிய எம் சகோதர சகோதரிகள் உள்ளிட்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதழாக்கக்குழு**
**தமிழ்ச் சங்கம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றை நாட்டான் வேரறுக்க
வந்திருக்க, தமிழ்ச் சங்கமென்ற
வேள்வியொன்றெழுப்பி காத்து,
இன்றுவரை பூத்து நிற்கும்
மொழி எமது செம்மொழி...
தமிழியம் தரமுயர
உள்ளக்கமலத்தை உத்தம
இடத்தில் வைத்து அற்புதப்
பணிபுரிந்த அன்றைய
ஆன்றோரின் வழிதழுவி,
98 ஆவது செயற்குழு
தமிழுணர்வுடன் தலைநிமிர்த்தி
செய்யும் தமிழ்ப்பணிகளின்
தரவுக்கோவை...
தென்னிந்திய சினிமாவினுடைய
மிகப்பெரிய ஆதிக்கத்தின் கீழ்
அதுவொன்று மட்டுமே
தமிழென்றெண்ணி, ஆடலும்
பாடலுமாய் அவனியுருள
தேடலும் ஓடலுமாய் தமிழின்
முடிவைத்த முகமேட்டில்
பொட்டிட்டு தமிழின் பாரம்பரிய
கலைகளை மீண்டும் பாருக்கு
அறிவித்து சங்கத்தின் பணி
நாடெங்கும் பவனி வரச்செய்யும்
அழகிய நினைவுகளோடு
ஆவணக்கதைகளை
காதுகளோரம் சொல்லிச்
செல்லுகின்றது எங்களுடைய
நறுமுகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org